REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜுலை 29 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 179 | Monday 29, July, 2024 | 16பக்கங்கள் | 50/-




06

## IMF, கடன் வழங்கும் நாடுகளின் நிதியுதவிகள் அவசியம்

# கடன் உதவிகள் நிறுத்தப்பட்டால் நாடு மீண்டும் வரிசை யுகத்துக்கே செல்லும்



## வெறுமனே பொய்களை கூறி மக்களை ஏமாற்ற முடியாது என்கிறார் ஜனாதிபதி ரணில்



### ஆட்சிக்கு யார் வந்தாலும் கடன் வழங்குவோரின் நிபந்தனைகளை ஏற்றே செயற்பட வேண்டும்

யார் ஆட்சிக்கு வந்தாலும் கடன் வழங்கும் நாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் (27) காலியில் தெரிவித்தார்.

ஏதாவது ஒரு காரணத்திற்காக நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கப் படும் பணம் நிறுத்தப்பட்டால், மீண்டும் வரிசை யுகத்திற்கே நாடு செல்லும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.பொய்களால் மக்களை ஏமாற்ற முடியாது என தெரிவித்த ஜனாதிபதி, வேறு தெரிவுகள் இல்லாததால், கஷ்டங்களை அனுபவித்தே இந்தப் பயணத்தை இன்னும் கொஞ்சம் முன்னே கொண்டு செல்ல வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இளைஞர்களின் எதிர்காலம் குறித்து கேட்கும் உரிமையை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, நல்லதொரு நாட்டை அவர்க ளுக்கு கட்டியெழுப்புவது தனது கடமை எனவும் தெரிவித்தார். காலி நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (27) இடம்பெற்ற "இணைந்து வெல்வோம்" பேரணியில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது: காலி எனக்கு சிறப்பு. இன்று ஒரு விசேட விடயத்தை தெரிவிக்க இந்த ஊருக்கு வந்துள்ளேன். ஜனாதிபதி தேர்தலில் நான்,

06

# சபாநாயகர், பிரதம நீதியரசருடன் இணைந்து IGP விடயத்துக்கு தீர்வு

## ஜனாதிபதி தேர்தலை உரிய தினத்தில் நடத்த ஒத்துழைப்பு

### ஹோமாகமவில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

பொலிஸ் மா அதிபர் தொடர்பில் எழுந்துள்ள சிக்கல்களுக்கு சபாநாயகர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவித்துள்ளார். இவ்விருவரையும் நேற்று முற்பகல் தனித்தனியாக தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். பொலிஸ் மா அதிபரின் சிக்கல் எவ்வாறு இருந்த போதிலும் எதிர்வரும் செப்டெம்பர் 21இல், நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு தமது ஒத்துழைப்பை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள் ளார்.

ஹோமாகம கூட்டத்தில் ஜனாதிபதியின் உரை 06ஆம் பக்கத்தில்

# இயற்கை அனர்த்தம்: கடமைக்கு சமுகமளிக்காதோருக்கு விடுமுறை

## அரசாங்கம் சுற்று நிருபம் வெளியீடு

லோரன்ஸ் செல்வநாயகம்

வெள்ளம், மண் சரிவு மற்றும் வீதிகள் பாதிப்பு காரணமாக கடந்த மே மற்றும் ஜூன் மாதங்களில் கடமைக்கு சமுகமளிக்காத அரசாங்க ஊழியர்களுக்கு, விசேட விடுமுறையை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந்த வகையில் கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், குருநாகல், பொலனறுவை, கேகாலை, மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் வெள்ளம் மண் சரிவு மற்றும் வீதிகள் பாதிப்படைந்ததன் காரணமாக கடமைக்கு சமுகமளிக்காத அரசாங்க ஊழியர்களுக்கே, இந்த விசேட விடுமுறையை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும்

06

# தேர்தல்கால செயற்பாடுகளை விளக்கி விரைவில் சுற்றறிக்கை

## அரச நிறுவனங்கள், அதிகாரிகளை வழிகாட்ட செயற்பாடு

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் காலப் பகுதியில் அரச நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளின் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டுமென்ற சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது. இது தொடர்பில் தீர்மானித்துள்ள தேர்தல் ஆணைக்குழு

06

# மியன்மார் பிரதமருடன் பாதுகாப்பு செயலர் பேச்சு

## இலங்கையரை விடுவிக்கவும் கோரிக்கை



ஸாதிக் ஷிஹான்

மியன்மாருக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன, அந்நாட்டின் பிரதமரும் சிரேஷ்ட ஜெனரலுமான மின் ஆங்ஹ்லைங்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். மியன்மார் பிரதமர் அலுவலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது.

மியன்மாரில் நடைபெற்று வரும் பிம்ஸ்டெக்கின் (BIMSTEC) தேசிய பாதுகாப்பு பிரதானிகளின் நான்காவது மாநாட்டில் கலந்து கொண்ட

06

# அமைச்சர் பந்துல குணவர்தனவின் அரசியல் தீர்மானம் இன்று அறிவிப்பு



ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை இன்று (29) பிற்பகல் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் மேற்கொள்ளும் தீர்மானத்தின் அடிப்படையில், தனது அரசியல் தீர்மானத்தை இன்று மாலை 5.30 மணியளவில் ஹோமாகமவில் அறிவிப்பதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சிரேஷ்ட அமைச்சரவை அமைச்சரான தமக்கு அறிவிக்காமல், ஹோமாகம

06

# 1250 முன்னணி பாடசாலைகள் நட்பு பாடசாலைகளாக அபிவிருத்தி

## அடுத்த சில மாதங்களில் நடவடிக்கை



நாட்டிலுள்ள 1,250 முன்னணிப் பாடசாலைகள் வெகு விரைவில் நட்புப் பாடசாலைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டு கல்வி அமைச்சால் நேரடியாக நிர்வகிக்கப் படுமென, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். இத்திட்டத்திற்காக சீன அரசாங்கத்திடமிருந்து 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதி பெறப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் தரம் 5 வரையிலான அனைத்து வகுப்பறைகளையும்

06

# ஜனாதிபதி வேட்பாளர் குறித்து பொதுஜன பெரமுன இன்று முடிவு

## மஹிந்த தலைமையில் விசேட கூட்டம்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் தொடர்பில் பொதுஜன பெரமுன இன்று (29) அறிவிக்குமென, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார். இது தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி, கட்சியின் செயற்குழு இன்று கூடி இதற்கான தீர்மானத்தை மேற்கொள்ளும் என்று அவர் தெரிவித்துள்ளார். பொது ஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டு விட்டதா?

06

# ஜனாதிபதி பதவியிலிருந்து ரணில் வெளியேறினால் நாடு நரகமாகிவிடும்



## நவ ஜனதா கட்சியின் தலைவர் சுகீஸ்வர பண்டார தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சரியான வியூகங்களும் அரசியல் ஞானமுமே நாட்டின் பொருளாதாரத்தையும் சமூகத்தையும் பேரழிவிலிருந்து மீட்டெடுத்து ஸ்திரப்படுத்தியது. இப்பதவியில் தொடராமல் ரணில் வெளியேறினால் நாடு நரகமாக மாறிவிடும் என்றும் நவ ஜனதா கட்சியின் தலைவர் சுகீஸ்வர பண்டார தெரிவித்துள்ளார். இதுபற்றி

06

# சுற்றுலா செல்வதற்கான சிறந்த நாடாக இலங்கை

## ஃபோர்ப்ஸ் நாளிதழ் அறிக்கை

சுற்றுலா செல்வதற்கான சிறந்த முதல் மூன்று நாடுகளுள் இலங்கையும் சேர்க்கப்பட்டுள்ளது.

ஃபோர்ப்ஸ் நாளிதழின்படி, 2024 கோடைக்கால சுற்றுலா செல்வதற்கான நாடுகளாக கிரீஸ், மொரிஸ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் உலகின் சிறந்த சுற்றுலா இடங்களாக பெயரிடப்பட்டுள்ளன.

இலங்கை மேடு பள்ளங்களுடன் மற்றும் கண்கவர் கடற்கரைகளுடன் காணப்படக்கூடிய தீவாக உள்ளதுடன் ஒப்பீட்டளவில் பாலி நாட்டைப் போன்ற ஈர்ப்பைக் கொண்டுள்ளதாகவும் அந்த நாளிதழ் தெரிவித்துள்ளது.

06

# தேர்தல் சட்டங்களை பாதுகாக்குமாறு கோரிக்கை

தேர்தலுக்கு முன்னதான காலப்பகுதியில் தேர்தல் சட்டத்தைப் பாதுகாப்பது ஒவ்வொரு அரசியல் கட்சி மற்றும் வேட்பாளர்களின் பொறுப்பாகும் என PAFFRAL அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரங்களின்போது சுற்றாடல் பாதுகாப்பையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் 21 ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

06

# முன்பதிவு செய்தோருக்கு மட்டுமே கடவுச்சீட்டு




கடவுச்சீட்டுக்கு முன் பதிவு செய்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இந்த அறிவுறுத்தலை மீறி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு வருவதை தவிர்க்குமாறும் அந்த அறிவுறுத்தலில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் பாதுகாப்பான புதிய இணையவழி மூலம் கடவுச்சீட்டுக்களை

06

# ஐக்கிய மக்கள் சக்தியுடன் சுதந்திரக் கட்சி ஒன்றிணையாது

## கட்சியின் செயலாளர் தயாசிறி உறுதியாகத் தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையும் என முன்னெடுக்கப்படும் பிரசாரங்கள் உண்மைக்குப் புறம்பானவை என, சுதந்திரக் கட்சியின் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். தாம், உட்பட தமது தரப்பினர் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைய தயாராகி வருவதாக முன்னாள் ஜனாதிபதி

06

# சவால்களைக் கண்டு நான் ஒருபோதும் ஓடுவதில்லை: நாடு வீழ்ந்தால், சவாலை ஏற்பதற்கு ஆட்கள் இல்லை

யார் ஆட்சிக்கு வந்தாலும் கடன் வழங்கும் நாடுகள் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் (27) காலியில் தெரிவித்தார்.

ஏதாவது ஒரு காரணத்திற்காக நாட்டுக்கு பெற்றுக்கொடுக்கப்படும் பணம் நிறுத்தப்பட்டால் நாடு மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்லும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே பொய்யினால் மக்களை ஏமாற்ற முடியாது எனத் தெரிவித்த ஜனாதிபதி, வேறு தெரிவுகள் இல்லாததால், கஷ்டங்களை அனுபவித்தே இந்தப் பயணத்தை இன்னும் கொஞ்சம் முன்னே கொண்டு செல்ல வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

இளைஞர்களின் எதிர்காலம் குறித்து கேட்கும் உரிமையை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அவர்களுக்கு நல்லதொரு நாட்டைக் கட்டியெழுப்புவது தனது கடமை எனவும் தெரிவித்தார்.

காலி நகர மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (27) இடம்பெற்ற 'எக்வ ஜெயகமு' பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடு வீழ்ந்தால், சவாலை ஏற்க ஆட்கள் இல்லை. எனவே இந்த கடினமான பயணத்தை மேற்கொள்வோம். விருப்பம் இல்லை. பொய் யுகம் முடிவுக்கு வர வேண்டும்.

நான் இளைஞர்களைப் பற்றி நினைக்கிறேன். அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும். நாட்டின் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க முடியாது. பொய்யால் நாடு வீழ்ந்தது. 2048 இற்குள் நாட்டின் பொருளாதாரம் சீராகும் என்று நான் கூறியபோது எதிர்க்கட்சியினர்

இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க உரையாற்றுகையில், " சஜித் பிரேமதாசவும், அனுரவும் பகலில் ஒன்றையும் இரவில் ஒன்றையும் பேசுகின்றனர். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அனுபவத்தைக் கொண்டு நாட்டை சுமூகமான நிலைமைக்கு திருப்பினார். சில எம்.பிக்கள் வருடாந்தம் கட்சி தாவுகின்றனர்" என்று தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே உரையாற்றுகையில், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்



## காலி நகரமண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'எக்வ ஜெயகமு' பேரணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:

காலி எனக்கு சிறப்பு. இன்று ஒரு விசேஷ விஷயத்தை தெரிவிக்க இந்த ஊருக்கு வந்துள்ளேன். நான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகிறேன். இந்த முடிவை எடுப்பதற்கு முன் யோசித்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, நான் அதைப் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டியிருந்தது. அப்போது பிரதமர் பதவி கொடுக்க யாரும் இல்லாததால் என்னை பிரதமராக்க அழைத்தனர்.

என்னைப் பார்த்து சிரித்தனர்.அவர்களுக்கு இது புரியவில்லை. இந்த நாட்டை கட்டியெழுப்ப நாம் வலுவாக இருக்க வேண்டும். நாட்டிற்கு தொழில்துறையை கொண்டு வர விரும்புகிறோம். நாம் அங்கு செல்ல வேண்டும்.

இளைஞர்கள் நாட்டைக் கைப்பற்றுவார்கள். இளைஞர்களுக்கு அவர்களின் எதிர்காலம் குறித்து கேட்க உரிமை உள்ளது. அவர்களுக்காக நல்ல நாட்டை உருவாக்குவது




உங்கள் கஷ்டத்தைப் பார்த்துதான் அன்று நான் பிரதமர் பதவியை ஏற்றேன். அன்று நாடு முழுவதும் வரிசைகள் இருந்தன. இந்த சவாலை ஏற்று நாட்டை கட்டியெழுப்புவேன் என்று அன்றே முடிவு செய்தேன். நான் ஒருபோதும் சவால்களைக் கண்டு ஓடுவதில்லை. ஆனால் நீங்கள் ஒரு வேலையை எடுத்துக் கொண்டால், நீங்கள் அதை கண்டிப்பாக செய்கிறீர்கள். உலகத்திடம் உதவி கேட்டு வேலை செய்ய ஆரம்பித்தேன். இந்த பயணத்தை நடத்தும் போது, ஆதரவு வர ஆரம்பித்தது. உண்மையில் நாம் திவால் நிலையிலிருந்து வெளியேறும் நேரம் இது. அதற்காக கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. இன்று அது வெற்றியடைந்துள்ளது.

ரூபாய் இப்போது வலுவாக உள்ளது. நாட்டில் போதுமான உணவு உள்ளது. எரிபொருள் விலை குறைந்துள்ளது. ஆனால் இன்னும் பிரச்சினைகள் உள்ளன. மக்கள் கஷ்டப்பட்டு வாழ்கிறார்கள். வங்கிகளில் தங்கப் பொருட்களை அடகு வைப்பது அதிகரித்துள்ளது. அந்த சோகத்தை நான் மறக்கவில்லை. விரைவில் அவர் தங்கப் பொருட்களுக்கு நிவாரணம் வழங்கினார்.

செழிப்பிற்குப் பதிலாக அமைதியைக் கொண்டு வந்தோம். 20 இலட்சம் நில உரிமை வழங்கப்படும். தோட்டங்களில் உள்ள சுண்ணாம்பு அறைகள் கிராமங்களாக மாற்றப்படுகின்றன. சிறிய மனிதனுக்கு உரிமை வழங்குவதே இந்த அரசின் திட்டம். எங்கள் திட்டத்தின் முடிவில், நீங்கள் அனைவரும் பணக்காரர்களாக இருப்பீர்கள்.

கிராமங்களில் விவசாயம் நவீனமயமாக்கப்பட வேண்டும். அங்குதான் செல்கிறோம். நாட்டின் ஸ்திரத்தன்மை காரணமாக இத்தகைய இடத்தை அடைய முடிந்தது. தற்போது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருகிறது. எங்களை ஆதரித்த நாடுகளின் ஐ.எம்.எஃப் நிபந்தனைகளுக்கு ஏற்ப நாம் செயல்பட வேண்டும். அந்த சட்டகத்திற்கு வெளியே வேலை செய்பவர்கள் பொய்யர்கள்.

இந்த பயணம் இல்லாவிட்டால் நாடு மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்லும். பொய் சொல்லி நாட்டை வீழ்த்த முடியாது.

நமது கடமை.

சுயேச்சையான ஜனாதிபதி வேட்பாளராக என்னால் தனியாக இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியாது. அதற்கு அனைவரின் உதவியும் தேவை. இந்த அரசியலுக்கு முடிவு கட்டுவோம். நான், மஹிந்த ராஜபக்ஷ, சந்திரிக்கா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன, நம் அனைவருக்கும் இது கடைசி காலம். எனவே புதிய சிந்தனைகளுடன் புதிய பயணத்தை தொடங்குவோம்".

இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார்.

**வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி உரையாற்றுகையில்,**"தீர்மானமிக்க தேர்தலொன்றை எதிர்கொண்டுள்ளோம். 2 வருடங்களுக்கு முன்பிருந்த பொருளாதார சரிவிலிருந்து மீண்டு வருவதற்காக மேற்கொண்ட முயற்சிகளை கைவிடக்கூடாது. அதற்காகவே கட்சி, இன,மத பேதங்கள் இன்றி அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம். நாட்டில் ஏற்பட்ட நிலைத்தன்மையைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

2022 ஏப்ரலில் நாட்டில் 13 மணி நேர மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. எரிபொருள் இருக்கவில்லை. சமையல் எரிவாயு இருக்கவில்லை. 20 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மட்டுமே கையிருப்பில் இருந்தன. யாசகம் பெறும் நாடாக மாறினோம்.

அப்போதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை ஏற்றுக்கொண்டு, குறுகிய காலத்தில் நாட்டை மீட்டெடுத்தார். நாம் கற்றுகொண்ட பாடங்களை ஒருபோதும் மறக்கக் கூடாது.இரவில் விழுந்த குழியில் பகலிலும் விழுவது தவறாகும். எனவே நாம் தற்போது ஏற்படுத்தியுள்ள நிலைத்தன்மையை பாதுகாப்பதாக? அதற்கு முரணாக செல்வதாக என்று தீர்மானிக்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண உரையாற்றுகையில், "செப்டெம்பர் 22ஆம் திகதி தேர்தல் முடிவுகள் வந்த பின்னரும் ரணில் விக்ரமசிங்கவே இந்த நாட்டின் ஜனாதிபதியாக செய்யப்படுவார் என்று நம்புகிறோம். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்பதை மறந்துவிடக் கூடாது" என்று தெரிவித்தார்.

டியிடப் போவதில்லை என்று பலரும் கூறினர். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட முதல் தினத்திலேயே கட்டுப்பணம் செலுத்திய தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று எமது மேடையில் இருக்கிறார். இந்த மேடையில் பொதுஜன பெரமுனவின் 40 இற்கும் மேற்பட்ட எம்.பிக்கள் உள்ளனர். அதேபோல் ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பலரும் உள்ளனர். கிழக்கு மாகாணத்தில் அதாவுல்லா, மலையகத்தில் தொண்டமான் போன்ற மக்கள் பிரதிநிதிகளும் எம்மோடு உள்ளனர். அதனால் வெற்றியை ஈட்டுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சவால்களை ஏற்க அஞ்சுபவர். இலவசமாக பெற்றுக்கொடுத்த ஜனாதிபதி பதவியை ஏற்றுக்கொள்ள முடியாதவர். அவரால் தேர்தலை வெல்ல முடியாது. மக்கள் விடுதலை முன்னணி புதிய முகத்துடன் தேர்தலில் களமிறங்குகிறது. அவர்களின் கூட்டணியில் அராஜகம் செய்த பலர் உள்ளனர்.

இன்றைக்கு இரு வருடத்திற்கு முன்னதாக பாடசாலை செல்ல மாணவர்களுக்கு வழியிருக்கவில்லை. எரிபொருள் இருக்கவில்லை. பொருட்களின் விலை உயர்ந்து காணப்பட்டது. பொருளாதாரம் சரிந்த நாட்டில் மக்கள் பசியில் இறந்துபோன நிலையை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவே மாற்றினார்" என்றார்.

**ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹூமான் பேசுகையில்,** "இரண்டு வருடங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலையை நாம் மறந்துவிட முடியாது. அந்த நேரத்தில் நாட்டை ஏற்றுக்கொள்ளுமாறு கூறிய போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இந்த நாடு ஆப்கானிஸ்தானை போல மாறிவிடும் என்று ஏற்க மறுத்தார். அவர் தேர்தலில் வென்றால் நாடு மீண்டும் பழைய நிலைக்குச் செல்லும்.

எனவே மக்கள் சரியான தீர்மானத்தை எடுக்க வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்ற வேளையிலும் எதிர்கட்சித் தலைவர் நிபந்தனை கடிதங்களை எழுதிக்கொண்டிருந்தார். நாட்டை மீட்ட ஜனாதிபதியை பாதுகாக்க வேண்டியது மக்களின் பொறுப்பாகும்" என்று தெரிவித்தார்.







**தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார பேசுகையில்,**

"இந்நாட்டின் அடுத்த ஜனாதிபதியாகவும் ரணில் விக்கிரமசிங்கவே தெரிவாக போகிறார் என்பது உறுதியாகிவிட்டது.

நாட்டின் தேவைக்காக நாம் பேதங்களை மறந்துவிட்டு இணைந்திருக்கிறோம்.

நாட்டு மக்கள் பல கஷ்டங்களை அனுபவித்த வேளையில், சிலர் நாட்டை விட்டுச் சென்ற போது, அந்த நேரத்தில் மக்களின் கஷ்டங்களை அறிந்து செயற்பட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மட்டுமே முடிந்தது. சவால்களை ஏற்றுக்கொள்ளும் முதுகெலும்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்தது.

அன்றிலிருந்து புலமைப்பரிசில், காணி



உறுதிகள், நிதி நிவாரணங்கள் ஆகியவற்றை ஜனாதிபதி மக்களுக்கு வழங்கினார். இன்று டொலர் பெறுமதி குறைந்து நாட்டில் மக்கள் மூச்சு விடும் நிலைமை உருவாகியுள்ளது. இதேநிலை தொடர்ந்தால் நாட்டை வெற்றியை நோக்கி நகர்த்த முடியும் என்பதை மக்கள் அறிந்துகொண்டுள்ளனர். அச்சமில்லாத ஒரு தலைவராலேயே இந்த நாட்டை ஆள முடியும்" என்று தெரிவித்தார்.

காலி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவரான காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பத் அத்துகோரள பேசுகையில், "இன்று கட்சி வேறுபாடின்றி இந்த நாட்டின் எதிர்காலத்திற்காக இந்த மேடையில் ஒன்றுபட்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ, அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, பந்துல குணவர்தன, டிரான் அலஸ், இராஜாங்க அமைச்சர்களான சட்டத்தரணி மொஹான் டி சில்வா, கீதா குமாரசிங்க, பியல் நிஷாந்த, டி. பி. ஹேரத், திலும் அமுனுகம, கனக ஹேரத், லொஹான் ரத்வத்த, அனுராத ஜயரத்ன, பிரமித பண்டார தென்னக்கோன், செஹான் சேமசிங்க, அனுப பஸ்குவல், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன,பாராளுமன்ற உறுப்பினர்களான ஜனக பண்டார தென்னக்கோன், வஜிர அபேவர்தன, சஹான் பிரதீப், கோகிலா குணவர்தன, மேஜர் பிரதீப் உந்துகொட, முதித சொய்சா, லலித் வர்ணகுமார, ராஜிகா விக்கிரமசிங்க, ஜகத் சமரவிக்ரம, குமார சிறி ரத்நாயக்க, அகில எல்லாவல, மதுர விதானகே, ஜயந்த வீரசிங்க, ஏ. எல். எம். அதாவுல்லா, கலாநிதி கயாஷான் நாவந்த, குலசிங்கம் திலீபன், எஸ். சி முத்துக்குமாரன, முன்னாள் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, பீ. ஹரிசன், விஜயகலா மகேஸ்வரன், முன்னாள் ஆளுநர் அசாத் சாலி, முன்னாள் மேயர் ரோசி சேனாநாயக்க உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் பலரும் இந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.





2024 ஜுலை 29 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்



**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.42
லுஹர் - 12.18
அஸர் - 03.42
மஃரிப் - 06.31
இஷா - 07.46

**இன்றைய சுபதினம்**

குரோதி வருடம் ஆடி 13

ராகுகாலம் : காலை : 7.33 - 9.03வரை
சுபநேரம் : பகல் : 12.03 - 1.33வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

# சுற்றுலாப்பயணிகளின் வருகையில் நாற்பது வீதமானோர் வெளிநாட்டினர்

## இவ்வாண்டின் நடுப்பகுதி வரை 145808 பேர் வருகை



வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தளங்களுக்கு வருகை தந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வனஜீவராசிகள், வன வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். இவ்வாண்டின் முதல் 6 மாதங்களில் 364 521 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாகவும் அவர்களில் 40 வீதத்தினர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் (28) நடைபெற்ற இரண்டு வருட முன்னேற்றம் தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இதனைக் குறிப்பிட்டார்.மேலும் உரையாற்றிய அமைச்சர்:

நாட்டில் கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டின் முதல் ஆறு மாதங்களில் வனவளத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சுற்றுலா தளங்களுக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதன்படி, 2022ஆம் ஆண்டு 289,405 பேரும் 2023ஆம் ஆண்டில் 444,053 பேரும் வருகை தந்துள்ளனர்.

2022இல், வந்த மொத்த சுற்றுலாப் பயணிகளில் 19.8 வீதத்தினர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளாவர்.

27.8 வீத வெளிநாட்டினர் 2023 இல் வந்துள்ளனர்.

நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில், சுற்றுச்சூழல் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பான ஒழுங்கு விதிகளை தயாரித்து, பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்று, இதற்கான சட்டத் திருத்தங்களைச் தயாரித்து வருகிறோம். இதன்படி,

06

# சுங்க அதிகாரி உயிரிழப்பு

மத்தள சர்வதேச விமான நிலையத்தின் சுங்க அதிகாரி ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

விமான நிலையத்தின் ஓய்வறையில் இருந்தபோது இவர், உயிரிழந்துள்ளதாக மத்தள பொலிஸார் தெரிவித்துள்ளனர்.ருக்மலே, பன்னிபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த சுங்க அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.இவரது மரணத்திற்கான காரணத்தை கண்டறிய விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக மத்தள பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது சு.கட்சி புதிய கூட்டணி; 31இல் தீர்மானிக்கும்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்ற முடிவை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணி நாளை மறுதினம் (31) வெளியிடுமென கட்சியின் உப தலைவரும் விவசாய, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

சில தரப்பினர் தெரிவிப்பது போல், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி துண்டுகளாக பிளவுபடவில்லை என குறிப்பிட்டுள்ள அமைச்சர், இப்போதுதான் கட்சி முறையாக, உத்தியோகபூர்வமான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாக செயற்படுவதாகவும் தெரிவித்துள்ளார். கட்சித் தலைமையகமும் தம் வசமே உள்ளதாக குறிப்பிட்டுள்ள அவர், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பெயரை வைத்து சிலர் வெளியிடும் கருத்துக்கள் செல்லுபடியற்றவை என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் நிலைப்பாடு தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# தேர்தல் அதிகாரிகளை நியமிக்க விசேட வர்த்தமானி

## முதற்கட்ட அச்சுப்பணிகளும் நிறைவென்கிறார் அரசாங்க அச்சகர்

**(லோரன்ஸ் செல்வநாயகம்)**

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை அச்சிடும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அரசாங்க அச்சகத்தின் பிரதானி கங்கா கல்பனி லியனகே, தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் மற்றும் கட்டுப்பணம் தொடர்பான ஆவணங்கள் இன்னும் பத்திரங்கள் அச்சிடல் பணிகளை அரச அச்சகம் பூர்த்தி செய்துள்ளதுடன் அவை தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.முதற்கட்ட ஆவணங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்ட ஆவணங்களை அச்சிடும் நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்

அந்த வகையில்,தேர்தல் அதிகாரிகளை நியமிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலும் அரசாங்க அச்சகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மாவட்டச் செயலாளரை தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியாக நியமிக்கும் வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். அதேவேளை, ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் உதவி தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியை அறிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் அவர்

06

# மீண்டெழும் பயணம் வெற்றி பெற ஜனாதிபதியை ஆதரிக்க தீர்மானம்



ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணியின் தலைவர் சம்பிக்க ரொஷான் லோவ் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா முற்போக்குக் கட்சி நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே சம்பிக்க லோவ் இவ்வாறு தெரிவித்தார். இங்கு கருத்துரைத்த அவர்:

பொருளாதார, சமூக, சர்வதேச ரீதியில் மீண்டு வரக்கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. இத்தருணத்தில் மக்கள் செய்ய வேண்டியது நாட்டை மீண்டும் அவரிடம் ஒப்படைப்பதே.

கடந்த காலங்களில் நாடு சில சிரமங்களை எதிர்கொண்ட போது,முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பல தரப்பினரிடம் நாட்டை பொறுப்பேற்குமாறு கேட்டுக் கொண்டார். ஆனால், எவரும் முன்வரவில்லை. ரணில் விக்ரமசிங்க துணிச்சலுடன் இதனைக் பொறுப்பேற்று மீண்டும் நாட்டை கட்டியெழுப்பினார். எதிர்காலத்தில் ரணில் விக்ரமசிங்கவுடன் இணைந்துள்ள கூட்டணியே வெற்றி பெறும்.

# உபயோகத்திற்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் விற்பனை

## 11,261 வர்த்தக நிலையங்களுக்கு, எதிராக வழக்குத் தாக்கல்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மனித உபயோகத்துக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்களை விற்பனை செய்த குற்றத்திற்காக 11,261 வர்த்தக நிலையங்களுக்கு, எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இந்த வருடத்தின் நேற்று வரையான காலப்பகுதியில் இவ்வாறு 11,261 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடிந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். கடந்த ஆறு மாதங்களாக தமது சங்கத்தின் உறுப்பினர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளில் பாரியளவு வர்த்தக நிலையங்கள் மக்களை ஏமாற்றியுள்ளதாகவும் உணவுப் பொருட்களில் காணப்படும் கலவைகள் உணவுப் பொருட்களின் காலாவதி தினம் என்பன கவனத்திற்கொள்ளப்பட்ட தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோன்று இந்த நடவடிக்கைகளில் நுகர்வோரின் முழுமையான ஒத்துழைப்பு தமது சங்கத்திற்கு தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். சில ஹோட்டல்கள் மற்றும் சிற்றுண்டி சாலைகளில் பொருட்களை கொள்வனவு செய்யும் போது அவற்றின் களஞ்சிய சாலைகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு அவர் கேட்டுள்ளார் அதேவேளை உணவு பரிமாறுபவர்கள் சுத்தமாக உள்ளார் களா அவர்கள் கையுறைகளை உபயோகிக்கின்றார்களா என்பது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# இலங்கைக்கு இலவச வீசா திட்டம் அறிமுகம்

இலங்கை உள்ளிட்ட 55 நாடுகளுக்கு இலவச வீசா திட்டத்தை அல்ஜீரியா அறிமுகப்படுத்தியுள்ளது.

அல்ஜீரியாவில் சுற்றுலா பயணிகளுக்கான பயண நடைமுறைகளை இலகுவாக்குவதன் மூலம் சுற்றுலா துறையை மேம்படுத்த இப்புதிய இலவச வீசா கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய விசா கொள்கையை அறிமுகப்படுத்தியதன் மூலம், வட ஆபிரிக்க நாடுகளின் சுற்றுலாத்துறை முன்னேற்றம் அடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு சிகரெட்டுக்கள் சுங்க அதிகாரிகளால் மீட்பு

## சீனப் பிரஜையான பெண்ணும் கைது

**லோரன்ஸ் செல்வநாயகம்)**

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு தொகுதி சிகரெட்டுகளை சட்டவிரோதமாக நாட்டுக்கு கடத்தி வந்துள்ள பெண் ஒருவரை, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்துள்ளதாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் சீன பிரஜையான பெண் என்றும், மலேசியாவிலிருந்து அவர் இலங்கைக்கு வருகை தந்த போது கட்டுநாயக்க விமான நிலையத்தில்

06

# வழிபாடுகளில் பங்கேற்பதற்காக குளிக்க சென்ற மாணவர் மூழ்கி மரணம்

## மாணிக்க கங்கையில் நேற்று சம்பவம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கல்விப் பொது தராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தயாராகும் 16 வயது மாணவர் ஒருவர், மாணிக்க கங்கையில் நீரில் மூழ்கி பலியான சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

செல்லக் கதிர்காமம் பகுதியில் மாணிக்க கங்கை பாலத்திற்கு அருகில் குளித்துக் கொண்டிருந்தபோதே, மேற்படி மாணவன் நீரில் மூழ்கி பலியாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கதிர்காமத்திற்கு யாத்திரையாக சென்றுள்ள மேற்படி

06


# எல் பீ பினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ பினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 124, காலி வீதி, தெகிவளை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 84 A, காலி வீதி, தெகிவளை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 51A, W.A. சில்வாமாவத்தை, கொழும்பு 06. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 18, கெசல்வத்த, பாணந்துறை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 358/D, மதுக்கம வீதி, தர்கா நகரம். |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 534, காலி வீதி, வாட்டுவ. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 25, யட்டியந்தோட்ட வீதி, அவிசாவளை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 24/A, பிரதான வீதி, கன்வெல்ல. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 25A, பிரதான வீதி, ஹைலியகொட. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 755/1, பன்னிப்பிட்டியவீதி, பத்தரமுல்ல. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 434, E.W.பெரேரா மாவத்தை, கோட்டை வீதி, பிடகோட்டை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 92, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 595, உயர்மட்ட வீதி, கங்கொடவில, நுகேகொட. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரண. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தல. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 28, தெகிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 129, பழைய காலி வீதி, மொரட்டுவ. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 227, டி சொய்சா வீதி, மொறட்டுமுல்லை, மொறட்டுவ. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 91, உயர்மட்ட வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 11, கல்தேமுல்ல வீதி, மொறட்டுவ. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 19, தனயம் பிவிசம் மாவத்தை, பலாங்கொட. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 167, பிரதான வீதி,பண்டாரவல. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 89, கீழ் தெரு, பதுளை. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 87. பிரதான வீதி, பிட்டிகல. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 48, இரத்தினபுர வீதி, பதுரலிய. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 96, அகலவத்தை வீதி, மத்துகம. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 49, சேனநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராம |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிப்பிட்டிய. |
| 02/09/18/23 | செப்டம்பர் 2024 | இல. 138 D/1, ஹம்பாந்தோட்ட வீதி, அம்பலாந்தோட்ட. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்கல்லே. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 2, H.V. கட்டிடம், டெல்லாவ வீதி, நெலுவ. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 282, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொடை. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 598 E, ஹிரிம்புரா வீதி, கராபிட்டிய. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 13, ஸ்டேஷன் ரோடு, மாத்தறை. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 83, தெனியாய வீதி, அக்குரஸ்ஸ. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 722, விஹார சந்தி, வரகொட வீதி, களனி. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 482, அவிசாவளை வீதி, கடுவெல்ல. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 136/12H, கண்டி வீதி, கடவத்த. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல: 365, உயர்மட்ட வீதி, கொட்டாவ. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 419, கோட்டை வீதி, ராஜகிரிய. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 835/2A, தலங்கம, யர்த், மாலபே. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 124/A, துட்டகெமுனு வீதி, கோகுவெல்ல. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 69, தெகிவளை வீதி, மகரகம. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 227/A, உயர்மட்ட வீதி, வத்தேகெதர, மகரகம. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 76, உயர்மட்ட வீதி, ஹோமாகம. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 50/12, கொடகம வீதி, அதுருகிரிய. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 145, மலாய் வீதி, கொழும்பு 02. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 54, D.S. சேனநாயக்க மாவத்தை, பொரல்லை. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 239, கிருள வீதி, நாரஹேன்பிட்டிய |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 282, நாகலகம் வீதி, கொழும்பு 14. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 52/17, கொத்தடுவ புதிய நகரம், கொத்தடுவ. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 197, மன்ஸ் வீதி, கொழும்பு10. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 65/A, ஸ்ரீ சத்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 03/10/19/24 | செப்டம்பர் 2024 | இல. 1024, மருதானை வீதி, கொழும்பு10. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சிய. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம் . |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 219, புத்தளம் வீதி, நொச்சியகம. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 03, சென்.லூசியாஸ் வீதி, கொட்டஹேனா. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 149, KB கிறிஸ்டி பெரேரா மாவத்தை, கொழும்பு 13. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 21, சென்.ஜோசப் வீதி, கிராண்ட்பாஸ். |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தல. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 255/B, ஹெந்தலை வீதி, ஹெந்தலை. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 3/729, பண்ணை வீதி, கொழும்பு 15. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 530, அளுத் மாவத்தை வீதி, கொழும்பு15. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 107, சென்.ஜோசப் வீதி, நீர்கொழும்பு |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிக்கடை. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 40 A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 106 C, குருநாகல வீதி, புத்தளம். |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 75 A, சிலாபம் வீதி, மாரவில. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 84, பிரதான வீதி, கல்பிட்டிய. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 17, ஸ்டேஷன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தலை. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 661/A, தெவத்த வீதி, ராகம. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, யாஎல. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 434, பேஸ்லைன் வீதி, அவரிவத்த, கட்டுநாயக்க. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | ராஜரட்டகட்டிடம், பிரதானவீதி, கதுருவெல்ல, பொலன்னறுவை. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 114, பிரதானவீதி, கந்தல |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 230, கண்டி வீதி, மாவனெல்ல. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 81, கண்டி வீதி, வரக்காப்பொல. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 57, வெயங்கொட வீதி, மினுவாங்கொடை. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 1B, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. |
| 04/11/20/25 | செப்டம்பர் 2024 | இல. 69, கிருல்ல வீதி, திவுலப்பிட்டிய. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமட. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 52, உடபுசல்லாவ வீதி, ராகலை. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 473, நுவரெலியா வீதி, புசல்லாவ. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பொலை. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 52, டன்பரா வீதி, ஹட்டன். |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 73, கொத்மலை வீதி, நாவலப்பிட்டிய. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலிய. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டிய. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 21, தம்புள்ளை வீதி, குருநாகல். |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 35, சரஸ்வி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 115, கொடுகொடெல்ல வீதி, கண்டி. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 298, கொழும்புவீதி, பிலிமத்தலாவ. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 13A, கண்டி வீதி, கெலியோயா. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 66, நாவலப்பிட்டிய வீதி, கம்பளை. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 44/1, புதிய பஸ் நிலைய வீதி, மொனராகலை. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 153, மடவல வீதி, கடுகஸ்தோட்ட. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 94, ராஜா வீதி, மாத்தளை. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 226, டி.எஸ். சேனநாயக்க வீதி, கண்டி. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புள்ளை. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 31, குருநாகல் வீதி, கலேவெல. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 14, புதிய நகரம், திகன. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 56,57, எட்வின் விக்கிரமரத்ன வணிக வளாகம், புதிய நகரம், மஹியங்கனை. |
| 05/12/21/26 | செப்டம்பர் 2024 | இல. 10/2, வங்கி எதிரில், புதிய நகரம், தெஹியத்தகண்டி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 171, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | மோட்டக்கடை, உயிலங்குளம் வீதி, நானாட்டான். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | கண்டி வீதி, பளை நகரம், பளை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | சங்குப்பிட்டி வீதி, வாடியடிச் சந்தி, பூநகரி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | மானிப்பாய் வீதி, கைதடி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 35, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 3,5 வல்லை வீதி, சங்கானை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 126, 128, பிரதானவீதி, பருத்தித்துறை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 69, பிரதானவீதி, அச்சுவேலி |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 55, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 6, பருத்தித்துறை வீதி, கோப்பாய். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென் மேற்கு, வட்டுக்கோட்டை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | கண்டி வீதி, கொடிகாமம். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 575, கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பளை தெற்கு, தெல்லிப்பளை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 76, தெல்லிப்பளை வீதி, பண்டத்தரிப்பு |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | வட்டார இல. 01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, மல்லாவி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | PW வீதி, முல்லைத்தீவு |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 32B, 2ம் குறுக்கு வீதி, வவுனியா. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 12, வட்டாரஇல. 06, பிரதானவீதி, பேசாலை, மன்னார். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, மருதங்கேணி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல.02, பிரதான வீதி, பிரிவு 11, அட்டாளைச்சேனை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. CC/44, பிரதான வீதி, மத்திய முகாம் 03, அம்பாறை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 25, ஹிரஜா சந்திப்பு, கல்முனைவீதி, சம்மாந்துறை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, திருக்கோவில் 01. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 04, கடிகார கோபுரம் எதிரே, அம்பாறை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, பொத்துவில். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, வவுனதீவு. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பாடசாலைஎதிரே, வைத்தியசாலைவீதி, களுவாஞ்சிக்குடி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல.71 A, பிரதான வீதி, ஆரையம்பதி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, பிரிவு 10, கொக்கட்டிச்சோலை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 275, மத்திய வீதி, திருகோணமலை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | "சந்தை எதிர் வளாகம்", பிரதான வீதி, செங்கலடி. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | சந்தை எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டகளப்பு |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 50/2, பிரதான வீதி , கின்னியா. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | திருகோணமலை வீதி, கண்டலடி, வாகரை. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | பிரதான வீதி, கிரன். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. E 20/3/3, திருகோணமலை வீதி, சேருநுவர. |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 151, 153, புன்னக்குடா வீதி, ஏறாவூர் 03, ஏறாவூர். |
| 06/13/27/30 | செப்டம்பர் 2024 | இல. 252B , 252/1, கண்டி வீதி, திருகோணமலை. |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப்போடவோ எல்.பிபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்திற்கு உரிமம் உள்ளது

LB FINANCE

உதவி பொது முகாமையாளர் - தங்க கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 06ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 15

### குறள் தரும் சிந்தனை



ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து

உறுப்புகளை ஓர் ஓட்டுக்குள் அடக்கிக் கொள்ளும் ஆமையைப் போல், ஐம்பொறிகளையும் அடக்கியாளும் உறுதி, காலமெல்லாம் வாழ்க்கைக்குக் காவல் அரணாக அமையும்.

# சவால்களுக்கு அஞ்சியோடுவது தலைமைத்துவப் பண்பு அல்ல!

சவால்களைக் கண்டு அச்சத்தினால் தப்பியோடுபவர் எவருமே வீரர் அல்லர். சவால்களை எதிர்கொள்ளத் திராணியற்றவர் உண்மையிலேயே கோழை ஆவார்.

சவால் என்பது எதுவாக இருந்தாலும் அதனை வெற்றிகொள்ள முடியுமென்ற துணிச்சலுடன் எதிர்கொள்பவரே உண்மையான வீரர் ஆவார். அவ்வாறான துணிச்சல் மிகுந்த ஒருவரே தலைமைத்துவத்தை ஏற்பதற்குத் தகுதி உடையவராகின்றார்.

வெறுமனே வாய்ச்சொல் வீரர்களால் எதையுமே சாதிக்க முடிவதில்லை. அவ்வாறான வாய்ச்சொல் வீரர்கள், கோஷம் எழுப்புவதற்கே தகுதியானவர்களாவர். உரத்த சத்தமிட்டுக் கோஷமிட்டு, மக்களை உருவேற்றி தம்வசம் ஈர்த்துக் கொள்வதற்கு அவர்கள் முற்படுகின்றனர்.

இலங்கையின் இன்றைய அரசியல் களத்தில் துணிச்சல் மிக்க வீரரும் உள்ளார். அச்சம் நிறைந்த கோழைத்தனம் கொண்டவர்களும் உள்ளனர். இத்தகையவர்கள் எவரென்பதை மக்கள் நன்கறிவர்.

துணிச்சலும் ஆளுமையும் நிறைந்த அரசியல் தலைவர்கள் அதிகம் பேசுவதில்லை. அறிவும் ஆளுமையும் பக்குவத்தையே தருகின்றன. அவ்வாறான ஆளுமை நிறைந்த தலைவர்கள் வாய்ச்சொல் வீரர்களாக இருப்பதில்லை. அவர்கள் அமைதியாக இருந்து, சவால்களை துணிச்சலுடன் எதிர்கொண்டு சாதனை புரிவார்கள். பாரிய சவால்களையும் துணிச்சலுடன் எதிர்கொண்டு தீர்வு காணுகின்ற வல்லமையை அவர்கள் கொண்டிருப்பார்கள்.

உலகில் இலங்கை மாத்திரமன்றி எந்தவொரு நாட்டின் தலைவருக்கும் ஆளுமையும் துணிச்சலுமே அவசியமாகின்றன. அவ்வாறானவர்கள் சாதிக்கக் கூடியவர்களாக உள்ளனர். நாட்டின் முன்னேற்றத்துக்கும் அத்தகையோரின் தலைமைத்துவமே அவசியமாகின்றது.

ஆளுமையற்ற தலைவர்கள் பலரால் உலகில் பல நாடுகள் வீழ்ச்சியடைந்திருப்பது உலக வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் எமக்கெல்லாம் புரிந்து விடும். அதேபோன்று ஆளுமையும் ஆற்றலும் நிறைந்த தலைவர்களால் சவால்கள் முறியடிக்கப்பட்டு நாடுகள் மீண்டெழுந்த வரலாறுகளும் உள்ளன.

இந்நிலையில், காலியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பேரணி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும் போது குறிப்பிட்ட விடயமொன்றை இங்கு சுட்டிக்காட்டுவது பொருத்தமாகின்றது.

"சவால்களைக் கண்டு நான் ஒருபோதுமே அஞ்சி ஓடுவதில்லை. சவால்களை துணிச்சலுடன் எதிர்கொண்டு தீர்வுகளைக் காண்பதே எனது வழக்கம். அதேபோன்று நான் அதிகம் பேசுபவனும் அல்லன். குறைவாகப் பேசி அதிகம் சாதிப்பதையே நான் விரும்புகின்றேன்" என்று காலியில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உரையை நோக்கும் போது, நாட்டில் இரண்டு வருட காலத்துக்கு முன்னர் உருவெடுத்த பாரிய பொருளாதார வீழ்ச்சியே எமக்கெல்லாம் ஞாபகத்துக்கு வருகின்றது. அந்த இருண்ட யுகத்தில் இருந்து நாம் இன்று மீண்டெழுந்தோம் என்பதையே எம்மால் நம்ப முடியாமல் உள்ளது. நாட்டின் அன்றைய அவலக் காட்சிகள் இன்று எமது கண்முன்னே நிழலாடுகின்றன.

நாட்டில் எரிபொருள் கிடைக்கவில்லை. நாட்டுக்கு டொலர்கள் எப்போது கிடைக்கும்? எரிபொருள் கப்பல் எப்போது வந்து சேரும்? என்ற வினாவுடன் மக்கள் காத்துக் கிடந்தனர். டொலர்கள் சேர்ந்தால்தான் எரிபொருளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலைமை அன்று இருந்தது. நாட்டின் கடற்பரப்பில் எரிபொருள் ஏற்றிய கப்பல் தரித்து நிற்கையில், கையில் டொலர் இல்லாமல் எரிபொருளை வாங்கிக் கொள்ள முடியாத நிலைமை அன்று இருந்தது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு முன்பாக கிலோமீற்றர் தூரத்துக்கு வாகனங்கள் வரிசையில் காத்துக் கிடந்தன. மக்கள் தங்களது வாகனங்கள் சகிதம் இரவு பகலாக வீதியில் காத்துக் கிடந்தனர். முச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிள்களும் வீதியில் தரித்தவாறு நிற்க, அதன் உரிமையாளர்கள் இரவுஇரவாக வீதியில் படுத்துக் கிடந்தனர். அவ்வாறு காத்திருந்து 24 மணி நேரத்தின் பின்னரும் ஏமாற்றத்துடன் மக்கள் வீடு திரும்பிய சந்தர்ப்பங்களும் உள்ளன.

வாகனங்களின் நடமாட்டம் குறைந்து போனதால், வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. அதேவேளை சமையல் எரிவாயுவுக்கும் மக்கள் திண்டாட வேண்டியிருந்தது. சமையல் எரிவாயு பெறுவதற்காக ஆண்களும் பெண்களும் வீதியோரம் இரவுபகலாகக் காத்துக் கிடந்தனர். அடுப்பு எரிப்பதற்கு மண்ணெண்ணெயையும் பெற முடியவில்லை.

அன்று இவ்வாறுதான் நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன. எத்தனை காலத்துக்கு இந்த நிலைமை தொடரப் போகின்றது என்பதே தெரியாமல் மக்கள் நாட்களைக் கடத்தினர்.

இவ்வாறான ஒரு நெருக்கடியான காலத்தில் நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றவர்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். அவர் பொறுப்பேற்று இரண்டு வருட காலத்தினுள் இன்னல்கள் நீங்கியுள்ளன. உலகமே வியக்கும் வண்ணம் இலங்கை மீண்டெழுந்துள்ளது.

இவ்வாறான முன்னேற்றத்துக்குக் காரணம் ஆற்றல், ஆளுமை, துணிச்சல் நிறைந்த தலைமைத்துவம் ஆகும். ஆற்றல் நிறைந்தவர்களாலேயே இத்தகைய சாதனைகளை நிலைநாட்ட முடியுமென்பது உண்மை.

editor.tkn@lakehouse.lk

# அமைச்சர் அலி சப்ரியின் முயற்சியினால் களுத்துறையில் பல வீதிகள் அபிவிருத்தி

வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியின் ஏற்பாட்டில் களுத்துறை பிரதேச செயலகப் பிரிவின் பல்வேறு வீதிகள் காபர்ட் பாதைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மற்றும் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் பல்வேறு பௌதீக வள அபிவிருத்திப் பணிகளுக்கான வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



அரசாங்கத்தின் 1500 கிலோ மீற்றர் வீதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ், அமைச்சரின் வேண்டுகோளின் பயனாக பல வீதிகள் காபர்ட் வீதிகளாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

மேற்படி திட்டத்தின் கீழ் களுத்துறை நகராட்சிமன்ற பிரிவைச் சேர்ந்த சேக் நூர்தீன் மாவத்தை, களுத்துறை தெற்கு குரே வீதி, பெட்ரிக் பீரிஸ் மாவத்தை, வாவி வீதி (வெவ வீதி), ஜயசுந்தர மாவத்தை, விக்கிரமசிங்க பிளேஸ், மரிக்கார் வீதி மற்றும் மபூர் கிரசன்ட் ஆகியன அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த வீதி அபிவிருத்தித் திட்டங்களை மக்களிடம் கையளிக்கும் நிகழ்வுகள் பொதுமக்களின் பங்களிப்புடன் குறிப்பிட்ட வீதிகள் அமைந்துள்ள பகுதிகளில் அண்மையில் இடம்பெற்றன. வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இந்த நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீதிகளின் பெயர்ப் பலகைகளை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதேவேளை களுத்துறை முஸ்லிம் மத்திய கல்லூரி மற்றும் களுத்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரிகளின் குறைபாடுகள் தொடர்பில் கண்டறிந்து கொள்வதற்காக அமைச்சர் இப்பாடசாலைகளுக்கு விஜயம் மேற்கொண்டதுடன், இந்த விஜயத்தில் மேல்மாகாண ஆளுநர் ஏயார் வைஸ் மார்ஷல் ரொஷான் குணதிலகவும் பங்கேற்றார். அமைச்சர் அலி சப்ரியின் முயற்சியின் பயனாக மேற்படி இரண்டு கல்லூரிகளுக்கும் மூன்று மாடிக் கட்டடத் தொகுதிகள் மேல்மாகாண சபையின் நிதியொதுக்கீட்டில் நிர்மாணிக்கப்படவுள்ளன. இதற்கான அடிக்கல் நாட்டு விழா கல்லூரி அதிபர் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுகளில் அமைச்சர் மற்றும் மேல்மாகாண ஆளநர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.இந்த நிகழ்வுகளில் கல்வித் திணைக்கள அதிகாரிகள், களுத்துறை நகராட்சிமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிசாம் சுஹைல் உள்ளிட்ட பிரமுகர்கள், பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

எம்.எஸ்.எம்.முன்தஸிர்
பாணந்துறை மத்திய குறூப் நிருபர்

# எதிரி நாட்டு ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் புதிய ஆயுதம் இந்தியாவில் வெற்றிகரமாக சோதனை

இந்திய மத்திய பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு பாலிஸ்டிக் ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது. இந்த பாலிஸ்டிக் ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் வான் பாதுகாப்பு அமைப்பு இந்தியப் பாதுகாப்பைப் பொறுத்தவரை மிகப்பெரும் வெற்றியாகும்.

மத்திய பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு அமைப்பு தொடர்ச்சியாக பல்வேறு ஏவுகணைகளை வெற்றிகரமாகச் சோதனை செய்து வருகிறது. அதன்படி சமீபத்தில் பாலிஸ்டிக் ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் ஏவுகணைகள் வெற்றிகரமாகச் சோதனை செய்யப்பட்டுள்ளன. இது இந்திய இராணுவத்திற்கு மேலும் வலிமை சேர்த்துள்ளது.

1990 இறுதியில் இந்தியாவை விடப் பாகிஸ்தானிடம்தான் அதிகளவில் ஏவுகணைகள் இருந்தன. அந்தக் கால கட்டத்தில் பல நாடுகள் பாகிஸ்தான் ஆதரவு நிலைப்பாடு எடுத்ததே இதற்குக் காரணம். அப்போது சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு பாகிஸ்தானுக்கு ஏவுகணைகளை வழங்கின.

அந்த ஏவுகணைகள் இந்தியாவுக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் என்பதால் ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் Interceptor missile கள் இந்தியாவுக்குக் கட்டாயம் தேவைப்பட்டன. இதற்காகச் சிறப்புத் திட்டமும் உருவாக்கப்பட்டது. கடந்த 2000ஆம் ஆண்டு அப்போது பிரதமராக இருந்த வாஜ்பாய் இதைத் தொடங்கி வைத்தார். அவ்வாறுதான் இந்தியாவில் இந்த பாலிஸ்டிக் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு உருவானது.

ஒவ்வொரு நாடும் அவர்களின் வான் வெளியை எதிரி நாட்டு விமானம், ஏவுகணை, டிரோன் ஆகியவற்றிடமிருந்து பாதுகாக்க 'எயார் டிபன்ஸ் சிஸ்டம்' எனப்படும் வான் பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவதுண்டு.



இந்தியாவும் இதுபோல பாலிஸ்டிக் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை வலுவாக வைத்திருக்கிறது. எதிரிகளிடம் இருந்து வரும் ஏவுகணைகளை எவ்வளவு தொலைவில் இடைமறித்து அழிக்க முடிகிறது என்பதைப் பொறுத்து இதில் பல வகைகள் இருக்கின்றன. இந்த பாலிஸ்டிக் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பானது முதல் கட்டத்தில் 2000 கி.மீ தொலைவு வரை எதிரி ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் திறன் கொண்டது.

இவை ஏற்கனவே பயன்பாட்டில் இருக்கின்றன. இதன் மூலம் பாகிஸ்தானின் சில பகுதிகளில் இருந்து இந்தியாவைத் தாக்குவதற்காக ஏவுகணை அனுப்பப்பட்டால் இந்த ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு இந்தியாவைக் காக்கும். இப்போது சுமார் 5000 கி.மீ தொலைவில் இருந்து ஏவப்படும் எதிரி ஏவுகணைகளை இடைமறித்து அழிக்கும் திறன் கொண்ட வான் பாதுகாப்பு அமைப்பை இந்தியா இப்போது சோதித்து இருக்கிறது.

# 'மட்டக்களப்புத் தமிழகம்' தந்த பண்டிதர் வி.சி.கந்தையாவின் 104 ஆவது பிறந்த தினம் இன்று



இலங்கைத் தமிழிலக்கியப் பரப்பில் எழுத்தாளர்களைப் போன்று சில நூல்களின் பெயர்களும் நீங்காத இடம்பிடித்தவை. அவற்றுள் 'மட்டக்களப்புத் தமிழகம்', 'கண்ணகி வழக்குரை' போன்றவை என்றும் நிலைத்திருக்கும் அற்புத நூல்களாகும்.

இவை போன்று பல நூல்களை தமிழுக்குத் தந்து பெருமை சேர்த்தவர் மகாவித்துவான் எனப் போற்றப்படும் பண்டிதர்.வி.சி. கந்தையா ஆவார். ஜூலை29, 1920இல் மட்டக்களப்பின் மண்டூரில், புலவர் வினாசித்தம்பி – சின்னாத்தை தம்பதியருக்கு அவர் மகனாகப் பிறந்தார். இளமைக் கல்வியை பத்தக்குட்டி உபாத்தியாயர், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, விபுலானந்தரின் குருவாகிய குஞ்சித்தம்பி உபாத்தியாயர் ஆகியோரிடம் பெற்றதுடன், சுவாமி விபுலானந்தரிடம் சங்க இலக்கியங்களையும் காப்பியங்களையும் பழந்தமிழ் இலக்கணங்களையும் வடமொழியினையும் கற்றார்.

சுவாமி விபுலானந்தரால் உருவாக்கப்பட்ட சிவானந்த வித்தியாலயத்தில் 1940ஆம் ஆண்டு முதல் தமிழ்ப் பேராசானாய் பணியினைத் தொடங்கிய கந்தையா அவர்கள், அதன் பின்னர் யாழ்ப்பாணத்து ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் (1943), மதுரைத் தமிழ்ச்சங்கம் (1944) ஆகியவற்றில் பண்டிதர் பட்டங்களையும் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வித்துவான் பட்டம் (1952), அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பி.ஓ.எல். பட்டம் (1954) பெற்றுத் தேர்ந்து விளங்கினார்.

இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று தமிழ் இலக்கியச்சொற்பொழிவுகளுடன் ஆன்மீகச் சொற்பொழிவுகளையும் நிகழ்த்தினார். இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் வெளிவந்த பல இலக்கிய இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதினார்.

1946ஆம் ஆண்டு செல்வி கங்கேஸ்வரி நாகலிங்கம் என்பவரை மணமுடித்தார். இவரது துணைவியாரும் சிறந்த ஆன்மீகச் சொற்பொழிவாளர்.

அமரர் கந்தையா பல்வேறு விழாக்களிலும் மாநாடுகளிலும் ஆய்வுக்கட்டுரைகளை வழங்கியுள்ளார் கோலாலம்பூர் மற்றும் மதுரையில் நடைபெற்ற 1ஆம், 2ஆம் உலகத்தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் கலந்து கட்டுரை வாசித்துள்ளார்.




சிவானந்த வித்தியாலயத்தின் ஆசிரியராகப் பணிபுரிந்த காலகட்டத்தில் 1949ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கத்தினால் வெளியிடப்பட்ட 'செந்தமிழ்' இதழில் இவர் எழுதிய 'நீரரமகளிரும் யாழ்நூலாசிரியரும்' எனும் கட்டுரைதான் 'மட்டக்களப்புத் தமிழகம்' எனும் பெருநூல் தோன்றக் காரணமாய் அமைந்தது. 1951ஆம் ஆண்டில் சென்னை தமிழ் வளர்ச்சிக்கழகத்தினர் யாழ்ப்பாணத்தில் நடத்திய 'இலங்கைத் தமிழ்விழா' நினைவாக வெளியிடப்பட்ட சிறப்பு மலரில் 'மட்டக்களப்புத் தமிழகம்' எனும் பெயரில் இவர் எழுதிய கட்டுரையானது தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பல தமிழறிஞர்களின் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொடுத்ததுடன், இக்கட்டுரையினைப் படித்த 'கல்கி' இதழின் ஆசிரியர் ரா.கிருஷ்ணமூர்த்தி, 'ஈழகேசரி' பத்திரிகையின் ஆசிரியராக விளங்கிய இராஜ.அரியரத்தினம் ஆகியோர் இக்கட்டுரையினை விரித்து, மட்டக்களப்பின் நிலவளம், இலக்கிய வளம், பண்பாட்டுச் சிறப்புகள், தமிழ் ஆளுமைகள், கலைகள் பற்றி விரிவானதொரு நூலாக எழுதுமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

இதனால் ஊக்கம் பெற்ற கந்தையா அவர்கள் இலங்கையின் பல்வேறு இதழ்களில் மட்டக்களப்பின் சிறப்புகள் குறித்து எழுதினார். பல கட்டுரைகள் திருத்தம் செய்யப்பட்டு, விரிவாக்கப்பட்டு 'மட்டக்களப்பு தமிழகம்' எனும் மிகப்பெரும் நூலாக 1964, ஐப்பசி மாதத்தில் ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றத்தினால் வெளியிடப்பட்டது. 500 பக்கங்களுக்கு மேல் கொண்டு விளங்கிய இந்நூல் இன்றுவரை உலகத்தமிழ் அரங்கில் போற்றப்படுகின்றது. இந்நூலின் தேவை கருதி பிரான்ஸில் இயங்கிவரும் எக்ஸில் நிறுவனத்தினர் 2002ஆம் வருடம் இதனை மறுபதிப்புச்செய்து வெளியிட்டனர்.

ஆனைப்பந்தி விநாயகர் பதிகம், கட்டுரை இயல், கண்ணகி அம்மன் குளுத்திப்பாடல் முதலிய நான்கு நூல்கள், பாரதியின் பாஞ்சாலி சபதம், விபுலானந்த ஆராய்வு விளக்கம், மட்டக்களப்புத் தமிழகம், கண்ணகி வழக்குரை, மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள், அலங்காரரூப நாடகம், இராமநாடகம், அநுவுருத்திர நாடகம், மட்டக்களப்பு சைவக்கோயில்கள் –பாகம்1, மண்டூர் முருகன் மீது கீர்த்தனைகள், மட்டக்களப்பு சைவக்கோயில்கள் பாகம் 2 போன்ற பல நூல்களை எழுதியுள்ளார்.

இவற்றுள், மட்டக்களப்பு சைவக்கோயில்கள்–பாகம் 2 எழுதிக் கொண்டிருந்த காலகட்டத்தில் நோய்வாய்ப்பட்டார். மருத்துவம் செய்வதற்காக இவரது பிள்ளைகள் இவரை அமெரிக்காவுக்கு அழைத்தனர். நூல்பிரதியுடனேயே அமெரிக்கா பயணித்தார். அங்கிருந்து மீண்டதும் நூலினை வெளியிட பல வகைகளிலும் முயன்றார்.

தனது இறுதி நூல் வெளிவரும் முன்னர் ஜூன்12, 1990 இல் காலமானார். பின்னர் இவரது துணைவியாரின் முயற்சி மற்றும் பிள்ளைகளின் உதவியுடன் 1991 டிசம்பரில் இந்நூல் வெளிவந்தது. 70 வயதில் அவர் காலமானார்.

எஸ்.ஏ.ஶ்ரீதர்
(வாழைச்சேனை தினகரன் நிருபர்)

# சமூகவலைத்தளங்களால் மாணவர் மத்தியில் சாதக, பாதக விளைவுகள்

இன்றைய நவீன உலகானது தொழில்நுட்ப வளர்ச்சியில் சிக்குண்டு சுழலும் பூமிப்பந்தாய் உள்ளது. சமூகம் எப்போதெல்லாம் புதுமைகாணத் துணிகிறதோ, அப்போதெல்லாம் மாற்றத்தின் வழியாய் வெகுஜன ஊடகங்களும் வளர்ந்து கொண்டே செல்கின்றன எனலாம்.

வெகுஜன ஊடகங்கள் வரிசையில் இணையத்தின் வழியாய் சமூக வலைத்தளங்களின் பயன்பாடு சூடு பிடித்துள்ளது. உலகில் 150 கோடிக்கும் அதிகமான மக்கள் சமூக வலைத்தளங்களை உபயோகிக்கின்றனர். இவ்வாறான சமூக வலைத்தளங்களுள் what's app இன் சாதக, பாதகங்களை பாடசாலை மாணவர்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

what's app மூலம் மாணவர்கள் நன்மைகளை மாத்திரமன்றி, தீமைகளையும் பெற்றுக் கொள்கின்றனர்.

இலங்கையில் அசாதாரண நிலைமை நிலவிய காலங்களில் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை அதிகரிக்கும் நோக்கில் மேலதிக வகுப்புக்காக what's app group call மூலம் கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே மாணவ சமூகமயமாக்கலுக்கும் நட்புடைமைக்கும் இச்சாதனம் பங்காற்றுகின்றது. மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளுக்காக குழுமங்களை உருவாக்கிக் கொண்டு அதில் பாட விடயங்களை பரிமாறிக் கொள்வதோடு, ஒருவருக்கொருவர் உதவி புரியும் வாய்ப்பும் உள்ளது.



பாடவிடயம் உள்ளிட்ட விடயங்களில் தெளிவின்மை உள்ள மாணவர்களுக்கு நண்பர்கள் மூலம் பரிமாறப்படுகின்ற தகவல்கள் பயனுடையதாக அமையலாம். பாடம் சம்பந்தப்பட்ட விடயங்களில் அனைவரையும் ஒன்றிணைத்து கற்பிப்பதற்கு what's app உதவுகின்றது. மேலும் பத்திரிகை செய்திகள் உள்ளிட்ட பல தகவல்களை உடனுக்குடன் தெரியப்படுத்தும் வகையில் உருவாக்கப்படும் செய்திக் குழுமங்களும் பயனைத் தருகின்றன.

உலகளாவிய வலையமைப்பில் தனிமனித ஆளுமை, சமூக இடைவினைகள், நட்புடைமைகள், தகவல்கள், அனுபவங்கள், கற்றல் என்பன பரிமாறப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆகவேதான் இன்றைய மாணவர்களது ஊடக சமூகமயமாக்கலில் what's app இன் தொழிற்பாடு இன்றியமையாத செயற்பாடாகும்.

மறுபுறம் சிந்திக்கையில் நியூட்டனின் 3ஆம் விதி நினைவிற்கு வருகிறது. காரணம் எந்தவொரு தாக்கத்திற்கும் நேரானதும் எதிரானதுமான மறுதாக்கம் உண்டு என்பது சிந்தையில் எட்டுகிறது. What's app தொழிற்பாட்டில் சமூக விழிப்புணர்வும் கல்விச் சிந்தனையும் ஒரு பகுதியாகவே காணப்படுகின்றது. மற்றைய பகுதிகள் ஏதோ ஒரு வகையில் பாதக செயற்பாட்டிற்கு வழிகோலுகின்றது என்பது பலவருட காலமாக அனைவராலும் விமர்சிக்கப்படுகின்ற உண்மையாகும். கற்றல் செயற்பாட்டிற்காக what's app ஐ பயன்படுத்துவதற்கு மாறாக முழுநேரத் தொழிற்பாடாக மாணவர்கள் அதனை மாற்றியமைத்திருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. குழுமங்களை உருவாக்கி அரட்டை அடித்தல், Status பதிவுகளை இடுதல், வகுப்பறை செயற்பாட்டில் ஆண் , பெண் கவர்ச்சி நிலை, profile ஆக தமது புகைபடங்களை இட்டு அதன் மூலம் தவறான விளைவுகளையும் போலியான உறவிற்கும் ஆளாகுதல் முதலிய செயற்பாட்டில் பலர் ஈடுபடுகின்றனர்.

இன்று மாணவர்கள் whats app இல் status பதிவுகளை மேற்கொள்ளும் அளவிற்கு கூட பத்திரிகையில் தமது ஆக்கங்களை பிரசுரிக்க முனைவதில்லை. காரணம் கற்றல் மீது அவர்கள் கொண்ட ஆர்வத்தை விட கையடக்க தொலைபேசியில் தமது விடயங்களை மற்றவர்களுக்கு பரவலாக்கம் செய்வதனையே விருப்பப் குறிக்கோளாக கொண்டுள்ளனர்

ஆகவேதான் What's app ஊடகம் எவ்வளவு நன்மைகளை மாணவர் மத்தியில் உண்டாக்கினாலும் அதற்கு ஏற்றாற் போல பாதக செயற்பாட்டிற்கும் வழிவகுத்து நிற்கின்றது. இதனை ஆசிரிய சமூகத்தால் எவ்வாறு மாற்றியமைத்து கொள்ள முடியும் என்பதை சிந்திக்க வேண்டும். ஒரு மாணவன் whats app பாவனையில் முழுநேரமாக ஈடுபட்டுள்ளான் என்பதை அறிந்து கொண்டால் ஆக்கத்திறன் மிக்க விளையாட்டுக்களை அவர்களுக்காக பரிந்துரைத்து அதன் மூலம் கற்பித்தலை நுட்பமான வழியாக மாற்றியமைக்கலாம்.

சிவகுமார் டிலக்சினி
4ஆம் வருட மாணவி
கல்வி, பிள்ளை நலத்துறை,
கிழக்கு பல்கலைக்கழகம்

# பித்ரு தோஷ சாபம் நீங்க அமாவாசை விரதத்தை கடைப்பிடியுங்கள்

ஆடி அமாவாசை தினங்களில் குறிப்பாக கொழும்பில் முகத்துவாரம் சங்கமத்திலும் வெள்ளவத்தை கடற்கரை பகுதியிலும் கீரிமலை மற்றும் கடற்கரை ஓரங்களிலும் ஆற்றோரங்களிலும் தர்ப்பணம் செய்வது மிகவும் சிறப்பானதாகும்.

அதேவேளை அந்தணர்களுக்கு தானம் கொடுத்து பசு மாட்டுக்கும் அகத்திக் கீரை கொடுத்து சிவ வழிபாடு மேற்கொண்டு சிவனுக்கு மோட்ச வழிபாடு மேற்கொள்வதும் சிறப்பானதாகும்.

தந்தை இழந்து ஒரு வருடம் முடித்தவர்கள் முன்னோர்களின் ஆன்மாவை நினைத்து தர்ப்பணம் செய்வது சிறப்பானதாகும்.

சூரியன் வட திசையில் இருந்து தென் திசை நோக்கி (தட்சிணாயனம்) செல்லும்பொழுது முதல் வரும் அமாவாசை ஆடி அமாவாசை ஆகும்.

சாஸ்திரத்தில் இறந்தவர்கள் இறந்த திதியில் தான் பூலோகத்திற்கு நம்மை தேடி வருவார்கள் என சொல்லப்பட்டுள்ளது.

இங்கு அமாவாசை அன்று பூலோகம் சென்றடைவார்கள்.

ஆகவே, இந்த நாட்களை விட்டு அவர்கள் பூமிக்கு வராத நாட்களில் அவர்களுக்கு உணவளிப்பது எந்த ஒரு பயனும் இல்லை.



டாக்டர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா

இந்த சாஸ்திரங்களை முறையாக கடைபிடிக்காமல் விடுவதனால் தான் பித்ருதோஷமும், பித்ருசாபமும் ஏற்படுகிறது.

பித்ருதோஷம், பித்ருசாபம் என்றால் இறந்தோர்கள் அவர்கள் நம்மை சபிப்பது கிடையாது. ஆனால், நமக்காக செய்யப்படும். காரியங்களை சரியாக செய்யவில்லையே, நமக்கான உணவு கிடைக்கவில்லையே என இறந்தவர்களின் ஆத்மா பெரு மூச்சுவிட்டால் கூட அது நம்முடைய பரம்பரையை தாக்கும் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இவ்வாறு இறந்தவர்களின் ஆத்மா எப்படி தன்னுடைய யாத்திரையை மேற்கொள்கிறது?

அந்த சந்தர்ப்பத்தில் இறந்தவர்களுக்கு என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி கருடபுராணம் விளக்கமாக சொல்கிறது.

ஆனால் இந்த கருடபுராணத்தை வீட்டில் படிக்கக் கூடாது. இறப்பு ஏற்பட்ட வீட்டில் மட்டுமே படிக்க வேண்டும் என்பது ஐதீகம்.

## ஆகஸ்ட் 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை தினம் ஆகும்

இறந்தவர்களது ஆசியை முழுமையாக பெற வேண்டும் என்றால், தர்ப்பணத்தையும், திவசத்தையும் முறையாக செய்வதே உத்தமம் ஆகும்.

இறந்தவர்களுக்கு ஒரு மாதம் என்பது ஒரு நாளாக கருதப்படுகிறது. அந்த ஒரு நாள் அவர்கள் மறைந்து போன திதி அல்லது அமாவாசை தினம் மட்டுமே.

அன்று தான் அவர்கள் உணவை தேடி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நாட்களில் மட்டுமே திவசம், தர்ப்பணம் செய்வது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்று ஆகும்.

எனவே ஆடி அமாவாசை பூஜை செய்து இறந்தவர்களுக்கு சிவனோடு கலந்து இன்பமாய் வாழ சிவனை பிரார்த்தனை செய்யுங்கள்.

# மானுடவியல்



174

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும் திருநாவுக்கரசு நாயனாரும், சிலநாட் சென்றபின், திருவீழிமிழலையை அகன்று திருவாஞ்சியம், திருத்தலையாலங்காடு, திருப்பெருவேளூர், திருக்கரவீரம், திருவிளமர், திருவாரூர், திருக்காறாயில், திருத்தேவூர், திருநெல்லிக்கா, திருக்கைச்சினம், திருத்தெங்கூர், திருக்கொள்ளிக்காடு, திருக்கோட்டூர், திருவெண்டுறை, திருத்தண்டலைநீணெறி, திருக்களர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு, வேதாரணியத்தை அடைந்து, திருக்கோயிலிற் பிரவேசித்து, வலஞ்செய்து, வேதங்கள் அருச்சித்துத் திருக்காப்புச் செய்த அந்நாள்முதல் இந்நாள் வரைக்கும் அடைக்கப்பட்டேயிருக்கின்ற திருவாயிலுக்கு முன் வந்து, வேதங்களாலே திருக்காப்புச் செய்யப்பட்ட அத்திருக்கதவை அவ்வேதங்களை ஓதும் அடியார்கள் நீக்கப் பெறாமையினால் வேறோர் பக்கத்தில் ஓர்வாயிலிட்டு அதன் வழியே செல்கின்றார்கள் என்பதைக் கேட்டறிந்தார்கள். திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் அப்பமூர்த்தியை நோக்கி, "அப்பரே! நாம் எப்படியும் சுவாமியை அபிமுகத் திருவாயில் வழியே சென்று தரிசிக்க வேண்டும். ஆதலால் இந்தத் திருக்கதவு திறக்கப்படும் பொருட்டு நீரே திருப்பதிகம் பாடும்" என்றார்.



அப்பமூர்த்தி திருப்பதிகத்தைத் திருக்கதவு திறக்கப்படும்பொருட்டுப் பாட; அது திறக்கப்படாமல் தாழ்ந்தது; அது கண்டு, "இரக்கமொன்றிலீர்" என்று திருக்கடைக்காப்பிலே பாடி வணங்கினார். உடனே வேதாரணியேசுரருடைய திருவருளினாலே திருக்கதவு திறக்கப்பட்டது.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# ஸ்ரீ வராஹி அம்மனின் அருள் பெற்ற பிரபல ஜோதிடர் 'குருஜி' ஆனந்தன்

ஸ்ரீ வராஹி அம்மனின் அருள் பெற்ற பிரபல ஜோதிடரும் ஸ்ரீ வராஹி அம்மன் உபாசகருமான 'குருஜி' ஆனந்தன் தற்பொழுது இலங்கைக்கு வருகை தந்திருக்கிறார். இவர் ஒவ்வொரு வருடமும் இலங்கைக்கு வந்து கொழும்பில் தங்கி இருந்து ஜாதக கணித்துக் கூறுவதுண்டு. ஜாதகக்குறிப்பு இல்லாதவர்களுக்கு பிறந்த திகதி, நேரம் ஆகியவற்றை கொடுத்தால் அவரை ஜாதகத்தை எழுதி கணித்துப் பார்த்து பலாபலன்களை கூறுவார்.



இவர் ஜாதகங்களை மட்டுமல்ல சோழி போட்டுப் பார்த்தும் சாஸ்திர ரீதியிலான நன்மை, தீமைகள், எதிர்கால பலன்கள், ஒவ்வொருவரும் எதிர்கொள்கின்ற இடர்கள், துன்பங்கள், எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் ஆகியவற்றை எடுத்துக் கூறுவதுடன் அவற்றுக்கான பா`ிகாரங்களை கூறுகிறார்.

ஜாதகம் கணித்துக் கூறுவதை பரம்பரையாக கைக்கொண்டு வந்தாலும் மருந்து மாத்திரைகள் பாவிக்காது சித்தர்கள் காட்டிய நல்வழிகளைப் படித்து பின்பற்றி அகனுடாக நோய் நொடிகள் தீர்த்துக் கொள்ள வழிகாட்டி வருகிறார்.

நோய் நொடிகள் தீர சித்தர்கள் காட்டியுள்ள நெறிமுறைகளை ஏடுகளில் இருந்து படித்து அறிந்து கொண்டதுடன் நின்று விடாது குருக்களிடம் சென்று அவற்றை கற்றுத் தேர்ந்துள்ளார். வயது செல்ல செல்ல உடல்களில் ஏற்படும் உபாதைகள், பார்வை குறைதல், சீனிப் பிரச்சினை, போன்ற பிரச்சினைக்கு ஆங்கில வைத்தியமுறைகளை பின்பற்றி பக்கவிளைவுகளை ஏற்படுத்தக்கூடிய மருந்து மாத்திரைகள் உட்கொள்ளாது சித்தர்கள் காட்டிய வைத்திய முறைகளை பின்பற்றி நலன் பெற சொல்லித் தருகின்றார்.

எங்களது பொருட்கள் ஏதாவது காணாமல் போனால் அல்லது நாம் வைத்த இடம் தெரியாமல் தேடி தடுமாறினால் அதனை இலகுவாக கண்டுபிடிக்கக்கூடிய, அவை இலகுவாக கிடைக்கக்கூடிய வழிமுறைகளை இவர் கற்றுத் தருகிறார். வெறுமனே ஒரு மந்திரத்தை 108 தடவைகள் உச்சரித்து கூறுவதன் மூலம் அந்தப் பலனை, அந்த அனுபவத்தை நாமும் பெற்று விடலாம்.

இதுபோன்ற இன்னொரன்ன மந்திரங்களை இவர் முறையாக கற்றுத் தேர்ந்துள்ளார்.

மந்திரங்கள் என்றால் பெரிதாக அப்படிச் செய்ய வேண்டும், இப்படிச் செய்ய வேண்டும் என்று அப்படி இருக்க வேண்டும், இப்படி இருக்க வேண்டும் என்ற எந்தத் தேவையும் இல்லை.

இவ்வாறு தான் கற்றுத் தேர்ந்த, தான் தொடர்ந்து பின்பற்றி வெற்றிகண்ட வழிமுறைகளை ஒளி`மறைவின்றி கற்றுத் தர முன்வந்துள்ளார். தான் பெற்ற இன்பம் பெற வேண்டும் இந்த வையகம் என்ற அடைமொழிக்கு ஏற்ப இவர் தான் கற்றவற்றை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுக்க விரும்புகிறார். இதற்மைய ஒரு நாள் பயிற்சி வகுப்புகளை நடத்த முன்வந்துள்ளார். இவர் இந்தப் பயிற்சி வகுப்பில் 18 சித்தர்களின் மந்திரங்களையும் முத்திரைகளையும் கற்றுக் கொடுக்கவுள்ளார். இவ்வாறு 18 மந்திரங்களையும் உச்சரித்து வந்தால் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்கிறார். மந்திரங்களை கூறுவதன் மூலம் அசுத்தங்களை துடைத்து விட வாழ்வு சிறப்பு அடையும் என்கிறார் அவர். 10 பேருக்கு இவ்வாறு மந்திரங்களை சொல்லிக் கொடுப்பதன் மூலம் 100 குடும்பங்கள் இதன் மூலம் நன்மையடையும் என்கிறார்.

குடும்பப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், கல்வித் தடைகள், வெளிநாட்டுப் பயணத் தடைகள், வியாபார முன்னேற்றத் தடைகள் உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் சோதிட ரீதியான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் இவரிடம் பெற்றுக்கொள்ளலாம். பயிற்சி வழங்குகின்ற அன்று பகல் உணவுகளையும் இலவசமாக வழங்குகிறார்.

இவர் ஜாதகங்களை கணித்துக் கூறி பலன்களை சொல்லுவது மட்டுமன்றி குறைகள் இருப்பின் பரிகாரங்களையும் சொல்லி கொடுக்கிறார். இவர் பா`ிகாரங்கள் சொல்லி கொடுப்பதோடு நின்று விடுகிறார். பரிகாரங்களை அவரவர்கள்தான் செய்ய வேண்டும்.

ஜாதகக் குறிப்புகள் இல்லாதவர்களும் பிறந்த திகதி மற்றும் நேரத்தைச் சொல்லி ஜாதகத்தை அமைத்துக்கொள்ள முடியும். அத்துடன் சோழிப் பிரசன்ன முறையிலும் இவர், மக்களின் குழப்பங்களுக்குத் தீர்வு சொல்லி வருகிறார்.

இவர் 2004 இலிருந்து 20வருட காலமாக இவ்வாறு ஜாதக சோழி பார்த்து பலன் சொல்லி வருகிறார். இவருடன் தொடர்பு கொள்வதாக இருந்தால் வட்ஸ்அப்பில் தொடர்பு கொள்ளலாம் என்று அவர் கூறுகிறார்.

இவர் தந்தை வழியில் பரம்பரையாக ஜாதகம் கணித்து, சோழி பார்த்து பலாபலன்களை கூறி வருகிறார். இவர் இது தொடர்பு மேலதிகமாக தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக குருகுலத்தில் சேர்ந்து 12 வருடங்கள் இது பற்றி கற்றும் வந்துள்ளார்.

ஆன்மீக மற்றும் சோதிட ரீதியான சேவைகளைச் செய்து வரும் குருஜி ஆனந்தனை, 0750786717 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பயனடையலாம்.




# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 96



சுயநலம், குறுகிய மனப்பான்மை கோழைத்தனம் ஆகியவை அநீதியை உருவாக்குகின்றன. சாதாரண விஷயமாகத் தோன்றும் இவை தான் அநீதியின் தாயாகும். கொலை, கொள்ளை, பலாத்காரம் ஆகியவை சட்டத்தின் பார்வையில் தண்டனைக்குரிய குற்றங்களாகும். அதே போல் சுயநலம் குறுகிய மனப்பான்மை. சமுதாய பொறுப்புகளைத் தட்டிக் கழித்தல் போன்றவை தெய்வத்தின், ஆன்மீகத்தின் சட்டப்படி பெரும் பயங்கர பாவமாகும்.

மக்களின் இவ்வித மனப் போக்கின் காரணமாகத் தான் தனி மனிதனும், சமுதாயமும் வீழ்ச்சியடைக்கின்றன. இதன் தீய விளைவுகளை நாம் அனைவரும் அனுபவிக்க நேரிடுகிறது. கடந்த காலங்களில் இவை தான் நடந்து வந்துள்ளன. அவரவர்கள் தத்தமது குடில்களில் அமர்ந்து கொண்டு காலம் கழித்து வந்தனர். துஷ்டர்கள் எதிர்த்து சிறிதும் பெரிதுமான கட்டுப்பாடுகளை விதித்து தடை செய்யாமையால் இந்நிலை வந்துள்ளது. கடினமான இத்தருணத்தில் நமக்கு பெரும் பொறுப்பு உள்ளது என்பதை அறிந்து செயல் புரிவோம்.

எலும்பும் தோலும் கொண்ட பொம்மை போன்று பலவீன உடலுடன் வாழ்வது இழிவான வாழ்க்கையாகும். சாதாரண உயிரினங்கள், விலங்குகள், பறவைகள் போல தோல் போர்த்திய பிணங்களைப் போல வாழ்வது இழிவான வாழ்க்கையாகும். இவ்வாறு வாழ்வதால் வாழ்வின் நோக்கம் நிறைவேறாது.சிந்திக்கும் ஆற்றல் தான் மற்ற உயிரினங்களிலிருந்து மனிதனை சிறப்பித்துக் காட்டுகிறது. அதனால் தான் அவன் வசதி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கிறான். இதுவே சிந்தனையின் முதல் வெளிப்பாடு எப்போது எண்ணங்கள் சக்தி வாய்த்தாக வாழ்க்கையின் குறிக்கோளாக அதன் வடிவமாக அவைகளை பயன்படுத்தும் புரிதலாக உருவாகிறதோ அது சிந்தனையின் அடுத்த வெளிப்பாடு ஆகும். இந்த வழியையும், முயற்சியையும் தான் நாம் தத்துவ ஞானம், தத்துவம், ஆன்மீகம் என விளிக்கிறோம். கடவுளால் வழங்கப்பட்ட இந்த எண்ண வலிமையை பெரும் லட்சியத்தை அடைவதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்பவனின் வாழ்க்கை முறை முற்றிலும் மாறி, அவனுடைய ஒவ்வொரு செயலிலும் உற்சாகம் மிகுந்திருப்பதால் அவன் ஒரு முன்னுதாரணப் புருஷனாக, நிறைந்த வாழ்க்கையை வாழ்கிறான்.ReplyReply allForwardYou can't react with an emoji to this message in Trashசுயநலம், குறுகிய மனப்பான்மை கோழைத்தனம் ஆகியவை அநீதியை உருவாக்குகின்றன. சாதாரண விஷயமாகத் தோன்றும் இவை தான் அநீதியின் தாயாகும். கொலை, கொள்ளை, பலாத்காரம் ஆகியவை சட்டத்தின் பார்வையில் தண்டனைக்குரிய குற்றங்களாகும். அதே போல் சுயநலம் குறுகிய மனப்பான்மை. சமுதாய பொறுப்புகளைத் தட்டிக் கழித்தல் போன்றவை தெய்வத்தின், ஆன்மீகத்தின் சட்டப்படி பெரும் பயங்கர பாவமாகும்.

மக்களின் இவ்வித மனப் போக்கின் காரணமாகத் தான் தனி மனிதனும், சமுதாயமும் வீழ்ச்சியடைக்கின்றன. இதன் தீய விளைவுகளை நாம் அனைவரும் அனுபவிக்க நேரிடுகிறது. கடந்த காலங்களில் இவை தான் நடந்து வந்துள்ளன. அவரவர்கள் தத்ததமது குடில்களில் அமர்ந்து கொண்டு காலம் கழித்து வந்தனர்.

துஷ்டர்கள் எதிர்த்து சிறிதும் பெரிதுமான கட்டுப்பாடுகளை விதித்து தடை செய்யாமையால் இந்நிலை வந்துள்ளது. கடினமான இத்தருணத்தில் நமக்கு பெரும் பொறுப்பு உள்ளது என்பதை அறிந்து செயல் புரிவோம்.

எலும்பும் தோலும் கொண்ட பொம்மை போன்று பலவீன உடலுடன் வாழ்வது இழிவான வாழ்க்கையாகும். சாதாரண உயிரினங்கள், விலங்குகள், பறவைகள் போல தோல் போர்த்திய பிணங்களைப் போல வாழ்வது இழிவான வாழ்க்கையாகும். இவ்வாறு வாழ்வதால் வாழ்வின் நோக்கம் நிறைவேறாது.

சிந்திக்கும் ஆற்றல் தான் மற்ற உயிரினங்களிலிருந்து மனிதனை சிறப்பித்துக் காட்டுகிறது.

அதனால் தான் அவன் வசதி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கிறான். இதுவே சிந்தனையின் முதல் வெளிப்பாடு எப்போது எண்ணங்கள் சக்தி வாய்த்தாக வாழ்க்கையின் குறிக்கோளாக அதன் வடிவமாக அவைகளை பயன்படுத்தும் புரிதலாக உருவாகிறதோ அது சிந்தனையின் அடுத்த வெளிப்பாடு ஆகும். இந்த வழியையும், முயற்சியையும் தான் நாம் தத்துவ ஞானம், தத்துவம், ஆன்மீகம் என விளிக்கிறோம். கடவுளால் வழங்கப்பட்ட இந்த எண்ண வலிமையை பெரும் லட்சியத்தை அடைவதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்பவனின் வாழ்க்கை முறை முற்றிலும் மாறி, அவனுடைய ஒவ்வொரு செயலிலும் உற்சாகம் மிகுந்திருப்பதால் அவன் ஒரு முன்னுதாரணப் புருஷனாக, நிறைந்த வாழ்க்கையை வாழ்கிறான்.

# களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயம்

அனுபூதிமான்களால் சிவபூமி எனவும்; புராண இதிகாசங்களில் தட்சண கைலாயம் எனவும் சிறப்பிக்கப்படும் புண்ணிய பூமியாகிய இலங்கைத் திருநாட்டிலே அமைந்துள்ள வரலாற்றுப் பெருமைமிக்க ஆலயங்களில் களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயம் மிகப் பிரசித்தி பெற்ற திருத்தலமாகும்.

களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முச்சிறப்பும் கொண்டமைந்த அருளாட்சி மிக்க தலமாகும். இத்திருத்தலம் கதிரவன் பொற்கதிர் பரப்பியெழும் கிழக்கு மாகாணத்தின் மட்டுமாநகரின் தெற்கே சுமார் பதினாறு மைல் தொலைதூரத்தில் வெற்றிலையும் நெல்லும் பயிரினங்களும் விளையும் தொல்பதியாம் களுதாவளை என்னும் புண்ணிய பதியில் அமைந்துள்ளது. இவ்வாலயமானது வில்வம், நாவல், தென்னை, ஆல், அரசு என்பவை சூழ்ந்திலங்க எழில்மிக்க சூழலில் இயற்கையாக அமையப்பெற்ற திருநீற்றுக்கேணியை தீர்த்தக் கங்கையாக கொண்டு விளங்குகின்றது. இச்சிறப்பு மிக்க திருத்தலத்திலே கலியுக வரதனாகிய முருகப் பெருமான் கோயில் கொண்டு அருளாட்சி புரிகின்றார்.

ஆலய வரலாறு:

இத்திருத்தலம் பல நூற்றாண்டுகள் பழமை மிக்க திருத்தலமாகும். நாவல், திருக்கொன்றை, ஆல், அரசு, மருதம் முதலிய மரங்கள் நிறைந்த பசுஞ்சோலையாக இருந்தது. இந்தக் குளு குளு சோலையில் துறவியர்களும், சித்தர்களும், ஞானியர்களும், யோகியர்களும், சன்னியாசிகளும் காலத்துக்குக் காலம் கூடி சைவசமயம் பற்றிய கலந்துரையாடல்களையும், தியானத்தையும் மேற்கொண்டு வந்திருக்கின்றனர். யோக நிலையில் இறைவழிபாட்டில் ஈடுபட்டதாகவும் , மனதை ஒருநிலைப்படுத்தி இறை சிந்தனையை வளர்த்துக் கொள்ள இவ்விடத்தில் ஒரு தெய்வீக சக்தி இருந்ததனால் , இந்த தெய்வீக சக்தியினால் இவர்களும் பெருமை அடைந்ததாகவும் அறியமுடிகின்றது. ஆதலால் இவ்விடத்தில் இருந்த தெய்வீக சக்தியினால் தர்மகர்த்தா கதிரேசர் சின்னத்தம்பி சுவாமிகளும் ஈர்க்கப்பட்டார் என்ற உண்மையை உணரமுடிகின்றது.

ஆரம்பகாலத்தில் மக்கள் குடியேற்றம் இல்லாத பசுஞ்சோலையில் கிடுகினால் வேயப்பட்டதும் கட்டப்பட்டதுமான கோயிலாக அமைந்திருந்தது. இவ்வாலயத்தை மக்கள் காட்டுக் கோயில் என்றும் சிறப்பாக அழைத்தனர். காலப்போக்கில் களுதாவளை பதிவாழ் மக்களும் மெய்யடியார்களும் இணைந்து ஆகமவிதியுடன் கூடிய வளர்ச்சிப் பாதையில் கற்கோயிலாக சிற்பங்களுடன் பொலிவுற திருப்பணிபுரிந்துள்ளனர். அருளாட்சி மிக்க களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத் திருவிழா 13.07.2024 சனிக்கிழமை களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகன் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வே.கு.சபாநாயகம் குருக்களின் தலைமையில் மஹோற்சவ கொடியேற்றம் ஆரம்பமாகி 22.07.2024 திங்கட்கிழமை காலை ஆடித் திருவோண நட்சத்திரத்தில் வரலாற்று சிறப்புமிக்க திருநீற்றுக்கேணியில் தீர்த்தோற்சவத்துடன் இனிதே நிறைவு பெற்றது.

இத்திருத்தலத்தினை ஆறு குடும்ப மக்கள் நிர்வகித்து வருகின்றனர். அவர்களுக்கென விசேட பூசைகளும் திருவிழாக்களும் உள்ளன. குடும்ப மக்களின் திருவிழா வருடாவருடம் சுற்றுவட்டத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வருட மகோற்சவத் திருவிழாவின் முதலாம் நாள் திருவிழா மற்றும் இரண்டாம் நாள் திருவிழாக்கள் ஸ்ரீ முருகன் ஆலயத்தால் நடாத்தப்படும் மூன்றாம் நாள் திருவிழாவினை பேனாச்சி குடும்ப மக்களும் நான்காம் நாள் திருவிழாவினை வள்ளிநாயகி குடும்ப மக்களும் ஐந்தாம் நாள் திருவிழாவினை செட்டி குடும்ப மக்களும் ஆறாம் நாள் திருவிழாவினை சுரக்காமூர்த்தி குடும்ப மக்களும் ஏழாம் நாள் திரவிழாவை போற்றிநாச்சி குடம்ப மக்களும் எட்டாம் நாள் திருவிழாவினை பெத்தாக்கிழவி குடும்ப மக்களும் ஒன்பதாம் நாள் திருவிழாவினை ஆறு குடும்பங்களும் ஒன்றிணைந்து நடத்துவர். பத்தாம் நாள் தீர்தோற்சவம் நடைபெறும்.

இவ்வாலயத்தில் நடைபெறும் மகோற்சவத் திருவிழாவும் தீர்தோற்சவமும் மிகுந்த சிறப்பு மிக்கவையான நிகழ்வுகளாகும். இத்திருவிழாவினை சிறப்பிக்கும் முகமாக பூஜைகள், கூட்டுப்பிராத்தனை. சமய சொற்பொழிவுகள், பாற்குடப்பவனி வரிவட்டப்பவனி, அபிசேகப் பொருட்கள் பவனி, கரகம், காவடி, கோலாட்டம் முதலான ஆடல்களுடன் ஊர்வலமும் கற்பூரச்சட்டியேந்தல், அங்கப்பிரதட்சணம் முதலான நேர்த்திக்கடன்களும் இடம் பெறும்.

இவ்வாலயத்தில் நடைபெறும் திருவிழாக்களுள் ஒன்பதாம் நாள் இரவு நடைபெறும் திருவேட்டையும் திருவேட்டை நாடகமும் சிறப்புமிக்கது. இதன் போது முருகப் பெருமான் வள்ளி, தெய்வானை சமேதரராக களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையாரை தரிசனம் செய்து ஊர்வலம் வந்து ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இந்நிகழ்வு நடைபெறும் இது பக்தி பூர்வமான நிகழ்வாக இடம்பெறும். இவ்வாடித்திருகோண நட்சத்திரத்தில் நடைபெறும் தீர்தோற்சவத்திலே நாலா திசையிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தீர்த்தமாடி மகிழ்வர். இதனைத் தொடர்ந்து திருப்பொன்னூஞ்சல் ஆடல் நிகழ்வும் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஆச்சாரியார் உற்சவம் நடைபெற்று குருவான பிரதம குரு அவர்களை அவரின் இல்லத்திற்கு அழைத்து வரும் உன்னத நிகழ்வும் சிறப்புமிக்க நிகழ்வாகும் . இந்நிகழ்வு களுதாவளை கிராமமக்களின் ஒற்றுமையையும் பண்பாட்டு விழுமியங்களையும் வெளிக்கொணருகின்றன.

கலியுக வரதனாம் முருகப் பெருமானின் அருளாட்சிமிக்க ஆலயம் இயற்கையாக அமையப் பெற்ற திருநீற்றுக்கேணியின் முன்றலில் அமைந்திருப்பதோடு அன்னை வீரமாகாளியம்மனுக்கும் சந்நிதி இருப்பதும் மிகவும் சிறப்பம்சமாகும். எல்லாம்வல்ல களுதாவளை திருநீற்றுக்கேணி சிவசக்தி ஸ்ரீ முருகப் பெருமனை வணங்கி மேலான இறைஇன்பம் பெறுவோமாக!

கலைச்சுடர், இலக்கிய வித்தகர், முத்தமிழ் மாமணி
நாராயணபிள்ளை நாகேந்திரன்
ஓய்வு நிலைஅதிபர்–களுவாஞ்சிகுடி.

# பொலிஸ் மா அதிபர் நியமனம்; ஒரு வாரத்திற்குள் சுமுக தீர்வு







**சுதந்திர மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு தேவையான சூழல் உருவாக்கப்படும்**
**– ஜனாதிபதி**

சபாநாயகருடனும் பிரதமநீதியரசருடனும் கலந்துரையாடி பொலிஸ் மா அதிபர் நியமனத்தில் எழுந்துள்ள பிரச்சினைக்கு ஒரு வாரத்திற்குள் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

ஜனாதிபதித் தேர்தலை செப்டெம்பர் 21ஆம் திகதிக்கு அப்பால் வேறொரு தினத்தில் நடத்த தாம், தயாராக இல்லை எனவும், ஜனாதிபதித் தேர்தலை செப்டெம்பர் 21ஆம் திகதி நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்த ஜனாதிபதி தேர்தல் என்பது மக்களின் இறையாண்மையின் ஒரு அங்கம் எனவும் அதனை மீற இடமளிக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், அரசியலமைப்பின் 106ஆவது சரத்தின் பிரகாரம் நாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அதிகாரம் உள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு பூரண ஆதரவை வழங்குவது அனைவரினதும் பூரண கடமை எனவும் தெரிவித்தார்.

ஹோமாகம பஸ்தரிப்பு நிலைய வளாகத்தில் நேற்று நடைபெற்ற 'ஜயகமு ஸ்ரீ லங்கா' கொழும்பு மாவட்ட புலம்பெயர் தொழிலாளர் கௌரவிப்பு நிகழ்வில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில்தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி;

புலம்பெயர் தொழிலாளர்கள் நாட்டுக்கு அனுப்பிய பணத்தினாலும் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு சிறுபோக பயிர்ச் செய்கையை மேற்கொண்ட விவசாயிகளினாலும் தான், இன்று நாம் இந் நிலையில் இருக்க முடிந்துள்ளது. இந்த இரண்டு தரப்புக்களும் இல்லாவிட்டால் இன்று நாம் ஒரு நாடாக வெற்றிகரமாக முன்னேறியிருக்க முடியாது.

இந்த நாட்டை பொறுப்பேற்ற போது நாட்டில் நிலவிய நிலைமையை நாம் அனைவரும் அறிவோம். நாங்கள் ஒரு கட்சிக்குச் சொந்தமான அரசாங்கமாக செயற்படவில்லை. ஜனாதிபதி என்ற வகையில் அனைவரையும் ஒன்றிணைத்து புதிய அரசாங்கத்தை உருவாக்கினேன். எனவே, இந்த அரசாங்கம் சவால்களை ஏற்றுக்கொள்ளும் பலம் கொண்ட அரசாங்கம். உலக நாடுகள் மற்றும் நிதி நிறுவனங்களின் உதவியுடன் இந்த நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த ஆரம்பித்தோம். நாட்டுக்கு டொலர்களை வழங்கிய புலம்பெயர் சமூகத்தை நாம் மறக்க முடியாது. அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

இவ்வாறாக நாம் நாட்டின் பொருளாதாரத்தை ம் முன்னோக்கி கொண்டு வந்திருக்காவிட்டால், இன்று மக்களுக்கு இவ்வாறான சலுகைகள் கிடைத்திருக்காது. வெளிநாட்டிலிருந்து திரும்பிய தொழிலாளர்களுக்கு தொழில் ஆரம்பிப்பதற்கு உதவ வேண்டிய கடமை எமக்குள்ளது.

அன்று அவர்கள் செய்த சேவையினாலே, இன்று நாட்டு மக்களுக்கு இவ்வாறான நிவாரணங்களை வழங்க முடிந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் கடன் வழங்கும் நாடுகள் மற்றும் பிணைமுறி உரிமையாளர்களுடன் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தை நடத்தியதால், வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்பு இப்போது எமக்கு கிடைத்துள்ளது.

இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதன் மூலம், ஜப்பான் அரசாங்கத்தின் ஆதரவுடன் இந்த நாட்டில் தொடங்கப்பட்டு பாதியில் நிறுத்தப்பட்ட சகல திட்டங்களையும் மீண்டும் தொடங்குவதாக ஜப்பான் அறிவித்தது.

அத்துடன், திருகோணமலை துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட பாரிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் இணக்கம் காணப்பட்டுள்ளது.

மேலும், பல வலுசக்தித் திட்டங்களை செயல்படுத்தவும் அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. எனவே ஜப்பான் மற்றும் இந்தியாவுடன் இணைந்து இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க நாம் தற்போது தயாராக உள்ளோம்.

மேலும், சீனாவையும், ஆசிய அபிவிருத்தி வங்கியையும் தங்கள் திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளேன். இதன் மூலம், நாட்டில் நிர்மாணத் துறை பெரும் முன்னேற்றம் அடைந்து வருகிறது.

நாடென்ற வகையில் எம்மால் மீண்டும் எழுச்சி பெற முடியாது என்று சிலர் நினைத்தார்கள். தேர்தலை நடத்த முடியாது போகும் என்றனர். சர்வாதிகார நிலை உருவாகும் என்றனர். தற்போது தேர்தலை நடத்துகிறோம். இன்னும் சிலர் தேர்தலை நான் ஒத்திவைக்கப் போவதாக கூறினார்கள்.தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்பதற்காக, நானே முதலில் சென்று கட்டுப்பணம் செலுத்தினேன்.

இந்த நெருக்கடி நிலையில் என்ன நடக்கும் என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். பொலிஸ்மா அதிபரை நியமித்த முறை தவறானது என்று கடந்த வாரம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உச்ச நீதிமன்றத்திற்கு மேன்முறையீடு செய்யப்பட்டு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் பிரகாரம் உச்ச நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுவது அவசியமானது. அதன்படி, சம்பிரதாய முறைப்படி மேன்முறையீடு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டது. இது ஒன்றும் புதிய விடயமல்ல.

ஆனால், அதே நேரத்தில், பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்படுவதாக உச்ச நீதிமன்றம் அறிவித்தது. அது பற்றிய தகவல்கள் இருக்கவில்லை. தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் பொலிஸ்மா அதிபர் தொடர்பில் உத்தரவு வழங்கப்பட்டதாக வெளிப்படையாகத் தோன்றலாம்.

இந்த விடயம் தொடர்பில் மறுநாள் எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தார். அந்த சமயம் சபாநாயகர் பிரசன்னமாகியிருக்கவில்லை. சபாநாயகர் வந்ததும் பிரதமர் அது தொடர்பில் கேள்வி எழுப்பினார். அரசியலமைப்பு பேரவை பாராளுமன்றத்திற்கே சொந்தமானது. எனவே அரசியலமைப்பு சபையின் உள்ளக செயற்பாடுகளை நீதிமன்றம் ஆராய முடியாது. இந்நியமனம் சட்டபூர்வமானது எனவும் சபாநாயகர் அறிவித்தார். நியமனம் சட்டவிரோதமானது என்றும் அதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. மறுபுறம், இது சட்டபூர்வமானது என்று பாராளுமன்றம் அறிவித்துள்ளது. செப்டம்பர் 21ம் திகதி தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய பிரச்சினையாக மாறலாம்.எனவே இது குறித்து மகா சங்கத்தினருடன் கலந்துரையாடினேன். தேர்தல் ஆணைக்குழுவுடனும் ஆராயப்பட்டது. இதற்கு தீர்வு காண வேண்டும் என அனைவரும் தெரிவித்தார்கள்.

## கடன் உதவிகள் நிறுத்தப்பட்டால்...

போட்டியிடுகிறேன். இந்த முடிவை எடுப்பதற்கு முன்னர் யோசித்தேன். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, இதைப் பற்றி அதிகம் சிந்திக்க வேண்டியிருந்தது. அப்போது பிரதமர் பதவி கொடுக்க யாரும் இல்லாததால் என்னை பிரதமராக்க அழைத்தனர்.

உங்கள் கஷ்டத்தைப் பார்த்தே நான் பிரதமர் பதவியை அன்று ஏற்றேன். நாடு முழுவதும் வரிசைகள் இருந்த காலமது. இந்த சவாலை ஏற்று நாட்டை கட்டியெழுப்ப அன்றே முடிவு செய்தேன். சவால்களில் இருந்து ஓடுபவன் நானில்லை. உலகத்திடம் உதவி கேட்டு வேலை செய்ய ஆரம்பித்தேன். இந்த பயணத்தை நடத்தும் போது, ஆதரவு கிடைக்க ஆரம்பித்தது. உண்மையில் நாம் திவால் நிலையிலிருந்து வெளியேறும் நேரம் இது. இதற்காக கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. இன்று அது வெற்றியடைந்துள்ளது.

ரூபாய் இப்போது வலுவாக உள்ளது. நாட்டில் போதுமான உணவு உள்ளது. எரிபொருள் விலை குறைந்துள்ளது. ஆனால் இன்னும் பிரச்சினைகள் உள்ளன. மக்கள் கஷ்டப்பட்டு வாழ்கின்றனர் . வங்கிகளில் தங்கப் பொருட்களை அடகு வைப்பது அதிகரித்துள்ளது. அந்த சோகத்தை நான் மறக்கவில்லை. தங்கப் பொருட்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. அமைதியைக் கொண்டுவந்தேன். இருபது இலட்சம் நில உரிமை வழங்கப்படும். தோட்டங்களில் உள்ள சுண்ணாம்பு அறைகள் கிராமங்களாக மாற்றப்படுகின்றன. சிறிய மனிதனுக்கு உரிமை வழங்குவதே இந்த அரசின் திட்டம். எங்கள் திட்டத்தின் முடிவில், நீங்கள் அனைவரும் பணக்காரர்களாக இருப்பீர்கள்.

கிராமங்களில் விவசாயம் நவீனமயமாக்கப்பட வேண்டும். நாட்டின் ஸ்திரத்தன்மை காரணமாக இத்தகைய இடத்தை அடைய முடிந்தது. தற்போது நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து வருகிறது. எங்களை ஆதரித்த நாடுகளின் ஐ.எம்.எஃப். நிபந்தனைகளுக்கு ஏற்ப நாம் செயல்பட வேண்டும். அந்த சட்டகத்திற்கு வெளியே வேலை செய்பவர்கள் பொய்யர்கள்.

இந்த பணம் இல்லாவிட்டால் நாடு மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்லும். பொய் சொல்லி நாட்டை வீழ்த்த முடியாது. நாடு வீழ்ந்தால், சவாலை ஏற்க ஆட்கள் இல்லை. எனவே இந்த கடினமான பயணத்தை மேற்கொள்வோம். போலி யுகம் முடிவுக்கு வர வேண்டும்.நான், இளைஞர்களைப் பற்றி நினைக்கிறேன். அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைய வேண்டும். நாட்டின் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற அனுமதிக்க முடியாது.

## ஜனாதிபதி வேட்பாளர்...

என எழுப்பிய கேள்விக்கு திங்கட்கிழமை வரை சற்று பொறுங்கள் என முன்னாள் ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

தம்மிக்க பெரேராவின் பெயர் அடிபடுகிறதே? அவர் பொதுஜன பெரமுன கட்சியின் மேடைகளில் அமர்ந்திருக்கிறாரே? என எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த முன்னாள் ஜனாதிபதி, அவர் எங்கள் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்தானே எனவும் பதிலளித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் நிற்கிறாரே; அவருக்கு ஒத்துழைப்பு வழங்கும் தீர்மானம் உள்ளதா? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,எமது கட்சி நிறுத்தும் வேட்பாளருக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். அனைத்தையும் கட்சியே தீர்மானிக்க வேண்டும். எமது கட்சி எதை தெரிவிக்கிறதோ அதற்கே நாம் செவிமடுப்போம். ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தால் அதை நாம் முழுமையாக ஆதரிப்போம்.மாறாக,அவருக்கு எதிராக ஒருவரை நிறுத்துவோம் என கட்சி தீர்மானித்தால் அதற்கே நாம் இணக்கம் தெரிவிப்போம் என்றும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

## மியன்மார் பிரதமருடன்...

பாதுகாப்புச் செயலாளர் தனது விஜயத்தின் ஓர் அங்கமாக மியன்மார் பிரதமரைச் சந்தித்தார்.மியன்மார் அரச நிர்வாக சபை அலுவலகத்திற்கு விஜயம் செய்த பாதுகாப்புச் செயலாளரை,மியன்மார் பிரதமர் வரவேற்றார்.

இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவு, இராஜதந்திர உறவுகள் மற்றும் மத விவகாரங்களில் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து இச்சந்திப்பில் பேசப்பட்டது. மேலும்,பயிற்சி வாய்ப்புக்களை பரிமாறிக்கொள்வது மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பை மேம்படுத்துதல் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மியன்மாரில் பயங்கரவாத குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள சைபர் கிரைம் பகுதியில், தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை விடுவிக்க உதவுமாறும் பாதுகாப்புச் செயலாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## தேர்தல் சட்டங்களை...

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலின் எதிர்வரும் நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு அறிவிக்கவும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.இதன்படி எதிர்வரும் காலங்களில் அவர்களை அழைத்து இது தொடர்பில் தெளிவுபடுத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது. இதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் எதிர்வரும் ஓகஸ்ட் (07) நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## ஐக்கிய மக்கள் சக்தியுடன்...

மைத்திரிபால சிறிசேன தெரிவித்து வரும் கூற்று, அடிப்படையற்றது மற்றும் உண்மைக்குப் புறம்பானது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் எவ்வித முன்னெடுப்புகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும் அவர் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

## 1250 முன்னணி...

சிநேகபூர்வ வகுப்பறைகளாக மாற்றும் வைபவத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் இவ்விடயங்களை தெரிவித்தார்.இங்கு உரையாற்றிய அவர்:புதிய கல்வி முறை தொடர்பான முன்னோடித் திட்டம் அடுத்த வருடம் அமுல்படுத் தப்படும்.இதற்கான ஏற்பாடுகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன.இப்புதிய திட்டம் தரம் 01, தரம் 06 மற்றும் 10 வகுப்புகளுக்கு அமுல்படுத்தப்படும். இதற்கு தேவையான கற்றல் தொகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. தேவையான புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு அச்சுபதிவுக்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தேர்தல்கால செயற்பாடுகளை...

இச்சுற்றறிக்கையை இன்னும் ஓரிரு தினங்களில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தல் காலத்தில் அரச அதிகாரிகள் எவ்வாறு செயற்பட வேண்டும், நிறுவனங்களின் செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பிலான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் இந்த சுற்றறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், தேர்தல் காலங்களில் ஊடக நிறுவனங்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பிலும் இந்த சுற்றறிக்கையில் வழிகாட்டல்கள் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இயற்கை அனர்த்தம்:...

உள்ளூராட்சி சபை அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்னவின் கையொப்பத்துடன் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களுக்கு இந்த சுற்றுநிருபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் தமது வசிப்பிடத்திலிருந்து அலுவலகத்துக்கு பயணிக்கும் பொது போக்குவரத்து சேவை தடைப்பட்டிருத்தல் காரணமாக கடமைக்கு சமுகமளிக்காதவர்கள், வீதி பாதிப்பு அல்லது அனர்த்தங்களால் பாதிப்புகள் ஏற்பட்டு அல்லது இடம்பெயர்வு காரணமாக கடமைக்கு வராவதவர்கள் ஆகியோருக்கு இந்த விடுமுறையை வழங்குவதற்கு குறித்த சுற்றுநிருபம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க சம்பந்தப்பட்ட அதிகாரி தமக்கான விசேட விடுமுறையை பெற்றுக் கொள்ள முடியும்.

## ஜனாதிபதி பதவியிலிருந்து ரணில்...

கருத்து தெரிவித்த அவர்; எமது கட்சி உலகளாவிய பசுமைப் பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.

இதில் நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான படித்த அறிவார்ந்த இளைஞர்கள் உறுப்பினர்களாக இணைந்துள்ளனர். நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கான வியூகஞானம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தவிர வேறு எந்த வேட்பாளரிடமும் இல்லை. இதை எமது உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். வேறு எவரேனும் இந்த பதவியில் இருந்தால், நாடு மீண்டும் குழப்ப நிலைக்கு உள்ளாகும்.இவ்வாறு, நவ ஜனதா கட்சியின் தலைவர் சுகீஸ்வர பண்டார மேலும் கூறினார்.

# இன்றைய பலன்கள்
(29.07.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
உங்களது செயற்பாடுகளில் உற்சாகம் காணப்படும். நினைத்த வேலைகளை தீவிர முயற்சியுடன் செய்து முன்னேறுவீர்கள்.

**ரிஷபம் :**
செயல்கள் செலவற்றில் வெற்றி பெறுவீர்கள். எதிர்பார்க்கும் முக்கிய காரியங்கள் தள்ளி போகலாம்.

**மிதுனம்:**
செய்யும் காரியங்களில் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். எதிர்பார்க்கும் வளம் கைக்கு வந்து சேரும்.

**கடகம்:**
உங்கள் முயற்சிகள் சிலவற்றிலே எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை அடைவீர்கள். எதிர்பார்த்து காத்திருக்கும் பணவரவு தாமதமாகலாம் .

**சிம்மம்:**
செய்யும் செயல்களில் கவனம் அவசியம். உடனே நடக்க வேண்டிய காரியங்கள் தள்ளி போய் கவலை அளிக்கும்.

**கன்னி:**
எதிலும் அதிக கவனம் செலுத்துவது நல்லது. முக்கியமான காரியங்களை கொஞ்சம் தள்ளிப் போடுங்கள்

**துலாம்:**
செய்யும் செயல்களில் கவனமும் நிதானமும் தேவை. வெற்றி பெற தகுந்த நண்பர்களின் உதவியுடன் காரியங்களை தீவிரமாக முன்னெடுப்பீர்கள்.

**விருச்சிகம்:**
பணம் கொடுக்கல் வாங்கல்களில் நிதானமாக முடிவெடுப்பீர்கள். நீங்கள் முன்னெடுக்கும் காரியங்கள் வெற்றியாகும்.

**தனுசு:**
நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் சிறப்பான பலன்களை பெறுவீர்கள். வரவேண்டிய பண வரவுகள் தாமதம் இல்லாமல் வந்து சேரும்.

**மகரம்:**
பல நாட்கள் முடியாமல் இருந்த காரியம் ஒன்று நிறைவேறி மகிழ்வீர்கள். சில செயல்களில் தீவிரமான முயற்சியோடு ஈடுபட்டு வெற்றியை நோக்கி முன்னேறுவீர்கள் .

**கும்பம்:**
தீவிர முயற்சியோடு செயல்பட்டு காரியங்களில் வெற்றி அடைவீர்கள். எதிர்பார்க்கும் தனவரவு சரியான நேரத்தில் கைக்கு கிடைக்கும்.

**மீனம்:**
பல காரியங்களில் தீவிரமாக முயற்சி செய்தாலும் சில வற்றிலையே நீங்கள் எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்கும்.

## சுற்றுலாப்பயணிகளின்...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

2023 ஆம் ஆண்டில், 2500 ஹெக்டெயார் நிலப்பரப்பு கொண்ட கல்லோயா சுற்றுச்சூழல் பூங்கா புதிய சுற்றுலாத்தளமாக பொதுமக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டது. மேலும், தற்போது சுற்றுலா பயணிகளை கவர்ந்து வரும் சிங்கராஜ வனப்பகுதியில் உள்ள குடவா தொரண எல்ல நுழைவு வாயிலில் சுற்றுலா பயணிகளுக்காக தகவல் மையம் திறக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டில், நக்கிள்ஸ் சுற்றுலா வனப்பகுதியின் இழுக்கும்புர பகுதியில் மாணிகல வன விடுதி கட்டப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது. கண்டி உடவத்தகெலேயில் சுற்றுலாப் பயணிகளுக்காக சைக்கிள் பாதை திறக்கப்பட்டது. பண்டாரவளை எல்ல வன இல்லம், புத்தளம் மாவட்டத்தில் உள்ள கல்வில சுற்றுச்சூழல் பூங்கா போன்றவற்றையும் இவ்வருடம் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைக்க முடிந்தததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## வழிபாடுகளில் பங்கே...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாணவர், பூஜைக்கு முன்பதாக குளிப்பதற்கு சென்றபோதே இந்த பரிதாப சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மரணமடைந்த மாணவன் ஹப்புத்தளை பண்டாரஎளியவத்த பகுதியைச் சேர்ந்த எ. மோகன்ராஜ் சரண் என்றும் குறித்த மாணவர் ஹப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயத்தில் 11 ஆம் ஆண்டில் கல்வி கற்பவர் என்றும், இவ்வருடத்தில் கல்வி பொதுதராதர சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஆயத்தமாகி வரும் ஒருவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## வெளிநாட்டு...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து அவரைக் கைது செய்துள்ளதாகவும் சுங்கத்திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சீவலி அருக்கொட தெரிவித்துள்ளார். மேற்படி பெண்ணிடமிருந்து 29 ஆயிரத்து 200 சிகரெட்டுக்களை சுங்கத்திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்த அவர், அதன் சந்தைப் பெறுமதி 43 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் அதிகாரிகளை...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார். அதேவேளை,தேர்தலுக்கான அடுத்த கட்ட ஆவணங்கள் மற்றும் பத்திரங்களை அச்சிடும் பணிகள் தற்போது அரசாங்க அச்சகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்பதிவு செய்தோருக்கு...

வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

## அமைச்சர் பந்துல...

தொகுதி கூட்டம் கூட்டப்பட்டதை ஏற்க முடியாது. இது தவிர, இக்கூட்டம் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஜனக்க வெலிவத்தவின் வீட்டில் இக்கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் எடுத்த இந்த முடிவுகளை,ஹோமாகம புத்திசாலி மக்கள் எந்தவகையிலும் அனுமதிக்கமாட்டார்கள் எனவும் அமைச்சர் பந்துல குறிப்பிட்டுள்ளார்.

## சுற்றுலா செல்வதற்கான...

சுற்றுலாப் பயணிகளுக்கான அதிசொகுசு ரீதியிலான வசதிகள் மற்றும் இயற்கை அழகை கண்டுகளிக்கும் விதத்தில் 22 தேசிய பூங்காக்கள் என்பன இலங்கையில் உள்ளதாகவும் ஃபோர்ப்ஸ் நாளிதழ் கூறுகிறது.

## ஆசிய மகளிர் T20...

ஒன்பதாவது ஆசிய மகளிர் T20 கிரிக்கட் போட்டி கிண்ணத்தை Chamari Athapaththu தலைமையிலான இலங்கை அணி கைப்பற்றியுள்ளது. ரங்கிரி தம்புள்ளை கிரிக்கெட் மைதானத்தில் இந்திய மகளிர் அணிக்கு எதிராக நேற்று (28) இடம்பெற்ற ஆசியக் கிண்ண இருபதுக்கு 20 ஓவர் இறுதிப்போட்டியில் இலங்கை அணி, இந்திய அணியை 08 விக்கெட்டுக்களால் வீழ்த்தி கிண்ணத்தை முதல் முறையாக கைப்பற்றியது.

ஆசிய கிண்ணத்தை வென்ற சமரி அதபத்து உள்ளிட்ட இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாழ்த்துத் தெரிவித்தார்."உங்களுடைய தோல்வியற்ற பயணத்திற்கு உங்கள் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் கூட்டு செயற்பாடு சான்றாக அமைகிறது. நீங்கள் எமது நாட்டை கௌரவப்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி பாராட்டு தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி தேர்தலில் அன்று ரணில் வெற்றியீட்டியிருந்தால், இன்று தமிழ் மக்களின் வாழ்வியல் சிறப்பானதாக அமைந்திருக்கும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

*(கரவெட்டி தினகரன் நிருபர்)*

மீண்டும் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவே தெரிவு செய்யப்பட வேண்டும் என தாம் விரும்புவதாகவும் அதுவே தற்கால சூழலுக்கும் தமிழ் மக்களுக்கும் சரியான தெரிவாக இருக்கும் என்றும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ் மாவட்டத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மாவட்ட மற்றும் பிரதேச பொறுப்பாளர்கள், முக்கியஸ்தர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய தேர்தல் களத்தில் பல தரப்பட்ட போட்டியாளர்கள் போட்டியிடவுள்ளதாக தெரிவித்தாலும் குறித்த ஒரு சிலருக்கிடையே தான் கடும் போட்டி நிலவும் என நினைக்கின்றேன்.



இதில் தற்போதைய ஜனாதிபதியே முதன்மையானவராக இருப்பார். குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக வருவதற்கு வாய்ப்பளிப்பதானது தமிழ் மக்கள் விரைவில் கடந்த காலங்களிலிருந்து விடுபட்டு சிறப்பான எதிர்காலத்தை உருவாக்க வாய்ப்பளிக்கும் ஒன்றாக இருக்கும் என நினைக்கின்றேன்.

2005 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டிருந்த பொழுது அன்றே அவருக்கு அந்த வாய்ப்பை கொடுத்திருந்தால் இன்று தமிழ் மக்களின் வாழ்வியல் சிறப்பானதாக அமைந்திருக்கும். ஆனால் அன்று தவறவிட்டுவிடப்பட்டுவிட்டது. ஏனென்றால் தமிழ் மக்களது வாக்குகள் ஊடாகத்தான் ஜனாதிபதி ஒருவர் வெல்லக்கூடிய வாய்ப்பு 2005 இல் இருந்தது. அன்று அந்த வாய்ப்பை ரணில் விக்கிரமசிங்கவுக்கு கொடுக்கப்பட்டிருந்தால் இந்த பாழாய்ப்போன யுத்தமோ அல்லது இத்தனை துன்பங்களையோ துயரங்களையோ இடப்பெயர்வுகளையோ எமது மக்கள் சந்தித்திருக்க மாட்டார்கள் .

அதே நேரம் எமது மக்களுக்கு தற்போதும் ஜனாதிபதி தேர்தல் என்ற வாய்ப்பு கிடைக்கவுள்ளது. அந்த வாய்ப்பை பயன்படுத்தி நாங்கள் இன்றைய ஜனாதிபதியுடன் சேர்ந்து பயணிப்பதன் ஊடாக நாடும் எங்களுடைய மக்களும் அதிக பயன்களை பெறலாம் என நான் நம்புகின்றேன்.

கடந்த இரண்டு வருடத்திற்குள் ஜனாதிபதி தன்னுடைய ஆற்றலால் தன்னுடைய செயல்பாட்டால் நாட்டுக்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கி தந்திருக்கின்றர்.

அதனால் அவருக்கு நாங்கள் இன்னும் ஒரு சந்தர்ப்பத்தை கொடுக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்.

அந்த வகையில் எதிர்வரும் காலங்களிலும் அந்த சந்தர்ப்பத்தை ரணில் விக்கிரமசிங்கவுக்கு கொடுப்பதன் ஊடாகவும் அவரோடு சேர்ந்து பயணிப்பதன் ஊடாகவும் எமது மக்கள் எதிர்கொள்ளுகின்ற பிரச்சினைகளிலிருந்து வெளியில் வரலாம் என்று நினைக்கின்றேன் என்றார்.

## வடக்கின் உதயம்

# யாழில் இருந்து கஞ்சா கடத்தியவர் டிப்பருடன் கைது



*(யாழ்.விசேட நிருபர்)*

யாழ்ப்பாணத்தில் இருந்து டிப்பர் வாகனத்தில் கஞ்சா போதைப்பொருளை கடத்தி சென்ற நபரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று முன்தினம் சனிக்கிழமை கிளிநொச்சி பூநகரி பகுதியை நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்தினை சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் பொலிசார் வழிமறித்து சோதனையிட்டனர்.

அதன் போது, டிப்பர் வாகனத்தினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 கிலோ 485 கிராம் கஞ்சா போதைப்பொருளை பொலிசார் மீட்டனர்.

அதனை அடுத்து டிப்பர் வாகன சாரதியை பொலிசார் கைது செய்தனர்.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனம், மீட்கப்பட்ட கஞ்சா போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்ட நபர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார்.

# தீவக கல்வித் தரத்தை மேம்படுத்த அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை



*(யாழ். விசேட நிருபர்)*

தீவக பிரதேச கல்வித்துறையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்கும், கல்வித் தரத்தை மேம்படுத்தவும் துறைசார் அதிகாரிகளுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார்.

யாழ் மாவட்டத்தின் தீவக கல்வி வலைய பாடசாலைகளில் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் ஆளணி பற்றாக்குறை நிர்வாக பிரச்சினைகள் காணப்படுவதாகவும் மாணவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதில் இவ்வாறான காரணிகள் பல தாக்கங்களை ஏற்படுத்துவதாகவும் பலதரப்பட்டவர்களாலும் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது.

அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலில் தீவக பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் இருதரப்பினரும் விரிவாக ஆராய்ந்திருந்தனர்.

இந்நிலையில் தீவக கல்வி வலையங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வித்தர நிலையை மேம்படுத்தி மாணவர்களுக்கு சிறந்ததோர் கல்விச் சேவையை பெற்றுக்கொடுக்க முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

குறிப்பாக தீவக கல்வி வலையத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் தற்போது கல்வி நிலை வீழ்ச்சி அடைந்துள்ளதை புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்நிலையில் அது தொடர்பில் துறைசார் அதிகாரிகளுடன் விசேடமாக ஆராய்ந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கல்வி நிலைகளை மேம்படுத்தும் நோக்கில் துறைசார் கல்வி நிலை அதிகாரிகாரிகளுக்கு பல்வேறு ஆலோசனைகளையும் எடுத்துக் கூறியிருந்தார்.

அத்துடன் கல்வித்துறையில் இருக்கக்கூடிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஏதுநிலைகள் குறித்து துறைசார் அமைச்சின் கவனத்திற்கு கொண்டுசென்று தீர்வுகளை காண்பதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது

# சாவகச்சேரி வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைப் பிரிவு ஆரம்பம்

*(சாவகச்சேரி விசேட நிருபர்)*

அடுத்த வாரம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சத்திர சிகிச்சைப் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியன திறக்கப்படவிருப்பதாக வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ரஜீவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சைக்கூடம் ஆகியவற்றை இயக்க ஆளணி மற்றும் மின்சாரம் தடைப்படும் வேளையில் மாற்றீடான மின்பிறப்பாக்கி ஆகியன அவசியமானதாக காணப்பட்ட நிலையில், தற்போது 400 கிலோ வாற்ஸ் வலுவுடைய நிரந்தர மின்பிறப்பாக்கி கிடைக்கப்பெற்றுள்ளது.

அதேநேரம், அடுத்த வாரம ளவில் ஆளணிப் பற்றாக்குறையும் நிரப்பப்படவுள்ளதால் அ டுத்தவார நடுப்பகுதியிலிருந்து புதிய அலகுகளை இயக்க உத்தேசித்துள்ளோம் எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வெளிநோயாளர் பிரிவு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு ஆகியன மீண்டும் வைத்தியசாலையின் முன் பகுதிக்கு மாற்றப்படவிருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# பாடசாலைக்கு கஞ்சாவுடன் சென்ற மாணவன்

*(ஓமந்தை விஷேட நிருபர்)*

முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் அமைந்துள்ள பாடசாலைக்கு கடந்த வியாழக்கிழமை (25.07.2024) மாணவன் ஒருவர் கஞ்சாவுடன் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இப் பாடசாலையில் தரம் 8 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவனொருவன் தனது வீட்டிலிருந்து பாடசாலைக்குச் செல்லும் போது சிறு கஞ்சா பொதி ஒன்றினை கொண்டு சென்றிருந்தான். இதனை அவதானித்த சக மாணவன் பாடசாலை அதிபரிடம் தகவலை தெரிவித்தான் இது தொடர்பாக குறித்த மாணவனிடம் விசாரணை மேற்கொண்ட பாடசாலை அதிபர், மாணவனை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளார்.

அத்தோடு பொலிசாரால் எங்கிருந்து கஞ்சா கிடைக்கப்பெற்றது, வீட்டில் பாவனை இடம்பெறுகின்றதா என பல்வேறு கோணங்களில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# யாழில் வாள் வெட்டு: இளைஞன் படுகாயம்; நான்கு இளைஞர்களுக்கு விளக்கமறியல்

*(யாழ்.விசேட நிருபர் )*

யாழ்ப்பாணம் மருதனார்மட பகுதியில் இளைஞன் ஒருவரை வாளினால் வெட்டி படுகாயங்களுக்கு உள்ளாக்கிய குற்றத்தில் கைதான 4 இளைஞர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். மருதனார்மடம் சந்தியில் வெற்றிலை வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் இளைஞன் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை தனது வியாபார நடவடிக்கையை முடித்துக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை, வன்முறை கும்பல் ஒன்று இளைஞன் மீது வாள் வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச்சென்றிருந்தது. தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞன், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சுன்னாகம் பொலிசார், தாக்குதலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்களை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய வேளை, அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டுள்ளது. முன் பகை காரணமாகவே இந்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தமது விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.


## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 170,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 யூலை 05ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124K014 | LKA18225A316 | LKA36425H018 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 55,000 | 55,000 | 60,000 | 170,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 யூலை 31
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஒகஸ்ட் 02
வழங்கப்படும் திகதி : 2024 ஒகஸ்ட் 02
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 யூலை 31 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

✷ பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் : 047/T/2023**

**கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் மற்றும் மத்தள இராஜபக்ஷ சர்வதேச விமானநிலையத்திற்காக வெடிப்புத் தடயக் கண்டறியும் ஒன்பது பொறியமைவுகளை (09) வழங்குதல், பொருத்துதல் மற்றும் சேவை வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக விலைக்கேள்விகளை அழைத்தல்**

விலைக்கேள்வியாளரால் முன்வைக்கப்படுகின்ற விலைக்கோரல் கடிதத்துடன் திருப்பிச் செலுத்தப்படாத விலைக்கேள்வி கட்டணமான ரூபா முப்பத்தைந்தாயிரம் (ரூபா.35,000.00) தொகையைச் செலுத்தி வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய ஆவணங்களிலிருந்து விலைக்கேள்விகள் முன்வைக்கப்பட்ட வேண்டும்.

2024/09/17 ஆம் திகதி முதல் பணிபுரியும் அலுவலக நேரங்களில் 0900 மணி முதல் 1500 மணி வரை விலைக்கேள்வி ஆவணங்கள் வெளியிடப்படும்.

2024/09/18 ஆம் திகதி 1400 மணிக்கு விலைக்கேள்விகளை முன்வைக்கும் தொழிற்பாடு முடிவடைந்ததும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அவை திறந்து வைக்கப்படும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் தவிசாளரின் பேருக்கு கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடிய வகையில் இலங்கை மத்திய வங்கியின் மூலம் ஏற்றுக்கொள்ளக்கூடிய இலங்கைக்குள்ளே செயற்படுகின்ற வங்கியொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா நான்கு மில்லியன் (ரூபா 4,000,000.00) பெறுமதியான வங்கி பிணைமுறியுடன் விலைக்கேள்விகள் சமர்ப்பித்தல் வேண்டும்.

2024/09/06 திகதி 0930 மணித்தியாலத்துக்கு பாதுகாப்பு நிர்வாகக் கட்டிடத்தின் கலந்துரையாடும் கூடத்தில் ஆரம்ப விலைக்குறிப்பீடு தொடர்பில் நடாத்தப்படுகின்ற விழிப்பூட்டும் நிகழ்ச்சிக்காக ஒரு விலைக்கேள்வியாளரால் அதிகபட்சம் மூன்று (03) பங்கேற்பாளர்களை கலந்துகொள்ள வைக்க முடியும்.

தொலைபேசி இலக்கம் 0112264103/0112264128 அழைத்து வழங்கலதொடர் முகாமைத்துவ பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க ஊடாக அல்லது www.airport.lk எமது இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும்**
**விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் கட்டுநாயக்க**



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனி 2024.07.27
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5547 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 44,857,896.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 4 9 6 6 5 6

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 122 — ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 6 6 5 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3789 — சீட்டிழுப்பு திகதி 2024.07.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.67,613,475.12
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 42 60 66 67 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 06281

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1895 — 2024.07.27 — 90322 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 440,302,190.00
ஆங்கில எழுத்து G — சுப்பர் இலக்கம் 20 — வெற்றி இலக்கங்கள் 19 31 41 77
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.27 — சீட்டிழுப்பு இலக்கம் 0373
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 4 3 7 7 8 8 — L7 எழுத்து R
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,527,958.48

ராசி சுப பலன் — திகதி 2024.07.27 — சீட்டிழுப்பு இலக்கம் 856 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,485,032.00
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 12 25 31 61 — தனயோக இலக்கம் 87641 — நாளுக்கான விதி எண் 02

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1577 — 2024.07.27 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,275,480.32
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 21 66 73 77 — விசேட எழுத்து Y — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 19347



ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2024.07.26
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5546 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 44,262,456.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 5 8 3 9 4 9

அத சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 121 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 3 9 4 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3788 — சீட்டிழுப்பு திகதி 2024.07.26 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,426,385.52
ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 30 39 51 64 — விசேட எழுத்து C — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 15589

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1894 — 2024.07.26 — 14420 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 440,157,614.00
ஆங்கில எழுத்து N — சுப்பர் இலக்கம் 17 — வெற்றி இலக்கங்கள் 02 05 11 50
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP — திகதி 2024.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் 0372
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 2 2 1 9 0 7 — L7 எழுத்து Y
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 33,480,078.88

ராசி சுப பலன் — திகதி 2024.07.26 — சீட்டிழுப்பு இலக்கம் 855 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,471,672.40
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 13 21 49 56 — தனயோக இலக்கம் 68290 — நாளுக்கான விதி எண் 05

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1576 — 2024.07.26 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 103,045,161.92
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 50 71 75 78 — விசேட எழுத்து W — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 33622

# ஜனாதிபதி ரணிலின் வெற்றியில் தமிழ் பேசும் மக்களும் பங்காளிகளாக மாற வேண்டும்

## இரத்தினபுரி ஐ.தே.க அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார்



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியாகியுள்ளது. எனவே, தமிழ் பேசும் மக்களும் அவரின் வெற்றியில் பங்காளிகளாக மாற வேண்டும் என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்குவதற்கு உத்தேசித்துள்ள தமிழ்த் தேசியக் கட்சிகள் தமது முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும், ஜனாதிபதிக்கு ஆதரளிப்பது குறித்து சாதகமாக பரிசீலிக்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பில் சுப்பையா ஆனந்தகுமார் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதி தேர்தலில் தான் போட்டியிடவுள்ளதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிப்படுத்தியுள்ள நிலையில் அவருக்கான ஆதரவு பெருகி வருகின்றது.

எதிரணிகளால் நடத்தப்பட்டுள்ள இரகசிய கருத்து கணிப்புகளில்கூட ரணிலுக்கான ஆதரவு அலை அதிகரித்துவருவது தெரியவந்துள்ளது.

ஏனெனில், நாட்டை மீட்கக்கூடிய அரசியல் அனுபவமும், ஆளுமையும் ரணில் விக்கிரமசிங்கவிடமே உள்ளது.

இது மக்களுக்கு தெரியும்.

இந்த ஜனாதிபதி தேர்தலானது இலங்கையின் தலைவிதியை தீர்மானிக்கப்போகின்ற தேர்தலாகும். எனவே, சவாலை ஏற்காது ஓடிய தலைவர்களையும் அனுபவமில்லாத வாய்ச்சொல் வீரர்களையும் மக்கள் நம்ப தயாரில்லை. சவாலை ஏற்று, வரிசை யுகத்துக்கு முடிவு கட்டி, நாட்டை மீட்டெடுத்து தற்போது சிறந்த வழியில் ஜனாதிபதி நாட்டை வழிநடாத்தி வருகிறார். அதே வழியில் பயணித்தால் நாடு விரைவில் முன்னேறும் என்பது உறுதி. வங்குரோத்தடைந்த நாடொன்று இவ்வளவு சீக்கிரம் மீண்டெழுந்தது கிடையாது. இலங்கையில் அது நடந்துள்ளது. அதற்கு ரணிலின் தலைமைத்துவமே காரணம். தமிழ் மக்களுக்கும் இந்த தேர்தல் மிக முக்கியமாகும். தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகள் குறித்து என்றும் கவனம் செலுத்தக்கூடிய இனவாதமற்ற – மதவாதமற்ற தலைவரை தெரிவுசெய்து, அதன் மூலம் தமது உரிமைகளை வெல்வதற்கு வாய்ப்பு கிட்டியுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# நகர்வலம்

## தேர்தல் கண்காணிப்புக்குழு மு.கா ஹக்கீமுடன் சந்திப்பு



எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை கண்காணிப்பது தொடர்பில் அழைக்கப்படும் பட்சத்தில் அதற்கான பூர்வாங்க ஆயத்தங்களை மேற்கொள்வதற்காக தற்போது நாட்டிற்கு வருகைதந்துள்ள Ms. Lindiwe Maleleka (அரசியல் ஆலோசகர்) தலைமையிலான பொதுநலவாய நாடுகளின் தேர்தல்கள் தொடர்பான உயர் மட்டக் குழுவினர் , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் , கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோரை சனிக்கிழமை (27) பிற்பகல் கட்சியின் "தாருஸ்ஸலாம்" தலைமையகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர்.





இரத்தினபுரியில் நேற்று முன்தினம் (27) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் மக்கள் அரண் கூட்டத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பொதுமக்களை நோக்கி கையசைப்பதையும் அருகே பாராளுமன்ற உறுப்பினர் லலிதா அதுகோரல, உட்பட்ட பிரமுகர்கள் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

# கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலில் மறைந்த படைவீரர் நினைவு தினம்





ருஸைக் பாரூக்

இலங்கை விமானப்படையைச் சேர்ந்த மறைந்த படை வீரர்களை நினைவு கூரும் " "ரணவிரு அனுஸ்மரண " இஸ்லாமிய சமய நிகழ்வு அண்மையில் கொள்ளுப்பிட்டி ஜும்ஆ பள்ளிவாசலில் இலங்கை விமானப் படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூராமித் மற்றும் அஷ்ஷெய்க் எஸ்.எம். சஜித் ஹுமைதி ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் உரையாற்றினர்.

பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் ஏ.ஆர்.எம். ஹாரூன் ஹாஜி பள்ளிவாசல் சார்பாக இலங்கை விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவுக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி வைத்தார். பள்ளிவாசல் இமாம் மௌலவி ஹாபிழ் எம்.பி.எம். றிஸ்வான் மறைத்த போர் வீரர்களுக்கு விசேட துஆ பிரார்த்தனை நடத்தினார்.

# ஜனாதிபதித் தேர்தலை தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் சமூகம் திகழும்

(அக்கரைப்பற்று விசேட நிருபர்)



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் சமூகம் தீர்மானிக்கும் சக்தியாக திகழும் என,பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் தெரிவித்தார்.

சம்மாந்துறை முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) நிர்மாணிக்கப்படவுள்ள கேட்போர் கூடத்துகான அடிக்கல் நடும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர், இவ்வாறு குறிப்பிட்டார். ஐந்து மில்லியன் ரூபா செலவில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.கல்லூரியின் அதிபர் எம்.டீ. முஹம்மட் ஜனூபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்

உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ்:

இன்னும் இருமாதங்களுக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. தெற்கில் ஜனாதிபதி ரணிலும், சஜிதும் மற்றும் அநுரவும் களத்தில் குதிக்க உள்ளனர். தமிழ்த் தரப்பும் தீர்மானிக்கக் கூடிய சக்தியாக இருந்த போதிலும், பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளனர். ஆகவே இந்தத் தேர்லைத் தீர்மானிக்கும் சக்தியாக முஸ்லிம் சமூகம் விளங்கப் போகிறது. இவ்விடயத்தில் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றார். இந்நிகழ்வில் வலயக்கல்வி பணிமனை நிர்வாக பிரதிக்கல்வி பணிப்பாளர் பி.எம்.வை. அரபாத் முகைதீன், சம்மாந்துறை மஜ்லீஸ் அஸ்சூறாவின் தலைவர் ஓய்வு பெற்ற சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி அஷ்ஷேக் எம்.ஐ. அமீர் (நளீமி), ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கின் குரல்

## மாவடிப்பள்ளியில் புதிய கட்டடம் திறந்துவைப்பு

(பாலமுனை விசேட நிருபர்)



மாவடிப்பள்ளி ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் அண்மையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிமின் அழைப்பின் பேரில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இப்புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் முன்னாள் சுகாதார ராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான பைசல் காசிம், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கம், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் டீ.ஜி.எம். கொஸ்தா, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு



(எம்.எம்.ஜெஸ்மின்)

திருகோணமலை மெக்கெய்ஸர் உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பெட்மின்டன் (badminton) போட்டியில், கல்முனை அல் மிஸ்பாஹ் பாடசாலையின் 16 வயது மாணவ அணியினர் சிறப்பான முறையில் தமது திறமைகளை வெளிக்காட்டினர். இதையடுத்து இறுதிப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்போட்டி கடந்த 25,26,27ம் திகதிகளில் நடைபெற்றது. இவ்வணியினர் கடந்த வருடம் (2023) நடைபெற்ற மாகாண பெட்மின்டன் (badminton )போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்று கிழக்கு மாகாணத்தில் தமது பெயரை தடம் பதித்தனர்.

# கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு மூன்று நாள் செயலமர்வு

(பாலமுனை தினகரன் நிருபர்)

சிறுவர்களையும் சூழலையும் பாதுகாத்தல்' எனும் தொனிப்பொருளில், கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கு இன்று (29) மூன்று நாள் செயலமர்வு நடைபெறுகிறது.

சமாதான அமைப்பின் ஏற்பாட்டில் யுனிசெப் (UNICEF) நிதி உதவியுடன் மூன்று நாள் செயலமர்வாக இச்செயலமர்வு நடைபெறும். மட்டக்களப்பு கல்லடியிலுள்ள கரீன் கார்டன் ஹோட்டலில் திங்கள்,செவ்வாய்,புதன் ஆகிய மூன்று தினங்கள் இடம் பெறவுள்ளன. இச் செயலமர்வில் கிழக்கு மாகாணத்திலிருந்து நாற்பது ஊடகவியலாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறுவர் உரிமை சமவாயம், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய ஊடகங்களின் தாக்கம், சிறுவர் வன்முறைக்கு எதிராக புகாரளித்தலில் உள்ள சட்டம் மற்றும் நெறிமுறைகள், சிறுவர் வன்முறைக்கு எதிரான செய்தி அறிக்கை, துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களை நேர்காணல், நேரலை சிறுவர் துஷ்பிரயோகம் போன்ற பயன்தரும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன .

# பேருவளை சஹ்மிக்கு ஆட்டோ சங்கம் வரவேற்பு



சுதந்திரமான நாட்டை கட்டியெழுப்புவோம் எனும் தொனிப்பொருளில் பேருவளையைச் சேர்ந்த எம்.எஸ். எம். சஹ்மி அண்மையில் விழிப்புணர்வு நடைபவனியை ஆரம்பித்துள்ளார்.

இவர்,கடந்த (13) பேருவளையிலிருந்து நடைபவனியை ஆரம்பித்தார்.காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, வெல்லவாய, மொனறாகலை, சியம்பலாண்டுவ ஊடக பொத்துவிலை இவர் வந்தடைந்தார்.12 நாட்கள் நடந்து பொத்துவிலுக்கு வந்த இவரை அறுகம்பை ஆட்டோ உரிமையாளர்கள் வரவேற்று பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் ஆட்டோ உரிமையாளர் சங்கத்தின் தலைவர் ஏ.முசம்மில் மற்றும் அதன் உறுப்பினர்கள் இணைந்து கொண்டனர்.

இதன் பின்னர் பொத்துவிலில் இருந்து அக்கரைப்பற்று வழியாக மட்டக்களப்பு ,திருகோணமலை, யாழ்ப்பாணம் சென்று மன்னார் வழியாக அனுராதபுரம் , புத்தளம் ஊடாக கொழும்பு, பேருவளை செல்லவுள்ளார்.

# திருக்கோவிலில் களைகட்டும் பகல் இரவுத் திருவிழாக்கள்

( காரைதீவு குறூப் நிருபர் )

வரலாற்று பிரசித்தி சித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை மகோற்சவம், பகல் இரவுத் திருவிழாக்களாக சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

ஆலயத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் வெள்ளிக்கிழமை கரவாகுப்பற்று மக்களின் பூஜை மிகவும் சிறப்பாக இடம் பெற்றது. வெள்ளிக்கிழமை பகல் இரவுத் திருவிழாவின்போது ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள், ஆலய குரு சிவ ஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் முன்னிலையில் ஆலயத் தலைவர் சு.சுரேஸ், செயலாளர் அ.செல்வராஜா , வண்ணக்கர் வ.ஜயந்தன் மற்றும் பரிபாலன சபையினர் ஊழியர்கள் சகிதம் மேளதாளத்தோடு மிகவும் சிறப்பாக இத்திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.வெளிவீதியுலா இரவில் மகளிர் வடம் பிடித்து இரு தேர்களை இழுத்து வருவது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. தேசத்து ஆலயமாக விளங்குவதால் மட்டு.அம்பாறை மாவட்டங்களிலிருந்து பெருந்திரளான பக்தர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.இதற்காக புலம்பெயர் நாடுகளிலிருந்தும் பக்தர்கள் கலந்து சிறப்பித்து வருகின்றனர்.எதிர்வரும் ஆகஸ்ட் 04 இல், பிதிர்க்கடன் செலுத்தும் ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் இடம் பெறும்.

# குளத்தில் நீராடிய இளைஞர் மரணம்

(ரொட்டவெவ குறூப் நிருபர் )

திருகோணமலை கல்மெட்டியாவ குளத்தில் நீராடச் சென்ற இளைஞன், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.கல்மெட்டியாவ குளத்துக்கு சுற்றுலா சென்றுநீராடியபோது இவர் நீரில் மூழ்கியுள்ளார். இவர்,திருகோணமலையிலிருந்து குடும்பத்தாருடன் இங்கு சுற்றுலா சென்றுள்ளதாக, விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.உயிரிழந்தவரின் சடலம் கந்தளாய் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. தம்பலகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பேருவளை, காலவில பிரதேச வறிய குடும்பத்துக்கு வீடு

## இர்ஸான் மொஹமட் துரித நடவடிக்கை





பேருவளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அம்பேபிட்டிய, காலவில பகுதியில் சொந்த காணியில் வீடின்றி பாதுகாப்பற்ற கொட்டகையில் நீண்டகாலமாக வாழ்ந்து வந்த சகோதர சமூகத்தைச் சேர்ந்த வறிய குடும்பமொன்றின் வீட்டுத் தேவை குறித்து ஜெர்மனி கிங்ஸிங் கிரேஸ் மாநில அரச சார்பற்ற சமூக சேவை அமைப்பின் இலங்கை இணைப்பாளர் பேருவளை இர்ஸான் மொஹம்மதின் கவனத்திற்கு பிரதேச மக்களினால் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்றைய தினம் குறிப்பிட்ட பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்த இணைப்பாளர் இர்ஸான் மொஹமட், குறித்த குடும்பத்தை சந்தித்து அவர்களின் தேவைகளை கேட்டறிந்து கொண்டதோடு அவர்களுக்கு தேவையான உலருணவு பொதிகளையும் கையளித்தனர்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இர்ஸான் மொஹமட், பிரதேச பொதுமக்கள் பலர் என்னிடம் விடுத்த வேண்டுகோளின்பேரில் மேற்படி குடும்பத்தினரை நேரடியாக சென்று பார்த்த போதுதான் அவர்களின் உண்மை நிலை தெரிய வந்தது. உண்மையில் மிகவும் கஷ்டத்துடன் வாழ்ந்து வருகின்றனர். இந்த குடும்பத்தில் பாடசாலை செல்கின்ற இளம் சிறார்கள் இருப்பதை காண்கின்ற போது மிகவும் கவலையாக இருக்கிறது. இவர்களுக்கு எமது ஜெர்மனி பரோபகாரிகளின் நிதியுதவியில் வீடொன்றை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மிக விரைவில் புதிய வீட்டின் நிர்மாணப்பணிகளை உடன் ஆரம்பிக்கதான் நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் இதன்போது உறுதியளித்தார்.

# இறக்குவானை வீதியொன்றுக்கு தர்ஷன் தர்மராஜின் பெயர் சூட்டல்



இறக்குவானை வீதியொன்றுக்கு தர்ஷன் தர்மராஜின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. தர்ஷன் தர்மராஜின் பிறந்த இடமான அவரது வீட்டிற்கு செல்லும் வீதிக்கே இந்த பெயர் சூட்டப்பட்டுள்ளது.

தர்ஷன் தர்மராஜின் பெயர் சூட்டப்பட்ட வீதியின் பெயர் பலகை திறப்பு நிகழ்வு சனிக்கிழமை (27) வெகு விமர்சையாக இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், பிரதேச மக்கள் என பலரும் இரத்னபுரி ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் சுப்பையா ஆனந்த குமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

தர்ஷன் தர்மராஜின் நண்பர்களின் முயற்சியில் இந்த வீதி திறக்கப்பட்டமை சிறப்பம்சமாகும். இலங்கையில் தமிழ் நடிகர் ஒருவரின் பெயர் சூட்டப்பட்டது இதுவே முதல்தடவையாகும்.

# கற்பிட்டி அல் அக்ஸாவின் இருவர் மாகாண மட்டத்திற்கு தெரிவு

**புத்தளம் தினகரன் நிருபர்**



புத்தளம் வலய மட்டத்தில் இடம்பெற்ற கணித திறன் போட்டியில் கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலையைச் சேர்ந்த தரம் 10 ல் கல்வி பயிலும் என்.பீ. பிரவீன் மற்றும் தரம் 06 ல் கல்வி பயிலும் என்.எம். நாசிப் ஆகிய இருவரும் வெற்றி பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் எம். என்.எம். நஸ்ரீன் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இருவரின் வெற்றிக்கும் பங்களிப்பு செய்த 'பிட்' ஆசிரியர்களான திரு. நிசாந்தன் மற்றும் திருமதி பாரிஸா ஆகியோருக்கு வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பாடசாலையின் நிர்வாகம் சார்பாக தனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் அதிபர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை சாதனை

**(வெலிகம தினகரன் நிருபர்)**

நடைபெற்று முடிந்த அகில இலங்கை தமிழ் தின மாத்தறை வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகளில் மாறை / வெலிகம முஸ்லிம் ஆரம்ப பாடசாலை சாதனை படைத்து பாடசாலைக்கும், பாடசாலை சமூகத்துக்கும் பெருமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் எம்.டி.எம் நாளிம் தெரிவித்தார். கலந்து கொண்ட ஆறு போட்டிகளில் ஐந்து போட்டிகளில் முதலிடங்களை சுவீகரித்துக் கொண்டதுடன் ஒரு இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது.

பிரிவு 1 இசையும் அசைவும், வாசிப்பு, கதை கூறல், பாவோதல், எழுத்தாக்கம் ஆகிய போட்டிகளில் முறையே எம்.எஸ்.எப். ஸாரா, எம்.ஆர்.ஆயிஷா நூரா, எம்.எப்.எப். அப்ரா, எம்.எம். எப். அஸ்மா, மற்றும் ஏ.என் உமைமா, ஆகியோரே முதலாம் இடங்களை சுவீகரித்துக் கொண்டவர்களாவர். பிரிவு 1பேச்சுப் போட்டியில் மாத்திரம் ஏ.நஸ்ஹா இரண்டாம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

# கொட்டகலை பிரதேச சபை

## கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் உப அட்டவனையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலை மேற்கொள்வதற்காக தகுதிவாய்ந்த மற்றும் குற்றமிழைத்தோர் பட்டியலில் இடம்பெறாத கேள்விதாரர்களிடமிருந்து கொட்டகலை பிரதேச சபையின் கேள்விச் சபையின் தலைவரினால் (அரக்கு முத்திரையிடப்பட்ட) சீல் செய்யப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றது.

| இல | தொழில் மற்றும் கேள்வி இலக்கம் | பொறியியலாளர் அளவீட்டுப் படிவ பெறுமதி (VAT இல்லாத) ரூ.மில்லியன் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | CIDA / ICTAD பதிவு இலக்கம் | கேள்வி பாதுகாப்பு கட்டணங்கள் | | | மீள செலுத்தப்படாத கேள்வி ஆவண கட்டணங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகையினது பெறுமதி (ரூபா) | பணமாக வைப்பு செய்ய வேண்டிய பெறுமதி (ரூபா) | செல்லுபடியான தினம் | |
| 01 | கொட்டகலை நீர் வளைய பிரதேசத்தில் சுகாதார வசதிகளுடன் உள்ளடங்கிய கட்டிடம் அமைத்தல். CPC/KGPS/3/2 SFB/2024/2 | 7.9 | 60 | CIDA / C 6 அல்லது C 7 அல்லது C 8 (கட்டிடங்கள்) | 100,000.00 | 50,000.00 | 2024 டிசம்பர் 04 | 5000.00 |

01. இக்கேள்வியானது தேசிய போட்டியிலான கேள்வி கோரல் விதிமுறைகளுக்கமைய இடம்பெறும். இக்கேள்வியின் கீழ் உரிய பணியின் மதிப்பீட்டு பெறுமதியானது ரூபா மில்லியன் 50 க்கு குறைவு என்பதால் 04/2016 (iv) இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரத்தின் முன்னுரிமை உரித்தானதாக இருக்கும்.

02. இவ்விடயம் தொடர்பாக மேலதிக விபரங்களை 0514932140 எனும் தொலைபேசி இலக்கத்தினை அழைத்து கொட்டகலை பிரதேச சபையின் செயலாளரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்பதோடு கேள்வி ஆவணங்களை 29.07.2024 ம் திகதியிலிருந்து 20.08.2024 ம் திகதி வரை அலுவலக நேரத்தினுள் கொட்டகலை பிரதேச சபை அலுவலகத்தில் கட்டணமின்றி பரிசீலனை செய்யலாம்.

03. கீழ்க்கானும் முகவரிக்கு எழுத்து மூலமாக கடிதம் ஒன்றை சமர்ப்பித்த பின்னர் மேற்படி குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீள செலுத்தப்படாத கேள்வி ஆவணக்கட்டணத்தை கொட்டகலை பிரதேச சபையின் சிறாப்பரிடம் பணமாக செலுத்தி உரிய ரசீதினை சமர்ப்பித்து 29.07.2024 ம் திகதியிலிருந்து 20.08.2024 ம் திகதி வரை காலை 09.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை அலுவலக நேரத்தினுள் செயலாளரிடமிருந்து ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வியின் பெறுமதி ரூபா 05 மில்லியனை அதிகரிக்கும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்ளக்கூடிய தகுதியினை பெற்ற கேள்விதாரரினால் 1987 இலக்கம் 03 உடைய பொது ஒப்பந்த சட்டத்தின் 8 பந்தியின் கீழ் நிறுவன பதிவாளரினால் விநியோகிக்கப்படும் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. மேற்படி படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியினை "கொட்டகலை பிரதேச சபை" எனப் பெயரிடப்பட்டு அப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியானதாக அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட (இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட) வங்கி ஒன்றில் அல்லது கட்டுமான பாதுகாப்பு நிதியம் (CGF) ஊடாக அல்லது பெற்றுக்கொள்ளப்பட்டதொரு கேள்வி பாதுகாப்பினை சமர்ப்பிக்கவோ அல்லது கேள்வி பாதுகாப்பினை பணத்தால் வைப்பு செய்யப்படுமாயின் மேற்படி பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை கொட்டகலை பிரதேச சபையின் சிறாப்பரிடம் வைப்பு செய்து அதன் ரசீதினை சமர்ப்பிக்கலாம்.

06. முறையாக பூர்த்தி செய்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் இணை பிரதியுடன் "தலைவர் கேள்விக் குழு , கொட்டகலை பிரதேச சபை, கொட்டகலை" என்ற முகவரிக்கு 2024.08.21 ம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் அனுப்புவதன் ஊடாகவோ அல்லது கையில் எடுத்து வந்து கொட்டகலை பிரதேச சபை செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட முடியும். குறித்த நேரத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை நிறைவுற்றவுடன் கேள்வி திறக்கப்படுவதோடு கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் அச்சந்த்திர்ப்பத்திற்கு பங்குபற்றலாம்.

07. இவ்விடயமாக ஆரம்பக்கட்ட கேள்விக் கூட்டம் ஒன்று 2024.08.14 ம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு கொட்டகலை பிரதேச சபையில் இடம்பெறும். அதில் கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் பங்குபற்றலாம். சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது ஒரு பகுதியினை ஏற்றுக்கொள்வது பற்றிய பூரண அதிகாரம் கொட்டகலை பிரதேச சபையின் கேள்விச் சபைக்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**கேள்விச் சபை,**
**கொட்டகலை பிரதேச சபை,**
**கொட்டகலை.**
**தொலைபேசி இலக்கம் : 0514932140**
**மின்னஞ்சல் : kotagalaps@gmail.com**
**2024.07.29**

NationsTrustBank

## 1988ஆம் ஆண்டு 30ம் இலக்க வங்கிச் சட்டத்தின் பிரிவு 74இன் கீழான அறிவித்தல் (திருத்தப்பட்டது)

வங்கிச் சட்டத்தின் 72 மற்றும் 73 பிரிவுகளின்படி (திருத்தப்பட்டவை) பின்வரும் பதிவுகள் 31 டிசம்பர் 2023 முதல் வாடிக்கையாளர்களால் "கைவிடப்பட்டவை" எனக் கருதப்படுகின்றன. வாடிக்கையாளர்களினால் கணக்குகளை 10 வருட காலத்திற்கு செயற்படுத்த இயலாமையே இதற்குக் காரணமாகும்.

| கிளை பெயர் | கிளை தொடர்பு இலக்கம் | நிலையான கணக்கு எண்ணிக்கை | சேமிப்பு கணக்கு எண்ணிக்கை | வெளிநாட்டு நாணயக் கணக்கு எண்ணிக்கை | பாதுகாப்பு பெட்டகம் எண்ணிக்கை | கோரப்படாத வரைவுகள்/ கருவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| சிட்டி கிளை | 0114 738 902 | இல்லை | 1 | 27 | இல்லை | இல்லை |
| கொள்ளுபிட்டி | 0114 622 181 | 2 | 3 | 28 | இல்லை | இல்லை |
| ஸ்ரீ சங்கராஜ | 0114 720 092 | இல்லை | இல்லை | 9 | இல்லை | இல்லை |
| கண்டி | 0814 471 701 | இல்லை | இல்லை | 10 | இல்லை | இல்லை |
| வெள்ளவத்தை | 0114 519 772 | இல்லை | 3 | 8 | இல்லை | இல்லை |
| யூனியன் பிளேஸ் | 0114 313 201 | இல்லை | 15 | 38 | இல்லை | இல்லை |
| நீர்கொழும்பு | 0314 874 306 | இல்லை | 1 | 3 | இல்லை | இல்லை |
| புறக்கோட்டை | 0114 627 777 | இல்லை | இல்லை | 2 | இல்லை | இல்லை |
| மஹாபாகே | 0114 818 580 | இல்லை | இல்லை | 10 | இல்லை | இல்லை |
| பத்தரமுல்ல | 0114 412 118 | இல்லை | 1 | 16 | இல்லை | இல்லை |
| கறுவாத்தோட்டம் | 0114 889 830 | இல்லை | இல்லை | 56 | இல்லை | இல்லை |
| குருநாகல் | 0374 690 461 | இல்லை | இல்லை | 4 | இல்லை | இல்லை |
| மஹரகம | 0114 309 134 | இல்லை | இல்லை | 7 | இல்லை | இல்லை |
| மொரட்டுவை | 0114 203 042 | இல்லை | இல்லை | 4 | இல்லை | இல்லை |
| பொரளை | 0114 616 265 | இல்லை | இல்லை | 5 | இல்லை | இல்லை |
| கிரிபத்கொடை | 0114 820 381 | இல்லை | இல்லை | 8 | இல்லை | இல்லை |
| பாணந்துறை | 0384 281 802 | இல்லை | இல்லை | 9 | இல்லை | இல்லை |
| கம்பஹா | 0334 670 773 | இல்லை | இல்லை | 5 | இல்லை | இல்லை |
| கொட்டாஞ்சேனை | 0114 618 721 | இல்லை | இல்லை | 6 | இல்லை | இல்லை |
| பிரைவட் பேங்கிங் சென்டர் | 0114 719 933 | இல்லை | இல்லை | 8 | இல்லை | இல்லை |
| கடவத்தை | 0114 817 700 | இல்லை | இல்லை | 3 | இல்லை | இல்லை |
| கிறெஸ்கெற் | 0114 741 333 | இல்லை | இல்லை | 6 | இல்லை | இல்லை |
| தெஹிவளை | 0114 203 001 | இல்லை | இல்லை | 5 | இல்லை | இல்லை |
| மிலெனியம் | 0114 955 399 | இல்லை | இல்லை | 2 | இல்லை | இல்லை |
| ஹெவ்லொக் நகரம் | 0114 542 011 | இல்லை | இல்லை | 12 | இல்லை | இல்லை |
| பேராதனை | 0814 930 653 | இல்லை | இல்லை | 5 | இல்லை | இல்லை |
| நாவல | 0114 885 501 | இல்லை | இல்லை | 11 | இல்லை | இல்லை |
| மாத்தறை | 0414 928 971 | இல்லை | 1 | 6 | இல்லை | இல்லை |
| காலி | 0917 857 062 | இல்லை | 4 | 12 | இல்லை | இல்லை |
| தலவதுகொடை | 0114 412 553 | இல்லை | இல்லை | 4 | இல்லை | இல்லை |
| ஹோமாகம | 0117 857 303 | இல்லை | இல்லை | 2 | இல்லை | இல்லை |
| வவுனியா | 0244 924 800 | இல்லை | இல்லை | 1 | இல்லை | இல்லை |
| மட்டக்களப்பு | 0657 857 101 | இல்லை | இல்லை | 2 | இல்லை | இல்லை |
| மாலபே | 0117 857 668 | இல்லை | இல்லை | 7 | இல்லை | இல்லை |
| பிலியந்தலை | 0114 339 434 | இல்லை | இல்லை | 3 | இல்லை | இல்லை |
| இரத்தினபுரி | 0454 927 931 | இல்லை | இல்லை | 2 | இல்லை | இல்லை |
| சிலாபம் | 0324 929 680 | இல்லை | இல்லை | 5 | இல்லை | இல்லை |
| கதுருவெல | 0277 857 101 | இல்லை | இல்லை | 2 | இல்லை | இல்லை |
| புறக்கோட்டை பேங்க்செல் வீதி | 0117 858 150 | இல்லை | இல்லை | 1 | இல்லை | இல்லை |
| அளுத்கமை | 0344 947 745 | இல்லை | இல்லை | 1 | இல்லை | இல்லை |
| வென்னப்புவ | 0314 936 590 | இல்லை | இல்லை | 3 | இல்லை | இல்லை |
| உலக வர்த்தக மையம் | 0114 365 184 | இல்லை | இல்லை | 7 | இல்லை | இல்லை |
| வத்தளை | 0114 812 621 | இல்லை | இல்லை | 9 | இல்லை | இல்லை |
| கல்கிஸ்சை | 0114 210 554 | இல்லை | 2 | 16 | இல்லை | இல்லை |
| நுகேகொடை | 0114 300 450 | இல்லை | இல்லை | 15 | இல்லை | இல்லை |
| கொஹு"வலை | 0114 200 556 | இல்லை | இல்லை | 7 | இல்லை | இல்லை |
| அம்பலாங்கொடை | 0914 943 897 | இல்லை | இல்லை | 1 | இல்லை | இல்லை |
| ஜா-எல | 0117 857 362 | இல்லை | 1 | 1 | இல்லை | இல்லை |
| பலாங்கொட | 0454 935 011 | இல்லை | 1 | 1 | இல்லை | இல்லை |
| லீசிங் டிபார்ட்மென்ட் | 0114 682 545 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 8 |
| கார்ட் சென்டர் | 0114 682 351 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 342 |
| கொடுப்பனவு சேவைகள் | 0114 682 102 | இல்லை | இல்லை | இல்லை | இல்லை | 330 |

கைவிடப்பட்ட சொத்தாக வகைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர்களின் கணக்குகள்/பொருட்கள் பற்றிய தகவல்களைப் பயன்படுத்தி அத்தகைய சொத்துகளுக்கு உரிமை கோர உரித்தற்றவர்கள் முற்படக்கூடும் என்பதால், கைவிடப்பட்ட சொத்துக்களின் பாதுகாப்பை முன்னிட்டு அவற்றின் விரிவான விபரங்கள் வங்கியினால் வெளியிடப்படமாட்டாது.

கைவிடப்பட்ட சொத்தென அறிக்கையிடப்பட்ட சொத்தைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு, வங்கியானது ஏற்கனவே வாடிக்கையாளர்களின் கடைசியாகத் தெரியப்படுத்தப்பட்ட முகவரிக்கு அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அத்தகைய அறிவுறுத்தல்களில் கைவிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய முழு விபரங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கணக்கு வைத்துள்ளவர்கள்/அவர்களின் வாரிசுகள் இந்த அறிவிப்பின் தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள் தங்கள் கோரிக்கைகளை (உள்ளதெனில்) தொடர்புடைய கிளை மேலாளர்களிடம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நேஷன்ஸ் டிரஸ்ட் வங்கி பிஎல்சி,
242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

# சப்ரகமுவ மாகாணத்தில் ரூ. 800 மில்லியனில் வீதிகள் அபிவிருத்தி பணிகள் ஆரம்பம்!

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**





800 மில்லியன் ரூபா செலவில் சப்ரகமுவ மாகாணத்தின் வீதி அபிவிருத்திக்காக நடைமுறைப்படுத்தப்படும் சப்ரகமுவ மாகாண வீதி வாரம் கடந்த புதன்கிழமை (24) சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவின் திசாநாயக்க தலைமையில் தெரணியகலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் கீழ் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 72 வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அதன்படி சுமார் 200 கிலோமீற்றர் வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் சிரேஷ்ட சட்டத்தரணி நவின் திசாநாயக்க தலைமையில் கடந்த 24ஆம் திகதி தெரணியகல, அரநாயக்க பிரதேசங்களிலும் கடந்த 25ஆம் திகதி மாவனெல்ல மற்றும் ஹெம்மாதகம பிரதேசங்களிலும் கடந்த 27ஆம் திகதி நிவித்திகல, பெல்மதுளை, இரத்தினபுரி ஆகிய தொகுதிகளிலும் வீதிகள் அமைக்கும் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. அத்துடன் இன்றையதினம் 29ஆம் திகதி, கலவான, பொதுப்பிட்டிய, அயகம பிரதேசங்களிலும் மற்றும் எதிர்வரும் 30 ஆம் திகதி ருவன்வெல்ல, யட்டியந்தோட்டை ஆகிய தொகுதிகளிலும் மேற்படி வீதி வாரம் செயல்படுத்தப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# தொழில் அமைச்சின் செயலாளருடன் 5 தொழிற்சங்க பிரதிநிதிகள் சந்திப்பு

**அக்குறணை குறூப் நிருபர்**



இலங்கை தொழிலாளர் செங்கொடிச்சங்கம் உட்பட ஐந்து தொழிற் சங்கப் பிரதிநிதிகள் தொழிலாளர்களது உரிமைகள் தொடர்பாக தொழில் அமைச்சின் செயலாளர் ஆர்.பி.ஏ. விமலவீர மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது.

கண்டியைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் இலங்கை தொழிலாளர் செங்கொடிச்சங்க ஆலோசகர் திருமதி மேனகா கந்தசாமி இது பற்றி ஓர் ஊடக அறிக்கைமூலம் தெரிவிக்கையில்,

ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கம், தொழிலாளர் தேசிய சங்கம், மலையக தோட்டத் தொழிலாளர் முன்னணி, இலங்கை தொழிற் சங்கங்களின் கூட்டமைப்பு என்பவற்றின் பிரதி நிதிகள் தம்முடன் இணைந்து இதில் கலந்து கொண்டதாக தெரிவித்துள்ளார்.

இலங்கை, இந்திய மற்றும் நேபாள நீதிமன்றங்களின் ஓய்வு பெற்ற நீதிபதிகள் குழு ஒன்று தேயிலை, இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் சாட்சியங்களை கேட்டதாகவும், தோட்டங்களில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து அதிர்ச்சி அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இலங்கை வரலாற்றில் முக்கிய தீர்ப்புக்களை வழங்கிய ஒரு நியாய சபையாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறைந்த வேதன நிலைமைகள் காணப்படுவதாகவும் தொழிலாளர்கள் தொடர்ந்து சுரண்டலுக்கு உட்பட்டுவருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக தொழிலாளர் செங்கொடிச்சங்கம் பின்வரும் விடயங்களைத் தொட்டுக்காட்டியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது முறைசார்ந்த தொழில் விடயங்கள் முறைசாரா தொழிலாக மாற்றப்பட்டு வருவதாகவும், வேலைத்தள நிலைமைகள் குறைபாடுகளுடன் காணப்படுவதாகவும், சட்டபாதுகாப்பு இன்றி காணப்படுவது தொடர்பாகவும் எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## சுற்றாடல் அமைச்சு

**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**

## மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கம்பஹா, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், பொலன்னறுவை மாவட்ட அலுவலகங்களுக்கு குத்தகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக்கொள்வதற்கு விலைமனுக்கள் கோரல்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கம்பஹா, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், பொலன்னறுவை மாவட்ட அலுவலகங்களுக்கு குத்தகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக்கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்ட தேவைகளைக் கொண்ட தகுதியுடைய கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு விரும்பும் தனி நபர்கள்/ நிறுவனங்களிடம் இருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

| மாகாண/ மாவட்ட அலுவலகம் | கேள்விமனு இலக்கம் | சதுர அடி அளவு | கட்டிடம் அமைந்துள்ள இடம் | வாகனம் நிறுத்தி வைக்கும் வசதி | கழிவறை மற்றும் குளியலறை எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| கம்பஹா மாவட்ட அலுவலகம் | CEA/AD/ Proc /RE/49/2024 | 8300 அல்லது அதற்கு மேல் (அதிகபட்சம் இரண்டு மாடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | கம்பஹா நகர் அல்லது நகர மத்தியில் இருந்து 5 கி.மீ. இற்கு குறைந்த தூரம் | 06 வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல் வேண்டும். | 08 அல்லது அதற்கு மேல் |
| களுத்துறை மாவட்ட அலுவலகம் | | 3200 அல்லது அதற்கு மேல் (அதிகபட்சம் இரண்டு மாடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | களுத்துறை நகர் அல்லது நகர மத்தியில் இருந்து 5 கி.மீ. இற்கு குறைந்த தூரம் | 07 வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல் வேண்டும். | 06 அல்லது அதற்கு மேல் |
| ஹம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகம் | | 3000 அல்லது அதற்கு மேல் (அதிகபட்சம் இரண்டு மாடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | தங்கல்ல நகர் அல்லது நகர மத்தியில் இருந்து 5 கி.மீ. இற்கு குறைந்த தூரம் | 05 வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல் வேண்டும். | 04 அல்லது அதற்கு மேல் |
| புத்தளம் மாவட்ட அலுவலகம் | | 1800 அல்லது அதற்கு மேல் (அதிகபட்சம் இரண்டு மாடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | சிலாபம் நகர் அல்லது நகர மத்தியில் இருந்து 5 கி.மீ. இற்கு குறைந்த தூரம் | 03 வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல் வேண்டும். | 03 அல்லது அதற்கு மேல் |
| பொலன்னறுவை மாவட்ட அலுவலகம் | | 2100 அல்லது அதற்கு மேல் (அதிகபட்சம் இரண்டு மாடிகளைக் கொண்டிருத்தல் வேண்டும். | பொலன்னறுவை நகர் அல்லது நகர மத்தியில் இருந்து 5 கி.மீ. இற்கு குறைந்த தூரம் | 03 வாகனங்களை நிறுத்தி வைக்க முடியுமாக இருத்தல் வேண்டும். | 03 அல்லது அதற்கு மேல் |

**அந்தக் கட்டிடம்,**

- பொதுமக்களுக்கு அல்லது பணிக்குழுவுக்கு இலகுவாக அடைய முடியுமான இடத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.
- திட்டப் பிரதி ஒன்று மற்றும் காணியை அடைய முடியுமான வீதியின் வரைபடத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
- காணியின் உறுதி மற்றும் காணி திட்டத்தின் உறுதி செய்யப்பட்ட பிரதி ஒன்றை பெற்றுத்தருதல் வேண்டும். (காணியின் உறுதி உரிமையாளரின் பெயரில் மாத்திரம் இருத்தல் வேண்டும்.)
- கட்டிடத்தின் சதுர அடி அளவாக குறிப்பிடப்பட வேண்டியது படிக்கட்டு, கழிப்பறை, மாடி முகப்பு மற்றும் குளியலறை சதுர அடி அளவு தவிர்த்து எஞ்சி சதுர அடி அளவாகும்.
- தேவை அடிப்படையில் அரசின் மதிப்பீட்டு விலையை பெற்றுக்கொள்வதற்கு இணங்குதல் வேண்டும்.
- பெறுகை செயற்பாட்டுக்குப் பின்னர் தேர்வு செய்கின்ற கட்டிடத்தின் உரிமையாளரினால் அரசின் மதிப்பீட்டு திணைக்களத்தில் இருந்த மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
- 03 ஆண்டு காலத்திற்கு கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குதற்கு முடியுமாக இருக்க வேண்டும் என்பதோடு, வழங்கப்பட்ட பின் இரு தரப்பினரினால் ஒப்பந்தம் ஒன்றுக்கு வருதல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்கின்ற கட்டிட உரிமையாளர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியம் என அறிவிப்பதோடு தேவைகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத கேள்விமனுக்கள் மதிப்பீட்டு செயற்பாட்டில் இருந்து நீக்கப்படுவதாக அறிவிக்கப்படும்.

முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விமனு உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக குறித்த கேள்விமனு இலக்கம் மற்றும் 'மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கம்பஹா, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, புத்தளம், பொலன்னறுவை மாவட்ட அலுவலகங்களுக்கு குத்தகை அடிப்படையில் கட்டிடங்களை பெற்றுக்கொள்ளல்' என்று குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் பெயர், முன்மொழியப்பட்ட கட்டிடத்தின் முகவரி, தொலைபேசி இலக்கம், விலைமனு மற்றும் குறித்த விபரக்குறிப்பு தொடர்பில் விபரங்கள் (சதுர அடி அளவு, கழிப்பறை எண்ணிக்கை, வாகனம் நிறுத்தி வைக்க முடியுமான எண்ணிக்கை) உள்ளடங்கிய விண்ணப்பம் ஒன்றை மேல் கோரப்பட்டிருக்கும் விபரத்துடன் கீழுள்ள முகவரிக்கு 2024.08.20 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது கைகளில் கொண்டு வந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதான அலுவலகத்தின் நிர்வாகப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கேள்விமனுவை ஏற்கும் காலம் முடிவுற்ற உடன் அன்றைய தினம் பி.ப. 2.00க்கு கேள்விமனுக்கள் திறக்கப்படும். தாமதித்து கிடைக்கின்ற கேள்விமனுக்கள் நிராகரிக்கப்படும். இது தொடர்பில் மேலதிக விபரங்கள் உதவிப் பணிப்பாளரிடம் (நிர்வாகம்) இருந்து பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இலக்கம் 070-3990090)

க.கொ. - முன்மொழியப்படும் கட்டிடம் தொடர்பில் கேட்டறிவதற்கு தொலைபேசி இலக்கம் ஒன்று விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடுதல் அவசியமாகும்.

**தலைவர்**
**பெறுகைக் குழு**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**இலக்கம் 104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்லை.**



## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக கொழும்பு –10, தேசிய கண் வைத்தியசாலையின் மத்திய வளிச்சீராக்கல் முறைகளின் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு முன்னராக பராமரிப்பு மற்றும் சேவையின் பாதிப்புக்களை சீராக்குவதற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்கான அழைத்தல்

1. கீழே விபரிக்கப்பட்டவாறு, 2024 ஆம் ஆண்டிற்காக கொழும்பு-10, தேசிய கண் வைத்தியசாலையிலுள்ள மத்திய வளிச்சீராக்கல் முறைகளின் பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு முன்னராக பராமரிப்பு மற்றும் சேவையின் பாதிப்புக்களை சீராக்குவதற்கான பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்வதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-10, தேசிய கண் வைத்தியசாலைப் பணிப்பாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2.30 மணிக்குமிடையில் பெற்றுக் கொள்ளலாம்.
5. 2024.08.19 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் 1,500 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் கொழும்பு-10, தேசிய கண் வைத்தியசாலையின் பணிப்பாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. விலைமனுவானது காலப்பகுதியின் 49 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
7. கீழேயுள்ள முகவரியில் 2024.08.20 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் காலத்தைக் கொண்டுள்ளதாகவும் 50,000 இலங்கை ரூபா பெறுமதியானதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த வங்கியொன்றினால் வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு.

**பணிப்பாளர்,**
**தேசிய கண் வைத்தியசாலை,**
**வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10**

**தொடர்பு இலக்கம்: 0112693911**
**தொலைநகல்: 0112698285**



## சுகாதார அமைச்சு

**ஆதார வைத்தியசாலை (போதனா) - கம்பளை**

## பெறுகை அறிவித்தல்

**2024-2025ஆம் வருடங்களில் பின்வரும் வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பிராந்திய பெறுகைக் குழுவின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| தொ. இல. | உருப்படிகள் | தகைமை | மீளளிக்கப்படும் கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|
| 1. | சிறிய அளவிலான Split வகையான வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் மற்றும் மருந்து களஞ்சியசாலையின் குளிர் அறையின் வருடாந்த திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் மற்றும் பராமரிப்பு வேலைகளை மேற்கொள்ளல். | EM 4 (CIDA EM 4 Mechanical Ventilation & Air Conditioning (MVAC) | ரூபா 2,000.00 |

02. கேள்வி ஆவணங்களை 2024-07-30ஆம் திகதி முதல் 2024-08-19ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணிக்கிடையில் கம்பளை, ஆதார வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையை நிரூபிக்கும் சாட்சிகள் மற்றும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை கம்பளை ஆதார வைத்தியசாலையின் கணக்காளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பொது 172 மாதிரியில் கேள்விப் படிவங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்வி ஆவணங்களைச் சமர்ப்பிக்கும் போது வளிச்சீராக்கி இயந்திரங்கள் தொடர்பான சேவைகளுக்கு இயைபாக அரச அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் இரண்டு வருட அனுபவம் இருத்தல் வேண்டும். அரசாங்க வைத்தியசாலைகளில் வளிச்சீராக்க முறைமைகளை பராமரித்தல் சேவை அனுபவம் மேலதிக தகைமையாகக் கவனத்திற் கொள்ளப்படும். செய்யப்பட்டுள்ள பராமரிப்பு வேலைகள் தொடர்பிலான அனுபவம் தொடர்பான சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்களை 2024-08-20ஆம் திகதி மு.ப. 11.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கம்பளை ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சிறிய அளவிலான Split வகையான வளிச்சீராக்கி இயந்திரங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல்'' எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்தவுடன் அதாவது 2024-08-20ஆம் திகதி மு.ப. 11.30 மணிக்கு வைத்தியசாலையின் அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இவ்வேளையில் கலந்துகொள்ளலாம்.

06. கேள்வி முன்னோடிக் கூட்டமொன்று 2024-08-13ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.

07. கேள்வி ஆவணங்களை அலுவலக நேரத்தினுள் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

3. 2024 ஜுலை 29 ஆம் திகதி தொடக்கம் ஒகஸ்ட் 20 ஆம் திகதி வரையான காலத்தில் விலைமனுக்கள் கோரப்படுவதோடு இதற்காக ஆர்வம் காட்டும் தகுதியுடைய விலைமனுதாரர்களுக்கு விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும். இது தொடர்பில் மேலதிக விபரங்களை வீரக்கெட்டிய தலைமை அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 0472246375 அல்லது weeraprasa@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக அல்லது www.weeraketiya.gov.lk என்ற வீரக்கெட்டிய பிரதேச சபை இணையப் பக்கத்தை பரீட்சிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**டபிள்யு. கே. சுரங்க**
**செயலாளர்**
**வீரக்கெட்டிய பிரதேச சபை**




# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## கடுவெல மாநகர சபை

## கடுவெல மாநகர சபைக்காக தலாஹேனவில் மரணச்சடங்குகளுக்காக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மண்டபம்

1. கீழே விபரிக்கப்பட்டவாறும் அண்ணளவாக 83.2 மில்லியன் ரூபா ஆகுசெலவில் (பெசேவ நீங்கலாக) (வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் பிரகாரம் 83.2 மில்லியன் ரூபா)கடுவெல தகனச்சாலையில் மரணச்சடங்குகளுக்காக மண்டப நிர்மாணத்திற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கடுவெல, புதிய கண்டி வீதி, கடுவெல மாநகர சபையின் சார்பாக பெறுகைக் குழுவின் மாநகர ஆணையாளர் அழைக்கின்றார்.

   இந்த பணியானது அத்திவாரமொன்று, சட்டக கட்டமைப்புடனான columns, beams, செங்கற்சுவர், கூரை, நீர்ப்பு காப்பு, மரச்சட்ட கதவுகள் மற்றும் அலுமீனிய மின்னும் யன்னல்கள், மெருகூட்டல், பெயிண்ட் பூசுதல், மின்விநியோக வேலைகள், குழாய் வேலைகள் நிரப்பல், வழியமைத்தல் மற்றும் வாகன தரிப்பிடம் அடங்கலான வெளியக வேலைகள் ஆகியவற்றை அடக்கியுள்ள கடுவெல மாநகர சபைக்கான தலாஹேனவில் மரணச்சடங்குகளுக்காக மண்டபம் உட்பட்ட மூன்று மாடி கட்டிட நிர்மாணம். இந்த கட்டிடத்திற்கான பசுமைச் சான்றிதழை பெற்றுக் கொள்ளல் வேண்டும். நிர்மாணக் காலப்பகுதியானது 180 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக எதிர்பார்க்கும் விலைமனுதாரர் தகுதிநீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்யபவர்களாகவுமிருத்தல் வேண்டும்.

   கட்டுமான நிர்மாண துறையில் சி-4 அல்லது மேற்பட்ட தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் பின்வருமாறு:
   - கடந்த ஐந்து வருடங்களில் வருடாந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வானது ஆகக்குறைந்தது 166.0 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல்.
   - ஏனைய ஒப்பந்தரீதியிலான கடப்பாடுகள் நீங்கலாக மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முற்பணக்கொடுப்பனவு நீங்கலாக திரவச் சொத்துக்கள் மற்றும் / அல்லது கடன் வசதிகளின் ஆகக்குறைந்த தொகையானது 17.0 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமலிருத்தல் வேண்டும்.
   - ஆகக்குறைந்தது இரு மாடிக் கட்டிடமொன்றின் இயைபுள்ள தன்மை, சிக்கல்தன்மை மற்றும் பெறுமதி ஆனது ஆகக் குறைந்தது 85 மில்லியன் ரூபாவாகவும் 6 மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டதும் அல்லது கடந்த ஐந்து வருடங்களில் விகிதாசார அடிப்படையிலமைந்த உயர்ந்த பெறுமதியையுடைய செயற்றிட்டத்தை பூர்த்தி செய்த அனுபவம்.
5. ஆர்வமும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை /தெளிவுறுத்தல்களை கடுவெல, புதிய கண்டி வீதி, கடுவெல மாநகர சபை, மாநகர பொறியியலாளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 0112-571200, தொலைநகல்: 0112-548492, மின்னஞ்சல்: **kadumceng@gmail.com**) வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
6. 2024.07.29 ஆம் திகதியிலிருந்து 2024.08.13 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக இருபதினாயிரம் ரூபாவை (20,000 ரூபா) மற்றும் பெசேவ ஆகியவற்றுடன் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், கடுவெல, புதிய கண்டி வீதி, கடுவெல மாநகர சபை, மாநகர ஆணையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்முதல் செய்யப்படலாம்.
7. அனைத்து விலைமனுக்களும் ஆரம்ப ஒப்பந்த விலையின் 1% (832,000 ரூபா கடித மூலமாக) ஐ விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 210 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலும் வங்கி உத்தரவாத பாங்கிலமைந்ததும் உரிமமுள்ள வர்த்தக வங்கியொன்றிலிருந்து விலைமனுப்பிணையின் படிவத்தை பாவித்து (மாற்ற இயலாததும், நிபந்தனையற்றதும் முதல் கோரிக்கையிலேயே மாற்றக்கூடிய உத்தரவாதத்துடன்) நியமமாக்கப்பட்ட படிவங்களின் (விலைமனு) 9 ஆம் பிரிவில் அடக்கப்பட்டதுமான விலைமனுப் பிணையொன்றின் மூலமாக அல்லது அதே தொகைக்கு ரொக்கப்பண வைப்பிலிடும் துண்டு/ வங்கி வரைவுவொன்றின் மூலமாக செலுத்தப்பட்ட துண்டுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
8. 2024.08.06 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு தலாஹேன தகனச்சாலையில் தள பரீட்சித்தலும் அதனைத் தொடர்ந்து கடுவெல மாநகர சபையில் மாநகர ஆணையாளரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமும் நடைபெறும்
9. 2024.08.13 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மாநகர ஆணையாளர், கடுவெல மாநகர சபை, கடுவெல என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். மூடும் நேரத்திற்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**மாநகர ஆணையாளர்,**
**கடுவெல மாநகர சபை,**
**கடுவெல.**
25.07.2024.

# விலைமனுக்கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

## கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் அபிவிருத்தி கருத்திட்டம் II கட்டம் 2 இல் உத்தேசிக்கப்பட்டுள்ள விமானநிலைய வெளி நிலப்பக்க பகுதியில் அமைந்துள்ள கழிப்பறை அமைப்பை நிர்மாணிப்பதற்கான விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

## (Landside Public Washroom Facility - Bandaranaike International Airport Development Project- Phase II Stage 2)

**விலைக்கேள்வி இலக்கம்: 051/T/2024**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி சார்பில், தவிசாளரால் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், அபிவிருத்தி கருத்திட்டம் II கட்டம் 2 இல் உத்தேசிக்கப்பட்டுள்ள விமானநிலைய வெளி நிலப்பக்க பகுதியில் அமைந்துள்ள கழிப்பறை அமைப்பை நிர்மாணிப்பதற்காக முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகுதி மற்றும் தகைமைப்பெற்ற விலைக்கேள்வியாளர்களிடமிருந்து இத்துடன் அழைக்கப்படுகின்றன. கீழே விவரிக்கப்பட்டுள்ளவாறு சீரமைப்பு பணிகளுக்காக சுமார் 178 + VAT மில்லியன் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்துக்குரிய கட்டுமானப் பணிகளுக்கும் தேவையான அனைத்து கட்டிடப்பொருட்கள், தொழிற்படை தேவைப்பாடுகள், விவரக்குறிப்பீட்டில் உள்ளவாறும் மற்றும் குறித்த திட்டமிடல்கள் மற்றும் விவரக்குறிப்பீடுகளுக்கமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

நிறைவு செய்யப்பட வேண்டிய காலவெல்லை நூற்று ஐம்பது நாட்களாகும். (150)

தேசிய போட்டியிடல் விலைக்கூறல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கூறல்கள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்துள்ள தகைமைகளைக் கொண்ட விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், இந்த நிறுவனத்தில் இதற்கு முன்னர் தடுப்புப் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர்/ தாபனமாக இருத்தல் வேண்டும். கட்டிட நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டிடங்கள் நிர்மாணத்திற்காக C3 தரத்தில் மற்றும் அதற்கு உயர் தரங்களில் பதிவுசெய்துள்ள, கட்டுமானப் பணிகள் தொடர்பில் அனுபவமுள்ள ஒப்பந்ததாரராக இருத்தல் வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் கடந்த 10 ஆண்டு காலத்துக்குள் குறைந்தபட்சம் இதேபோன்ற 03 கட்டுமானப் பணிகளை வெற்றிகரமாக முடித்திருக்க வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, மேலதிக தகவல்களை பெற வேண்டுமாயின் 2024/07/30 முதல் 2024/09/10 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலைசெய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 3.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், கிளைத் தலைவர், கருத்திட்ட தொலைபேசி இலக்கங்கள் 011-2263700 அழைப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

இக்காரணம் தொடர்பில் ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு 2024/07/30 ஆந் திகதி முதல் 2024/09/10 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவின், கிளைத் தலைவருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றினை முன்வைத்ததன் பின்னர் விலைக்கேள்வி கட்டணமாக திருப்பித்தரப்படாத ரூபா முப்பதாயிரம் (ரூபா 30,000.00) காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட அக்குறித்த விலைக்கேள்வி ஆவண இணைக்கோப்புகளைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். உரிய விலைக்கேள்வி ஆவணங்கள், மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு நேரடியாக சமுகமளித்து 2024/07/30ஆம் திகதி முதல் 2024/09/10 ஆம் திகதி வரை மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் கட்டணமின்றி இலவசமாக பார்வையிடுவதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள் 2024/09/11 ஆந் திகதி பி.ப 02.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக சமுகமளித்து அல்லது பதிவுத் தபால் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவின், இலக்கம் 1 கொண்ட திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவருக்கு கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் அக்குறித்த நேரத்திற்கு விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்கள், ஒரு விலைக்கேள்விக்காக ரூபா இருபத்தேழு இலட்சம் (ரூபா. 2,700,000.00) காசு வைப்பாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தாபனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி உத்தரவாதத்துடன் (முதல் கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறி) அக்குறித்த விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

சகல விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிக்கு 2024/08/14 ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், கருத்திட்டப் பிரிவின் கலந்துரையாடும் அறையில் நடைப்பெறுகின்ற ஆரம்ப விலைக்குறிப்பீட்டுக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

# பெறுகை அறிவித்தல்

## நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம் வடமத்திய மாகாணம்

01. வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தினால் செயற்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள பின்வரும் செயற்றிட்டங்களுக்காக வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவராக என்னால் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | செயற்றிட்டம் | மதிப்பீட்டுத் தொகை ரூபா மில்லியன் | ஒப்பந்தக் காலம் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி ரூபா | மீளளிக்கப் படாத விலை மனுக் கட்டணம் ரூபா | CIDA பதிவு | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | கஹட்டகஸ்திகிலிய நன்னடத்தை அலுவலகத்தின் திருத்தவேலைகள் | 5.5 | 120 நாட்கள் | 60,000.00 | 2,000.00 | C6 அல்லது C7 (கட்டிடங்களுக்கு) | 105 நாட்கள் |

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும். இந்தப் பெறுகையின் மொத்த மதிப்பீட்டுச் செலவு 50 மில்லியன் ரூபாவை விட குறையும் போது பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை மாகாண திறைசேரியின் 2016/13(iii) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் ஏற்புடையதாகும்.

03. தகைமையைப் பூர்த்தி செய்துள்ள தகுதி நீக்கம் செய்யப்பட்டோர் பட்டியலுக்கு உட்படாத விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணத்தை வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் நிதி உதவியாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் வழங்கப்படும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் தேவையான விலைக்கோரல் மாதிரிகளை வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்தின் அலுவலகத்திலிருந்து 2024-07-29ஆம் திகதி முதல் 2024-08-20ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்களை 0252222570 அல்லது 0254928619 எனும் தொலைபேசி இலக்கங்களின் விசாரித்தறியலாம்.

04. சகல விலைமனுக்களுடனும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட, அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலமான 2024-08-21ஆம் திகதி முதல் 2024-12-04ஆம் திகதி வரையில் விலைமனு ஆவணங்களின் மாதிரிகளில் காட்டப்பட்டுள்ள வகையில் நிபந்தனையற்ற விலைக்கோரல் பிணை முறியொன்றை அல்லது வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களத்திற்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். விலைகள் 2024-08-21ஆம் திகதி முதல் 2024-11-06ஆம் திகதி வரையில் (77 நாட்கள்) செல்லுபடியாதல் வேண்டும்.

05. விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறான இரு உறைகளில் இட்டு முத்திரைக்குறி பொறித்து பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கோரல் நிபந்தனைகளுக்கு அமைவாக பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2024-08-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக ''ஆணையாளர், திணைக்கள பெறுகைக் குழு, மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம், கே.பீ. ரத்நாயக்க மாவத்தை, அநுராதபுரம்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்கள ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் நேரில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

06. 2024-08-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்கள ஆணையாளரின் உத்தியோகபூர்வ அறையில் விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

07. இந்த பெறுகை தொடர்பில் வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**ஆணையாளர்/ தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வடமத்திய மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்களம்,**
**கே. பீ. ரத்நாயக்க மாவத்தை,**
**அநுராதபுரம்.**
**2024-07-29ஆம் திகதி.**

# பெறுகை அறிவித்தல்

மாகாண காணி, நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி, கிராம அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் மகளிர் விவகார அமைச்சின் பெறுகைக் குழுவில் தலைவரால் வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அபிவிருத்தி செயய்யப்படும் கீழ்க்காணும் வீதி செயற்றிட்டங்களுக்கு கார்பட் (Asphalt) வழங்குதல், பரப்புதல் மற்றும் அழுத்துவதற்காக தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | பெறுகை இலக்கம் | விபரம் | பி.செ. பிரிவு | பொறியியல் மதிப்பீட்டு தொகை (ரூ.மி.) | கேள்விப் பிணை | | ஆவணக் கட்டண மான மீளளிக்கப் படாத தொகை (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெறுமதி (ரூ.) | செல்லுபடி திகதி | |
| 01 | NCP/ PRDA/As- phalt/ 2024/ 01 | கலென் பிந்துனுவெவ சீப்பு குளம் வீதி Asphalt வழங்கி பரப்புதல் (0+020-0+320) மற்றும் (4+000-5+000) | கஹட்ட கஸ்திகிலிய | 26.17 | 393,000.00 | 2024.12.17 | 7,500.00 |
| 02 | NCP/ PRDA/As- phalt/2024 02 | மரதன்கடவல குஞ்சிகுளம் வீதி Asphalt வழங்கி பரப்புதல் (0+090-1+040 மற்றும் (7+000-7+600) | மரதன் கடவல | 17.84 | 268,000.00 | 2024.12.03 | 5,000.00 |

01. இந்த வேலைக்கான கேள்வி ஆவணங்களை அநுராதபுரம் எச்.பீ. சேமசிங்ஹ மாவத்தையில் அமைந்துள்ள வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையகத்தில் 2024.07.29 முதல் 2024.08.20 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 - பி.ப. 15.00) இற்குள் மீளளிக்கப்படாத வைப்பை நிறுவனத்திற்கு காசாக செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

02. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை அதனோடு சம்பந்தப்பட்ட சகல ஆவணங்களினதும் உறுதி செய்த பிரதியுடன் 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி" என வேறு வேறாக உறைகளில் இட்டு மீண்டும் அதனை ஒரு உறையாக இடது பக்க மேல் மூலையில் குறித்த பெறுகை இலக்கம் மற்றும் விபரத்தை உறுதியாகக் குறிப்பிட்டு 2024.08.21 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டுவந்து அம்முகவரியில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

03. கேள்வி சமர்ப்பிக்கும் போது அட்டவணையில் குறிப்பிடப்படும் பெறுமதியுடன அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை பொது முகாமையாளர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகர சபை வடமத்திய மாகாணம் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.

04. இப்பெறுகை சம்பந்தமாக பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024.08.12 மு.ப. 11.00 இற்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை, எச்.பீ. சேமசிங்ஹ மாவத்த, அநுராதபுரம் என்ற இடத்தில் நடைபெறும்.

05. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கீழ்க்காணும் முகவரியில் கேள்விகள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

06. இப்பெறுகை சம்பந்தமாக மேலதிக தகவல்கள் 025-2222505 தொ.பே. இலக்கம் மூலம் பெற்றுக் கொள்ள முடிவதுடன் இறுதித் தீர்மானம் எடுத்தல் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**தலைவர்/அமைச்சு செயலாளர்,**
**மாகாண காணி, நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி,**
**கிராமிய அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும்**
**மகளிர் விவகார அமைச்சு,**
**பெறுகைக்குழு.**
**1ம் மாடி, வடமத்திய மாகாண சபை,**
**அநுராதபுரம்.**

**தொ.பே. இல. 025-2222538**

**1964ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டம் 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**எனது இல. அத்பத்/433/2023**
**கா.அ. குறிப்பு**
**இல. 4-3./7/2020/எச்.டபிள்யூ/300**

கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் காணி/ காணிகளை பொது தேவைக்கு வேண்டியதாக அரசு எடுத்துக் கொள்ள எண்ணியிருக்கிறார்கள். மேலதிக விபரங்களுக்கு 2024ஆம் ஆண்டு ஜுலை மாதம் 01ஆம் திகதிய 2391/6ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோஷலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 01. மாகாணம் | : | மேல் மாகாணம் |
| 02. மாவட்டம் | : | கம்பஹா |
| 03. பிரதேச செயலாளர் பிரிவு | : | மஹர |
| 04. கிராம அலுவலர் பிரிவு | : | இல. 245, சூரியபாலுவ வடக்கு |
| 05. கிராமம் | : | சூரியபாலுவ வடக்கு |
| 06. கடத்திரல் வரைபட இல. | : | 510860/7/18 |
| 07. துண்டுகளின் எண்ணிக்கை | : | 1-4 |
| 08. விஸ்தீரணம் | : | 0.0095 ஹெக்டயார் |

**ஜீ.பீ.எம். லலித் பண்டார,**
**பிரதேச செயலாளர்,**
**மஹர.**

**பிரதேச செயலாளர் செயலகம்,**
**மஹர.**
2024.07.25

## வ/ப விமானநிலையம் மற்றும் விமானசேவை (இலங்கை) (தனியார்) நிறுவனம்

### பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய தீ மற்றும் பாதுகாப்பு பிரிவில் மலசலகூட அமைப்பை பழுதுபார்த்தலுக்கான விலைமனுக்கள் கோரல்

### பெறுகை இலக்கம்: 031/T/2024

வ/ப விமானநிலைய மற்றும் விமானசேவை (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரால் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய தீ மற்றும் பாதுகாப்புப் பிரிவில் மலசலகூட அமைப்பை பழுதுபார்ப்பதற்கான விலைமனுக்கள் தகைமையுள்ள, தகுதியான கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இக் கேள்வி வழங்களின் பின்னர் நூற்றி ஐம்பது (150) இற்குள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

கேள்விதாரர் இந் நிறுவனத்தில் இதற்கு முன்பு நிராகரிக்கப்பட்ட கேள்விப் பெயர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத ஒருவர்/ நிறுவனமாக இருத்தல் வேண்டும். வ/ப விமானநிலைய மற்றும் விமானசேவை (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வழங்கல் முகாமையாளர் பிரிவில் (தொ.பே.இல. 011 - 2264102/ 011 - 2264107) கேள்விக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா பதினைந்தாயிரம் (15,000/-) தொகையை செலுத்தி ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட மேற்படி கேள்வி ஆவணத் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம். கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவது 30.07.2024 முதல் 27.08.2024 வரை வாரத்தின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் ஆகும். மேற்படி கேள்வி ஆவணங்களை மேற்படி முகவரியில் கட்டணம் இன்றியே பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்விப் பிணை சார்பக அக் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிறுவனத்திலிருந்து விநியோகிக்கப்படும் ரூபா ஆறு இலட்சம் (600,000.00) பெறுமதியான பிணையொன்றை அல்லது நிதிப் பிணையொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

தலைவர், பெறுகைக் குழு, இல.01, வழங்கல் முகாமைத்துவ பிரிவு, வ/ப விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு அப் பொறியிடப்பட்ட பெறுகை ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் 28.08.2024 பி.ப. 2.00 இற்கு அக்கால எல்லை முடிவுறும். அன்றைய தினம் அந்நேரத்திலேயே குறித்த கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விக்கு முன்னரான கூட்டம் 2024.08.16 மு.ப. 10.00 இற்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க, சர்வதேச விமான நிலையத்தின் வ/ப விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் பராமரிப்புக் கட்டிடத் தொகுதியில் கூட்ட மண்டபத்தில் நடத்தப்படுவதுடன் கேள்விதாரர் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

இது பற்றிய மேலதிக விபரங்கள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க, சர்வதேச விமான நிலையத்தின் வ/ப விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின், சிவில் பொறியியல் (பராமரிப்பு) பிரிவின் பகுதித் தலைமையிடம்

தொலைபேசி இலக்கம் : 011 - 2264700/ 011 - 2264704 ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

## Repeat Your ad For Better Offers

## அறிவித்தல்

கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு கொச்சிக்கடையில் அமைந்துள்ள 40 தோட்டத்தில் அமைந்துள்ள 17.49 பேர்ச் காணி சட்டத்தரணி எச்.டி.எச். செனவிரத்னவினால் உறுதி செய்யப்பட்ட caveat தடையுத்தரவு 2024 மார்ச் 26 முதல் 2026 மார்ச் 25 வரை பாலகிருஷ்ணன் ரிஸ்வானிக்கு உரியது என்பதாகும்.

**பாலகிருஷ்ணன் ரிஸ்வானி**

UN-HABITAT

## "இளைஞர் பலம் - கொண்டதோர் நகரம்"
## 2024 ஒக்டோபர் 07
## உலக குடியிருப்பு தினம்
## நாடளாவிய ரீதியில் பாடசாலை சித்திரம் மற்றும் கட்டுரைப் போட்டி

### *நாட்டின் உள்ள அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் அழைப்பு !*

உங்களது ஆக்கங்களுக்கு பின்வரும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொள்ளலாம்.

01. எதிர்கால நகரமொன்றின் குடியிருப்பு.
02. இளைஞர் பலத்தினை திட்டமிட்ட ஒரு நகர நிர்மாணத்திற்கு எவ்வாறு ஈடுபடுத்திக் கொள்ள முடியும்?
03. குடியிருப்பு நிர்மாணத்தில் நவீன தொழில்நுட்பத்தின் பாவனை.
04. சுற்றாடல் நலன் சார்ந்த நகர மக்களின் வாழ்வு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தொனிப்பொருள் அல்லது சகல தொனிப்பொருள்களையும் உள்ளடக்கியதாக தமது சித்திரம் அல்லது கட்டுரையாக ஆக்கம் செய்யலாம்.

**போட்டிக்கான பங்குபற்றல்**

- அரசாங்க அல்லது தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவ மாணவிகள் பங்கு பற்ற முடியும்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களின் பிள்ளைகள் இப்போட்டியில் பங்குபற்ற முடியாது.

**பாடசாலை சித்திரப் போட்டி**

போட்டிக் குழுக்கள்
முதலாவது குழு தரம் 3,4,5 வரை
இரண்டாவது குழு தரம் 6,7,8,9 வரை
மூன்றாவது குழு தரம் 10,11,12,13 வரை

சித்திரப் போட்டிக்காக முன்வைக்கப்படும் ஆக்கங்கள் 17 x 22 அங்குல அளவிலான காகிதத் தாளில் வரையப்படல் வேண்டும். குறித்த வரைதலுக்காக பெஸ்டல், நீர்ச்சாயம், பென்சில், போன்ற எத்தகைய நிறங்களையும் பயன்படுத்தலாம்.

**மேற்படி நிபந்தனைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**

**பாடசாலை கட்டுரைப்போட்டி**

மொழி 1. சிங்களம் 2. தமிழ்

முதலாவது குழு தரம் 06,07,08 மற்றும் 09 வரை
சொற்களின் எண்ணிக்கை 300 சொற்களுக்கு உட்பட்டதாக காணப்படல் வேண்டும்.

இரண்டாவது குழு - தரம் 10,11,12 மற்றும் 13 வரை
சொற்களின் எண்ணிக்கை 500 சொற்களுக்கு உட்பட்டதாக காணப்பட வேண்டும்.

**வெற்றி பெறுபவர்களுக்கான பரிசில்கள்**

முதலாமிடம் - ரூபா 15,000.00 பணப்பரிசும் கிண்ணமும் சான்றிதழும்
இரண்டாமிடம் - ரூபா 10,000.00 பணப்பரிசும் கிண்ணமும் சான்றிதழும்
மூன்றாமிடம் - ரூபா 7,500.00 பணப்பரிசும், கிண்ணமும் சான்றிதழும்
திறமைக்கான பரிசில்கள் ரூபா 3000.00 பெறுமதியான 10 ஆறுதல் பரிசில்களும் சான்றிதழ்களும்

**விண்ணப்பங்கள்**

மேற்படி போட்டிக்கான சகல விண்ணப்பங்களையும் கீழே உள்ள முகவரியில் அல்லது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட அலுவலகங்களிலிருந்து அல்லது www.nhda.gov.lk என்ற இணையதளம் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

**ஆக்கங்களை பொறுப்பேற்றல்**

மேற்படி போட்டிக்காக முன்வைக்கப்படும் சகல ஆக்கங்களையும் குறித்த பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் 2024 செப்டெம்பர் 06 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தபால் மூலமாக அல்லது நேரடியாகவோ கீழுள்ள முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்

- உங்களது ஆக்கங்களை அருகில் உள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்டக் காரியலயங்களிலும் கையளிக்க முடியும்.

முகவரி
உதவிப் பொதுமுகாமையாளர் (தகவல் மற்றும் பிரச்சாரப்பிரிவு)
தேசிய வீடமைப்பு அபிவிவிருத்தி அதிகார சபை
07வது மாடி
சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை
கொழும்பு 02

தொலைபேசி இல 0112-447038 / 0112-389513 / 0112-447207

**வெற்றி பெறும் ஆக்கங்களுக்கு பரிசு வழங்கல்**

வெற்றி பெறுபவர்களுக்குரிய பரிசில்கள் 2024 அக்டோபர் 07 ஆம் திகதி நடைபெறும் உலக குடியிருப்பு தின விஷேச வைபவத்தின் போது வழங்கப்படும்.

**தலைவர்**
**தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு**

## சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

திகதி மற்றும் ஏல விற்பனை இடம்

திகதி : **14/08/2024**
இல.343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல.328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல.05, மைத்திறிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல.80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி.
இல.28, 30, இரண்டாம் குறுக்குத் தெரு, வவுனியா.
இல.86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல.462/A, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
A 9 வீதி, கரடிபோக்கு சந்திக்கு அருகில், கிளிநொச்சி.
இல.15, அலகு 07, துன்னாலை வீதி, நெல்லியடி.
இல.34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
இல.498, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
இல.163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரி கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல.179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல.65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல.42, மிஹிந்து மாவத்தை, குருணாகல்
இல.140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல.311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல.103/C, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.

திகதி : **15/08/2024**
இல.14, மங்கல வீதி, கம்பஹா.
இல.837E, தலங்கம வடக்கு, மாலபே.
இல.502/2, குமாரகே கட்டிடம், அவிசாவளைவீதி, கடுவெல.
இல.579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல.348, காலி வீதி, பாணந்துறை.
இல.362, கோட்டை வீதி, ராஜகிரிய.
இல.115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல.01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல.34, ஹொரன வீதி, பிலியந்தல.
இல.188, பிலியந்தல வீதி, மஹரகம.
இல.173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல.16, ஹைலெவல் வீதி, ஹோமாகம.
இல.546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல.29, ஸ்டேசன் வீதி, தெஹிவளை.
இல.30A, நாவல வீதி, நுகேகொட.
இல.106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.

திகதி : **16/08/2024**
இல.64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல.493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல.120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல.143 J, கண்டி வீதி, கடவத்த.
இல.310/2A, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல.49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல.46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல.235, புதிய காலி வீதி, அம்பலாங்கொட.
இல.103, டி.எஸ் சேனநாயக்க மாவத்தை, அம்பாறை.
இல.131, நுவரெலிய வீதி, கம்பளை.
இல.271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல.186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி.
இல.18/2, பதியதலாவ வீதி, மஹியங்கனை.
இல.80, கண்டி வீதி, நுவரெலியா.

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்
**SINGER FINANCE**
இல. 498, ஆர்.ஏ.டி மேல் மாவத்தை, கொழும்பு 03.

## பெறுகை அறிவித்தல்

### ஆதார வைத்தியசாலை (போதனா) - கம்பளை
(சுகாதாரம் மற்றும் சுதேச வைத்தியசேவைகள் அமைச்சு)

### மின்சார முறைமையை சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் 2024ஆம் வருடத்திற்கான விலைமனு கோரல்

1. கம்பளை ஆதார வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் மின்சார முறைமையின் சேர்விஸ் மற்றும் பராமரிப்பு - 2024 எனும் பணிக்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

   1.1 கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமைகள்:

   ❖ நிர்மாண அபிவிருத்தி நிறுவனத்தில் (CIDA) மின்சார பராமரிப்பு தொடர்பாக EM - 4 Electrical Installation இற்கு பதிவு செய்திருத்தல்

   ❖ வைத்தியசாலைகள் / அரச நிறுவனங்கள் / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் மின்சார பராமரிப்பு வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியமைக்கான அனுபவச் சான்றிதழ் மற்றும் / அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார்துறை நிறுவனமொன்றில் 05 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் மின்சார பராமரிப்பு வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றியமை தொடர்பான அனுபவத்தைக் கொண்டிருத்தல்.

   1.2 முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் பெற்றுக்கொண்ட 50,000.00 ரூபாவிற்கான கேள்விப் பிணை முறியொன்றை வழங்குதல் வேண்டும். அதன் செல்லுபடிக் காலம் 119 நாட்களாகவிருத்தல் வேண்டும்.

   1.3 வருடாந்த ஒப்பந்தப் பெறுமதியான ஐந்து (05) மில்லியன் ரூபாவிற்கு மேற்படுமானால் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரின் பதிவுச் சான்றிதழை (PCA3) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

2. 2024-07-30ஆம் திகதி முதல் 2024-08-19ஆம் திகதி வரையான பொதுவான வேலை நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலையின் பணிப்பாளர் பெயருக்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்குச் செலுத்தி அலுவலகத்திலிருந்து இயைபுடைய விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 081-2352261 நீடிப்பு 109)

3. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-08-20ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் கம்பளை ஆதார (போதனா) வைத்தியசாலை பணிப்பாளர் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவற்றை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட உறையொன்றினுள் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மின்சார முறைமையின் பராமரிப்பு மற்றும் சேர்விஸ் - 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்கு திறக்கப்படும்.

4. உங்களால் சமாப்பிக்கப்படும் விலைகளை வெட்டிவிடல், ஒன்றிற்கு மேல் ஒன்றாக எழுதுதல் என்பவை இல்லாமல் தெளிவான எழுத்துக்கள் மற்றும் இலக்கங்களில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவ்வாறு பிறழ்வுகளுடன் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் அவ்வேளையிலேயே நிராகரிக்கப்படும்.

5. விலைமனுக்கள் திறக்கப்படும்போது விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் கலந்துகொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படும்.

6. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2024-08-13ஆம் திகதி ந.ப. 12.00 மணிக்கு பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும்.

8. விலைக்கோரலைக் கையளித்தல் தொடர்பான இறுதித் தீர்மானத்தை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்தியசாலை (போதனா) கம்பளை.**


To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT

Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want




- Auto Focus

Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

# சமரி, ஹர்ஷிதாவின் அபார ஆட்டத்துடன் இலங்கைக்கு முதல்முறை ஆசிய கிண்ணம்

சமரி அத்தபத்து மற்றும் ஹர்ஷிதா சமரவிக்ரமவின் அபார துடுப்பாட்டத்தின் மூலம் இந்தியாவுக்கு எதிரான மகளிர் ஆசிய கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை அணி முதல் முறையாக சம்பியன் கிண்ணத்தை வென்றது.






தம்புள்ளையில் நேற்று (28) நடைபெற்ற இறுதிப் போட்டியில் இதுவரை நடந்த எட்டுத் தொடர்களில் ஏழு முறை சம்பியனும் நடப்புச் சம்பியனுமான பலம்மிக்க இந்திய அணி 166 ஓட்டங்கள் என்ற சவாலான வெற்றி இலக்கை நிர்ணயித்தபோதும் இலங்கை வீராங்கனைகளால் டி20 போட்டிகளில் தனது அதிகூடிய வெற்றி இலக்கை எட்ட முடிந்தது.

முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்திய அணிக்கு ஆரம்ப வீராங்கனை ஸ்மிரித்தி மந்தனா 47 பந்துகளில் 60 ஓட்டங்களை பெற்றதோடு மத்திய வரிசையில் ரிச் கோஷ் 14 பந்துகளில் 30 ஓட்டங்களை விளாசினார். இதன் மூலம் இந்திய அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்த 165 ஓட்டங்களை பெற்றது.

பதிலெடுத்தாட வந்த இலங்கை அணி ஆரம்ப வீராங்கனை விஷ்மி குணரத்னவை ஒரு ஓட்டத்துடன் இழந்தபோதும் இரண்டாவது விக்கெட்டுக்கு இணைந்த சமரி மற்றும் ஹர்ஷிதா அதிரடியாக 87 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர். இதன்போது அணித்தலைவி சமரி அத்தபத்து 43 பந்துகளில் 9 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் 61 ஓட்டங்களை பெற்றிருந்த போது ஆட்டமிழந்தார்.

என்றாலும் மறுமுனையில் ஆடிய ஹர்ஷிதா மூன்றாவது விக்கெட்டுக்கு கவிஷா தில்ஹாரியுடன் சேர்ந்து இலங்கை அணியை வெற்றி வரை அழைத்துச் சென்றார். 51 பந்துகளுக்கு முகம் கொடுத்த ஹர்ஷிதா 6 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 69 ஓட்டங்களை பெற்றார்.

மறுமுனையில் சிக்ஸர் ஒன்றை விளாசி இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்த தில்ஹாரி 16 பந்துகளில் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் இலங்கை மகளிர் அணி 18.4 ஓவர்களின் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து 167 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

# இங்கிலாந்து டெஸ்டுக்கு இலங்கை வீரர்கள் 8 பேர் முன்கூட்டி பயணம்



இங்கிலாந்துக்கு எதிராக எதிர்வரும் ஒகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்கான இலங்கை அணியின் முன்னணி டெஸ்ட் வீரர்கள் எட்டுப் பேர் முன்கூட்டியே எதிர்வரும் ஒகஸ்ட் 3ஆம் திகதி இங்கிலாந்து பயணிக்கவுள்ளனர். துணைக் கண்ட அணிகளுக்கு சவாலாக உள்ள இங்கிலாந்து சூழலுக்கு தயாராகும் வகையிலேயே இந்த வீரர்கள் இரண்டு வாரங்களுக்கு முன் அங்கு செல்லவுள்ளனர்.

இதன்படி அணித் தலைவர் தனஞ்சய டி சில்வா, திமுத் கருணாரத்ன, தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், லஹிரு குமார, விஷ்வ பெர்னாண்டோ, பிரபாத் ஜயசூரிய மற்றும் கசுன் ராஜித்தவுடன் அணியின் உடற்தகுதி நிபுணர் ஜொனதன் பொர்ட் இன்னும் ஒருசில நாட்களில் இங்கிலாந்து செல்கின்றனர். எஞ்சிய வீரர்கள் இந்தியாவுக்கு எதிராக தற்போது நடைபெற்று வரும் தொடருக்குப் பின்னர் இங்கிலாந்து செல்லத் திட்டமிட்டுள்ளனர்.

முன்கூட்டி இங்கிலாந்து செல்லும் வீரர்கள் லண்டன் ஷென்லி கிரிக்கெட் கழகத்தில் தமது பயிற்சிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணம் எதிர்வரும் ஒகஸ்ட் 14 ஆம் திகதி வோர்சஸ்டரில் ஆரம்பமாகும் பயிற்சிப் போட்டியுடன் தொடங்கவுள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் ஓல்ட் டிரபர்ட்டில் ஒகஸ்ட் 21 தொடக்கம் 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதோடு தொடர்ந்து இரண்டு மற்றும் மூன்றாவது டெஸ்ட் போட்டிகள் முறையே லோர்ட்ஸில் ஒகஸ்ட் 29 மற்றும் ஓவலில் செப்டெம்பர் 6 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன.

கடைசியாக இலங்கை அணி டெஸ்ட் தொடர் ஒன்றுக்காக இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டது கடந்த 2016 ஆம் ஆண்டிலாகும். அஞ்சலோ மத்தியூஸ் தலைமையில் சென்ற இலங்கை அணி ஒரு போட்டியை சமன் செய்தபோதும் தொடரை 0–2 என இழந்தது.

# ஒலிம்பிக்கின் முதல் போட்டியில் விரேன் தோல்வி

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் இலங்கை சார்பில் முதல் வீரராக களமிறங்கிய பூப்பந்து வீரர் விரேன் நெத்தசிங்க நேற்று (28) தனது முதல் போட்டியில் தோல்வியை சந்தித்தார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு போட்டியில் இலங்கை நேரப்படி நேற்று பிற்பகல் 1.40இற்கு ஆரம்பமான ஆட்டத்தில் சர்வதேச பூப்பந்து தரவரிசையில் ஏழாவது இடத்தில் இருக்கும் லிஷி ஜியாவை விரேன் எதிர்கொண்டார்.

போட்டியின் ஆரம்பத்தில் தனது எதிராளியுடன் சரிக்கு சமமாக போட்டியிட்ட அவர், ஜியாவின் அனுபவத்துக்கு முன் பின்னடைவை சந்தித்தார். இதனால் முதல் சுற்றில் அவர் 21–14 என பின்தங்கினார்.



தொடர்ந்து இரண்டாவது சுற்றின் ஆரம்பத்திலும் முன்னிலை பெற்ற அவர் பின்னர் 21–12 என அந்த சுற்றையும் இழந்து தோல்வியை சந்தித்தார்.

எனினும் விரேனுக்கு ஆரம்பச் சுற்றில் மேலும் ஒரு போட்டி எஞ்சியுள்ளது.

அந்தப் போட்டியில் அவர் ஸ்பெயின் வீரர் பப்லோ அபியானை எதிர்கொள்ளவுள்ளார். இந்தப் போட்டி நாளை (30) நடைபெறவுள்ளது. விரேன் உலக தரவரிசையில் 70 ஆவது இடத்தில் இருப்பதோடு அபியான் 62 ஆவது இடத்தில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக் போட்டிக்கு நேரடித் தகுதி பெற்ற 20 வயதான விரேன், ஒலிம்பிக் போட்டியில் ஆடும் உலகின் இளம் பூப்பந்து வீரராகவும் உள்ளார்.



## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலிய கட்டுப்பாட்டு கோலன் குன்று தாக்குதலால் லெபனானுடன் முழு அளவில் போர் வெடிக்கும் அச்சம்

## காசாவில் தொடரும் குண்டு மழையில் மேலும் பலர் பலி

லெபனானில் இருந்து நடத்தப்பட்ட ரொக்கெட் தாக்குதலில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு கோலன் குன்றில் 12 சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் கொல்லப்பட்டதை அடுத்து தெற்கு லெபனானின் பல இலக்குகள் மீது இஸ்ரேல் பதில் தாக்குதல் நடத்திய நிலையில் முழு அளவில் போர் வெடிக்கும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது.

மறுபுறம் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து நீடிக்கும் நிலையில் அங்கு இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை உட்பட பல இடங்களில் நடத்திய தாக்குதல்களில் பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

கோலன் குன்று தாக்குதலை அடுத்து 'எதிரி மீது கடும் தாக்குதல் நடத்தப்படும்' என்று இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யோவ் கல்லன்ட் நேற்று எச்சரித்த நிலையில் அமெரிக்கா பயணித்தின் பின் இஸ்ரேல் திரும்பிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேற்று பாதுகாப்பு அமைச்சரவை கூட்டத்தை நடத்தியதோடு, 'கடும் பதிலடி கொடுப்போம்' என்று உறுதி பூண்டுள்ளார்.

லெபனானில் புதிய இராணுவ நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டால் 'எதிர்பாராத விளைவுகளுக்கு இட்டுச்செல்லும்' என்று இஸ்ரேலை ஈரான் எச்சரித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடிக்க தூண்டுதலாக அமைந்த இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலுக்குப் பின்னர் இஸ்ரேலிய பொது மக்கள் மீதான மிகப்பெரிய தாக்குதலாக இந்தத் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. காசாவில் போர் வெடித்தது தொடக்கம் லெபனானுடனான எல்லையில் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா போராளிகள் கிட்டத்தட்ட தினசரி தாக்குதல்களை நடத்தி வந்த நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த ரொக்கெட் தாக்குதலுக்கு லெபனானின் ஹிஸ்புல்லா மீது இஸ்ரேல் குற்றம் சாட்டியபோதும் ஈரான் ஆதரவு பெற்ற அந்த அமைப்பு, இந்தத் தாக்குதலுக்கும் தமக்கும் தொடர்பில்லை என்று மறுத்துள்ளது.

கோலன் குன்றில் உள்ள துரூஸ் மக்கள் வசிக்கும் மஜிதல் ஷம்ஸ் சிறு நகரில் உள்ள கால்பந்து மைதானம் ஒன்றில் கடந்த சனிக்கிழமையே ரொக்கெட் குண்டு விழுந்துள்ளது. காசாவில் மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றை தாக்கி 30 பேரை கொன்ற சம்பவம் இடம்பெற்று சில மணி நேரங்களிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

**39,324 பலஸ்தீனர்கள் பலி**

மத்திய காசாவின் டெயிர் அல் பலாஹ்வில் உள்ள கதீஜா பாடசாலை மீதே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்தது. கொல்லப்பட்டவர்களில் பதினைந்து சிறுவர்கள் மற்றும் எட்டு பெண்கள் அடங்குவதோடு மேலும் 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

எனினும் கதீஜா பாடசாலைக்குள் இருக்கும் ஹமாஸ் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையத்தையே இலக்கு வைத்ததாக இஸ்ரேல் இராணுவம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தப் பாடசாலை இஸ்ரேலிய துருப்புகள் மீது ரொக்கெட் தாக்குதல்களை நடத்த பயன்படுத்தப்படுவதாகவும் இங்கு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகவும் தாக்குதலுக்கு முன்னர் பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டதாகவும் அதன் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவில் ஆட்சி புரியும் ஹமாஸ் அமைப்பு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், 'கதீஜா பாடசாலையில் இடம்பெற்ற இனப்படுகொலை, இஸ்ரேலிய எதிரிகள் அனைத்து மனிதப் பெறுமானங்களில் இருந்து விலகி அனைத்து போர் சட்டங்களையும் மீறுவதை உறுதி செய்வதாக உள்ளது' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்கு காசாவில் கான் யூனிஸ் நகரில் இஸ்ரேல் சரமாரி வான் தாக்குதல்களை தொடரும் நிலையில் நேற்றுக் காலை குறைந்தது எட்டு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. பாதிக்கப்பட்டவர்கள் நாசர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

கான் யூனிஸ் நகரில் இஸ்ரேலியப் படை வான் மற்றும் தரை மார்க்கமாக அண்மை நாட்களாக தாக்குதல்களை தீவிரப்படுத்தி இருக்கும் நிலையில் நேற்று முன்தினம் இஸ்ரேலின் தாக்குதல்களில் இங்கு குறைந்தது 23 பேர் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டிருந்தது. கடந்த திங்கட்கிழமை தொடக்கம் கான் யூனிஸ் மீது நடத்தி வரும் இஸ்ரேலின் தாக்குதல்களில் சுமார் 180 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர்.



இஸ்ரேலின் வெளியேற்ற உத்தரவை அடுத்து கான் யூனிஸ் நகரில் இருந்து சுமார் இரண்டு இலட்சம் பேர் வரை மீண்டும் ஒருமுறை வெளியேறிச் சென்றிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. எவ்வாறாயினும் காசாவில் 80 வீதத்துக்கும் அதிகமான பகுதி இஸ்ரேலின் வெளியேற்ற உத்தரவு மற்றும் பயணிப்பதற்கு தடை விதிக்கப்பட்ட பகுதிகளாக உள்ள நிலையில் அங்கு எந்த இடமும் பாதுகாப்பாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காசாவில் கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் இடைவிடாத தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 66 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்மூலம் காசாவில் இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39,324 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 90,830 பேர் காயமடைந்துள்ளனர்.

**பிராந்தியத்தில் போர் பதற்றம்**

காசா போரை ஒட்டி லெபனான் மற்றும் இஸ்ரேல் எல்லையில் கடந்த ஒக்டோபர் தொடக்கம் இடம்பெற்றுவரும் பரஸ்பர தாக்குதல்களில் இஸ்ரேல் தரப்பில் 21 படையினர் உட்பட 44 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு லெபனானில் குறைந்தது 543 பேர் பலியாகி இருப்பதாக போர் கண்காணிப்புக் குழு ஒன்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் கோலன் குன்றில் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தனது அமெரிக்க பயணத்தை சுருக்கிக் கொண்டு இஸ்ரேல் திரும்பியதோடு நேற்று தனது பாதுகாப்பு அமைச்சரவையை அவசரமாகக் கூட்டினார்.

'இந்தக் கொலைகார தாக்குதலுக்கு இஸ்ரேல் பதில் கூறாமல் விடாது. இதற்காக ஹிஸ்புல்லா இதற்கு முன்னர் கொடுக்காத பெரும் விலையை கொடுக்க வேண்டி இருக்கும்' என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். ஹிஸ்புல்லா சிவப்புக் கோட்டை தாண்டிவிட்டதாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில் லெபனானின் தெற்கு மற்றும் மற்ற பகுதிகளை இலக்கு வைத்து தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் நேற்றுக் கூறியது.

ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் அமைதிகாக்கும்படி வலியுறுத்தியுள்ளது. லெபனானுக்கான ஐ.நா. சிறப்பு ஒருங்கிணைப்பாளர் ஜீனைன் ஹெனிஸ் பிளாஸ்சேர்ட் மற்றும் லெபனானில் உள்ள ஐ.நா. இடைக்காலப் படை தலைவர் அரோல்டோ லாசாரோ ஆகியோர் கூட்டாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

'பரஸ்பர தாக்குதல்கள் பரந்த அளவில் மோதலை ஏற்படுத்தி நம்ப முடியாத பேரழிவை ஏற்படுத்தும் ஒட்டுமொத்த பிராந்தியத்தையும் பரந்த அளவில் மோதல் ஒன்றுக்குள் மூழ்கடித்துவிடும்' என்று அவர்கள் எச்சரித்துள்ளனர்.

காசா போர் ஏற்கனவே பிராந்தியத்தில் போர் பதற்றத்தை அதிகரித்திருக்கும் நிலையில் போர் நிறுத்த முயற்சியாக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. வின் தலைவர் வில்லியம் பர்ன்ஸ் நேற்று ரோம் நகரில் இஸ்ரேல் மற்றும் எகிப்து உளவுப் பிரிவு தலைவர்கள் மற்றும் கட்டார் பிரதமரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டுவர போர் நிறுத்த உடன்படிக்கை ஒன்றை ஹமாஸ் கோரும் அதேநேரம் ஹமாஸ் தோற்கடிக்கப்பட்டால் மாத்திரமே போர் முடிவுக்கு வரும் என்று நெதன்யாகு சூளுரைத்து வருகிறார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 29ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.